



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com






CHENNAI | Volume- 3 | Issue:289 | 04-05-2026 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

04.05.2026 சித்திரை 21
திங்கட்கிழமை

சூரிய உதயம் 5.56

திதி:
இன்று அதிகாலை 2.39 வரை துவிதியை பின்பு திரிதியை.

நட்சத்திரம்:
இன்று காலை 9.29 வரை அனுஷம் பின்பு கேட்டை

யோகம் :
இன்று இரவு 10.42 வரை பரிகம் பின்பு சிவம்.

கரணம்
இன்று அதிகாலை 2.39 வரை கரசை பின்பு மாலை 3.40 வரை வணிசை பின்பு பத்திரை.

யோகம் :
இன்று அதிகாலை 5.55 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று காலை 9.29 வரை அசுவினி பின்பு பரணி

நல்ல நேரம்
காலை 6.30 – 7.30.
மாலை 1.30 – 2.30.

இராகு காலம்
காலை 7.30 – 9.00.

எமகண்டம்
காலை 10.30 – 12.00

குளிகை
பிற்பகல் 1.30 – 3.00.

இன்று அக்னி நட்சத்திரம் ஆரம்பம்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# 5 மாநிலங்களில் இன்று வாக்கு எண்ணிக்கை

## வாக்கு எண்ணிக்கை காலை 8 மணிக்கு தொடங்குகிறது

**சென்னை, மே 4:**

சென்னை: தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெறுகிறது. தமிழகத்தில் பாதுகாப்புக்கு 1 லட்சம் போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 15-ம் தேதி வெளியிட்டது. அதன்படி, புதுச்சேரி, கேரளா, அசாமில் கடந்த ஏப்.9-ம் தேதியும், தமிழகத்தில் கடந்த ஏப்.23-ம் தேதியும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடந்தது. மேற்கு வங்கத்தில் ஏப்.23, 29 ஆகிய தேதிகளில் 2 கட்டமாக நடைபெற்றது. அங்கு 2-ம் கட்ட தேர்தலில் முறைகேடு புகார்கள் எழுந்ததால், 15 வாக்குச்சாவடிகளில் மறு வாக்குப்பதிவு நடத்தப்பட்டது.

இதேபோல, கோவா, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய 6 மாநிலங்களில் காலியாக உள்ள பேரவைத் தொகுதிகளுக்கு ஏப்.9, 23 ஆகிய தேதிகளில் இடைத் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொருத்தவரை, மொத்தம் 4,023 வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ளனர். 5.73 கோடி வாக்காளர்களில் 4.88 கோடி பேர் வாக்களித்தனர். இதன்மூலம் 85.10 சதவீத வாக்குப்பதிவு நடந்து, சாதனை படைக்கப்பட்டுள்ளது.



கடந்த 23-ம் தேதி மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடிந்ததும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் சீலிடப்பட்டு, தமிழகம் முழுவதும் வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ள 62 மையங்களில் பாதுகாப்பு அறைகளில் ('ஸ்டிராங் ரூம்') வைக்கப்பட்டுள்ளன. இங்கு 4 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்நிலையில், 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் இடைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளை காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக 5 மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடன் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் நேற்று இணைய வழியில் ஆலோசனை நடத்தினார்.

தமிழகத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் விளக்கினார். "தமிழகத்தில் 62 மையங்களில் 65 கம்பெனி துணை ராணுவப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். 18 ஆயிரம் போலீஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மாநிலம் முழுவதும் சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்க சுமார் 1 லட்சம் போலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தொகுதிக்கு ஒரு வாக்கு எண்ணிக்கை பார்வையாளர் என 234 பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்" என்று அவர் தெரிவித்தார். முழு அமைதி, பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தமிழகம் முழுவதும் நாளை மதுக்கடைகளை மூடவும் அவர் உத்தரவிட்டுள்ளார். தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் 62 மையங்களில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், குடிநீர், கழிவறை, ஒளி, ஒலி வசதிகள், மின் இணைப்பு தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் ஆய்வு செய்தனர்.

மேற்கு வங்கத்தில் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பாக, அமைதியாக, வெளிப்படையான சூழலில் நடைபெறுவதை உறுதி செய்ய 165 கூடுதல் வாக்கு எண்ணிக்கை பார்வையாளர்கள், 77 காவல் பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. தமிழகத்துக்கு அவ்வாறு நியமிக்கப்படவில்லை என தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

## 'விமான நிலையங்கள் பயன்பாட்டில் சென்னை முதலிடம்!



**சென்னை, மே 4:**

கடந்த நிதியாண்டில், தமிழகத்தில் அதிக பயணிகள் பயன்படுத்திய விமான நிலையங்களின் பட்டியலை இந்திய விமான நிலையங்கள் ஆணையம் அறிவித்துள்ளது.

இதன்படி, 2.30 கோடி பயணிகள் பயன்படுத்தியதாக சென்னை விமான நிலையம் முதலிடத்தில் உள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 2.7 சதவிகிதம் அதிகம். இரண்டாவது இடத்தில், 32.2 லட்சம் பயணிகளுடன் கோவை விமான நிலையம் உள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 5.2 சதவிகிதம் அதிகம். கோவை விமான நிலையத்தில் கடந்த நிதியாண்டில், 22,462 முறை விமானங்கள் வந்து சென்றுள்ளன.

கோவையில், கடந்த நிதியாண்டில் சர்வதேச பயணத்துக்காக 2.97 லட்சம் பேரும், 31.2 லட்சம் பேர் உள்நாட்டு பயணத்துக்காகவும் விமான நிலையத்தைப் பயன்படுத்தியுள்ளனர். மூன்றாவதாக, 22.2 லட்சம் பயணிகளுடன் திருச்சி விமான நிலையமும், நான்காவதாக 13.8 லட்சம் பயணிகளுடன் மதுரையும், 2.90 லட்சம் பயணிகளுடன் தூத்துக்குடியும், 1.27 லட்சம் பயணிகளுடன் சேலம் விமான நிலையமும் உள்ளன.

## '27 திட்டங்களை நடப்பாண்டு செயல்படுத்த இஸ்ரோ திட்டம்'

**புதுடெல்லி, மே 4:**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) இந்த நிதியாண்டுக்கான (2026-2027) ஆண்டு அறிக்கையை தற்போது வெளியிட்டு உள்ளது. அதில் செயல்படுத்துவதற்காக 27 விண்வெளி திட்டங்களை பட்டியலிட்டுள்ளது.

குறிப்பாக புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்கள் 3. தகவல் தொடர்புசெயற்கைக்கோள்கள் 2, வழிசெலுத்தல் செயற்கைக்கோள்கள் 2, தொழில்நுட்ப செயல்விளக்கி 3, பி.எஸ்.எல்.வி. 4, ஜி.எஸ்.எல்.வி. 3, எல்.வி.எம். 1, எஸ்.எஸ்.எல்.வி. 5 மற்றும் ககன்யான் 4 திட்டங்கள் நடப் பாண்டு செயல்படுத்த இஸ்ரோ திட்டமிட்டு உள்ளது.

மனிதனை விண்ணுக்கு அழைத்து செல்லும் ககன்யான் திட்டத்திற்காக விண்ணில் ஏவப்படும் முதல் ஆளில்லா ககன்யான் சோதனை ராக்கெட் பயணத்திற்கு இஸ்ரோ தயாராகி வருகிறது. இஸ்ரோவின் விண்வெளி திட்டங்களுக்கு இந்திய விண்வெளித்துறைக்குதற்போது




450 தொழிற்சாலைகளும், 130-க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் ஆதரவு அளித்து வருகின்றன. இஸ்ரோ கடந்த ஆண்டு விண்ணில் ஏவிய பி.எஸ்.எல்.வி. சி-62 ராக்கெட்டின் 3-வது கட்டத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு திட்டம் தோல்வி அடைந்தது. இதைத்தொடர்ந்து, இஸ்ரோ சற்று ஒரு பின்னடைவை சந்தித்ததாக கூறப்படுகிறது. இது கடந்த ஆண்டு மே மாதத்திற்கு பிறகு ஏற்பட்ட 2-வது தொடர்ச்சியான தோல்வியாகும். இந்த நிதியாண்டில், 2025-2026-ம் ஆண்டை விட இருமடங்கு திட்டங்களை அது பட்டியலிட்டு உள்ளது. ககன்யான் திட்டத்திற்கான பணிகளை இஸ்ரோ பட்டியலிட்டு உள்ளது. குறிப்பாக தரைவழி இணைப்பு சேனல்களை நிறுவுவதன் அவசியத்தை அது எடுத்துரைத்து உள்ளது. இந்திய கடற்படை நிலையம் மற்றும் ஸ்ரீஹரிகோட்டா பகுதி, பெங்களூருவில் உள்ள ககன்யான் திட்ட கட்டுப்பாட்டு மையம் மற்றும் ககன்யான் கட்டுப்பாட்டு வசதி ஆகியவற்றுக்கு இடையே தரைவழி இணைப்புகள் நிறுவப்பட்டு உள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் குறிப்பிட்டு உள்ளனர்.


ககன்யான் திட்ட கட்டுப்பாட்டு மையம், ககன்யான் கட்டுப்பாட்டு வசதி மற்றும் டெல்லியில் உள்ள குழு தொகுதி மீட்பு மையம் ஆகியவற்றுக்கு இடையேயான இணைப்பு நிறுவப்பட்டு சோதிக்கப்பட்டு உள்ளது. ஆட்கள் உள்ள மற்றும் ஆட்கள் இல்லாத திட்டங்களுக்கான தரை நிலைய ஆதரவுக்காக சுவீடன் விண்வெளி நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டு உள்ளது.

அதேபோல் ஆஸ்திரேலியாவின் கோகோஸ் (கீலிங்) தீவுகளில் ஒரு தரை நிலைய முனையத்தை நிறுவுவதற்காக செயல்படுத்தப்பட்ட உரிமப் பத்திரமும் கையெழுத்திடப்பட்டு உள்ளது. இஸ்ரோவும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையும், திருவனந்தபுரத்தில் உள்ள ஸ்ரீ சித்ரா திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்துடன் விண்வெளி மருத்துவத்தில் ஒத்துழைப்புக்கான ஒரு கட்டமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

## டில்லியில் ஏசி வெடித்து தீ விபத்து: 9 பேர் பலி!

**புதுடெல்லி, மே 4:**

தேசிய தலைநகர் டில்லியின் கிழக்குப் பகுதியான ஷாதாராவின் விவேக் விஹாரில் உள்ள நான்கு மாடி குடியிருப்பு கட்டடத்தில் நேரிட்ட தீ விபத்தில் ஒன்பது பேர் பரிதாபமாக பலியாகினர். மேலும், இந்தச் சம்பவத்தில் நான்கு பேர் காயமடைந்தனர். தீவிபத்து சம்பவம் குறித்த அதிகாலை 3.47 மணிக்கு தீயணைப்புத் துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது. தீ விபத்து குறித்த தகவல் கிடைத்ததை அடுத்து, சுமார் 14 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தன. இதுவரை பத்துக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர்.



## அக்னி நட்சத்திரம் இன்று தொடக்கம்: பொதுமக்களுக்கு எச்சரிக்கை

**சென்னை, மே 4:**

தமிழகத்தில் ஏற்கெனவே வெயில் வாட்டி வதைத்து வருகிறது. பகல் நேரங்களில் மக்கள் வெளியே நடமாட முடியாத அளவுக்கு வெப்பம் வாட்டி வதைத்து வருகிறது. இந்த நிலையில், அக்னி நட்சத்திரம் என்னும் கத்திரி வெயில் நாளை (4-ந்தேதி) தொடங்குகிறது. கோடை காலத்தின் உச்சபட்ச வெயில் தாக்கம் என்பது இந்த கால கட்டத்தில்தான் இருக்கும். வருகிற 28-ந்தேதி வரை அதாவது 24 நாட்கள் வெயில் கோர தாண்டவமாடும்.

இந்த ஆண்டு அக்னி காலத்தில் 110 டிகிரி வரை வெயில் கொளுத்தலாம் என்று வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. இந்த கால கட்டத்தில் 6



முறை வெப்ப அலைகள் ஏற்படவும் வாய்ப்பு இருப்பதாக கூறப்பட்டுள்ளது. எனவே இந்த கால கட்டத்தில் உஷாராக இருக்கும்படி பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளார்கள்.

அக்னி வெயிலில் காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வெயிலில் நடமாடுவதை தவிர்க்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது.

வெயிலின் உக்கிரமான தாக்கததால் 'ஹீட்ஸ்டிரோக்' (வெப்ப வாதம்) ஏற்படவும் வாய்ப்பு உண்டு. ஏற்கனவே கடந்த ஒன்றிரண்டு ஆண்டுகளாக நாடு முழுவதும் நூற்றுக்கணக்கானவர்கள் வெப்ப வாதத்தின் தாக்குதலுக்கு ஆளாகி இருக்கிறார்கள். பலர் இறந்தும் இருக்கிறார்கள்.

எனவே கவனமாக இருக்க வேண்டும். கண்டிப்பாக வெளியே செல்ல வேண்டியவர்கள் முன்னேற்பாட்டுடன் செல்ல வேண்டும். குடைபிடித்தபடி செல்வது, நிறைய தண்ணீர் குடிப்பது ஆகியவற்றை கடைபிடிக்க வேண்டும்.

கோடை வெயிலில் அலையும்போது உடலில் நீர் சத்து குறைய வாய்ப்பு உண்டு. எனவே நீர் சத்து குறையாதபடி தண்ணீர், இளநீர், தர்பூசணி, பழச்சாறுகளை அடிக்கடி குடிக்க வேண்டும் என்று மருத்துவர்கள் ஆலோசனை வழங்கி உள்ளார்கள். மேலும் காரமான உணவு வகைகளை தவிர்க்கும்படியும் கேட்டுக் கொண்டு உள்ளார்கள்.




## திருக்குறள் குறள்-609

குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்



ஒருவன் சோம்பலை ஆளுந் தன்மையை மாற்றிவிட்டால் அவனுடைய குடியிலும் ஆண்மையிலும் வந்தக் குற்றம் தீர்ந்து விடும்.

## சிந்திக்க ஒரு நொடி



கேட்டு பெறுவதல்ல வெற்றி கொடுத்து பெறுவதல்ல வெற்றி. போராடி பெறுவதே வெற்றி

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## காட்பாடி ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் தங்கக் கவசத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!



**வேலூர், மே 04:** வேலூர் மாவட்டம், காட்பாடி சித்தூர் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ளது ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் கோயில். இந்த கோயிலில் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக் கிழமை அன்று தங்கக் கவசத்தில் ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். அதேபோன்று மே மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையை முன்னிட்டு ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் தங்கக் கவச அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அத்துடன் வடை மாலை சாத்தியும், வெற்றிலை மாலை சாத்தியும் பக்தர்கள் ஸ்ரீபக்த ஆஞ்சநேயரை வழிபட்டனர்.

இதற்கு முன்னர் அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு ஸ்ரீபக்த ஆஞ்சநேயருக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடந்தன. இதையடுத்து மலர்களாலும், தங்கக் கவசத்தாலும் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இதையடுத்து பக்தர்கள் வடைமாலை சாத்தியும், வெற்றிலை மாலை, துளசி மாலை சாத்தியும் தொடர்ந்து வழிபட்ட வண்ணமாக இருந்தனர். தொடர்ந்து நாள் முழுவதும் தங்கக் கவசத்தில் பக்தர்களுக்கு ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் அருள் பாலித்து வந்தார். பூஜையில் திரளாக கலந்து கொண்டனர் பக்தர்கள்.

பூஜையில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டன. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்ரீரங்கம் ஸ்ரீகண்ணன் பட்டாச்சாரியார் வெகு விமரிசையாக செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் ஸ்ரீசுந்தரவரதராஜப் பெருமாளுக்கு விஷேச திருமஞ்சனம்..!



**வந்தவாசி, மே 04:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த நல்லூர் ஸ்ரீசுந்தரவரதராஜப் பெருமாள் கோவிலில் நேற்று மூல மூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு பால், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு புஷ்ப அலங்காரத்தில் மகா தீபாராதனை நடைபெற்றது. இந்த வைபவத்தில் கோவில் அர்ச்சகர் ராஜன் ஸ்வாமிகள், உபயதாரர் நல்லூர் நாராயணன் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

# சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் - 2026

பொதுமக்களை தீ விபத்து உள்ளிட்ட இடர்பாடுகளில் இருந்தும் ஆபத்திலிருந்தும் காப்பாற்றும் பணியில் தங்களை முழுமையாக அர்ப்பணித்து கொண்டிருக்கும் தீயணைப்பு வீரர்களை கௌரவிக்கும் விதமாகவும், பணியின் போது உயிர் இழந்த தீயணைப்பு வீரர்களுக்கு வீர அஞ்சலி செலுத்தும் விதமாகவும் ஆண்டுதோறும் மே மாதம் 4ம் தேதி சர்வதேச தீயணைப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் பிற உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்றுகிற வீரமும் ஈரமும் நிறைந்தது தீயணைப்பு வீரர்களின் பணி. மளமளவென பற்றிப் எரியும் நெருப்போ, சடசடவென சரிந்து விழும் கட்டடமோ, சுனாமியோ, பூகம்பமோ எதுவாக இருந்தாலும் அங்கே உதவிக்குத் தீயணைப்புத் துறையின் கரங்கள் நீளும்.



ஒரு விபத்து ஏற்பட்டதும், நமக்கேன் வம்பு என ஒதுங்கிக்கொள்ளாமல் 101 என்ற எண்ணைச் சுழற்றி சம்பவம் நடந்த இடத்தை தெளிவாக ஏதேனும் ஒரு அடையாளத்துடன் தெரிவிக்க வேண்டும். அந்த அழைப்பு கட்டுப்பாட்டு அறையில் இருந்து சம்பவம் நடக்கும் இடத்தின் அருகில் உள்ள தீயணைப்பு நிலையத்துக்குத் தெரிவிக்கப்படும்.

தீ விபத்து குறித்த தகவல் வந்த 20 வினாடிகளுக்குள் தீயணைப்புப் படையினர் அதற்குத் தகுந்த கருவிகள் பொருத்திய வண்டியுடன் புறப்படுவார்கள். சம்பவம் நடந்த இடத்தை அடைந்ததும் மின்னல் வேகத்தில் செயலாற்றுவார்கள். தங்கள் உயிரைத் துச்சமாக மதித்து மீட்புப்பணியில் களமிறங்கும் தீயணைப்பு வீரர்களுக்கு உதவும் வகையில் மிகுந்த சக்தி வாய்ந்த சில அதிநவீன உபகரணங்கள் தற்போது உள்ளன.




ஒரு தீயணைப்பு வீரரின் பணி மிக கடினமான, துணிச்சலான அதே சமயம் சவால் நிறைந்த பணி. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின்போது தெரிந்தும் தெரியாததுமான ஆபத்துகளைத் தாங்கிப் பணிபுரியும் வீரர்களின் உடல்நிலை, மன நிலை பாதிக்கக்கூடும். இத்தனை ஆபத்துக்களையும் தாண்டி சக உயிர்களைக் காப்பதொன்றே கடமையாகக் கொண்டிருக்கிறார்கள் தீயணைப்பு வீரர்கள். போர்க்களத்தில் எதிரிகளோடு போரிடும் வீரர்களுக்குச் சற்றும் சளைத்ததல்ல இவர்கள் பணி.

தீயணைப்பு வீரர்களது மீட்புப் பணிக்கு நாமும் ஒரு சல்யூட் அடிக்க வேண்டிய நாளிது.

**தொகுப்பு: பா. சீனிவாசன், வந்தவாசி.**

## காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமையை முன்னிட்டு மஞ்சள் பட்டு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!



**வேலூர், மே 04:** வேலூர் மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான்பட்டறையில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார்.

இந்த ஸ்ரீ ராகவேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை, ஸ்ரீ சத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது. இதனை ஸ்ரீ க. மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஞாயிற்றுக்கிழமையை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது. இதைத் தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது.

ஸ்ரீ ராகவேந்திரர் மஞ்சள் பட்டு உடையில் மங்களகரமாக பக்தர்களுக்கு அருள் பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ ராகவேந்திரரை தரிசனம் செய்தனர். இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர். இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.

## தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்க சீர்காழி வட்ட கிளையின் செயற்குழு கூட்டம்

**சீர்காழி, மே, 04:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்க சீர்காழி வட்ட கிளையின் மாதாந்திர செயற்குழு கூட்டம் தென்பாதி இந்தியன் வங்கி பின்புறம் உள்ள சங்க அலுவலகத்தில் நடைப்பெற்றது. கூட்டத்தில் தலைவர் ஜெயச்சந்திரன், பொருளாளர் சிவ.அன்பழகன், துணை தலைவர்கள் ரெத்தினசபாபதி, மணிவண்ணன், வைத்தியநாத சாமி, துணை செயலாளர் ராமலிங்கம் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். செயலாளராக பணியாற்றிய சாம்சன் கில்பர்ட் பதவியில் இருந்து விலக்கி வைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



சங்கத்தில் புதிதாக உறுப்பினர்கள் சேர்ந்தனர். புதிய உறுப்பினர்களுக்கு சால்வை அணிவிக்கப்பட்டது.

மே மாதம் பிறந்த சங்க உறுப்பினர்களுக்கு பிறந்த நாள் பரிசு வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது. சங்க ஆண்டு விழா மற்றும் சங்க அலுவலகத்தில் முதல் தளத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கூட்ட அரங்கத்திற்கு நன்கொடை அளித்தவர்கள், சண்முக சுந்தரம், செந்தாமரைக் கண்ணன், ஏ.சி. மெஷின் அளித்தவர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு விருந்து அளிக்கப்பட்டது. தங்க சேகர் நன்றி கூறினார்.

## BSNL ஓய்வூதியர் சங்கத்தின் திருவண்ணாமலை கிளை மாநாடு



திருவண்ணாமலையில் அகில இந்திய BSNL ஓய்வூதியர் சங்கத்தின் திருவண்ணாமலை கிளை மாநாடு நேற்று (3.5.26) காலை 10.30 மணிக்கு நடைபெற்றது இதில் தமிழ்நாடு அரசு அனைத்துதுறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர P.கிருஷ்ணமூர்த்தி மாநாட்டை வாழ்த்தி பேசினார். மாவட்ட இனண செயலாளர் தோழர் R.ராஜகோபால் மற்றும் வட்ட செயலாளர் தோழர் மா.மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீ அனுமந்த வாகன புறப்பாடு



**தஞ்சாவூர், மே04:** தஞ்சாவூர் மகர் நோம்புச் சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீஅலமேலு மங்கா ஸமேத ஸ்ரீப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் சித்திரை திருவிழாவில் ஆறாவது திருவிவான நேற்று (01.05.2026) காலை பௌர்ணமி திருமஞ்சனம், மாலை 7 மணியளவில் சுவாமி அனுமந்த வாகனத்தில் எழுந்தருளி நம் ஸௌராட்ஷ்ட்ர சமூக வீதிகளில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

திருவிழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், ஸ்ரீ அனுமந்த வாகன புறப்பாடு குழு மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

செய்தி: T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

## மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோவிலில் சிரிப்பு யோகா



**ஈரோடு, மே 04:** ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் துய்யம்பூந்துறைக் கிராமம் செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோவிலில் அறக்கட்டளை தலைவர் திரு V.பொன்னுசாமி அவர்கள் தலைமையில் திருப்பூர் மாவட்ட கூடுதல் நீதிபதி திரு D.பாலு அவர்கள் முன்னிலையில் சிரிப்பு யோகி திரு பவானி கோபால் அவர்களின் உடலுக்கும் மனதுக்கும் உற்சாகமும் புத்துணர்வும் தரக்கூடிய மிக அற்புதமான சிரிப்பு யோகா 02.05.2026 சனிக்கிழமை காலை 10.30மணி முதல் மதியம் 1.00மணி வரை நடைபெற்றது. இந்த நிகழ்வில் சுமார் 135 அன்பர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.

அறக்கட்டளை செயலாளர் திரு S.கிருஷ்ணன் அவர்கள் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது. அறக்கட்டளை பொருளாளர் C.மனோகரன், V.S.பூசப்பன், M.மணி, பேராசிரியர் R.பாலமுருகன், பேராசிரியர் K.பூமலர் ஆகியோர் விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்து இருந்தனர். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. விழாவுக்கு வந்திருந்த அன்பர்கள் அனைவரும் மன மகிழ்வுடன், திருப்தியுடன் காணப்பட்டனர். நன்றி! வணக்கம்!

வாழ்க வளமுடன்

## கோவில்பட்டியில் இலக்கிய சாரல் சார்பாக "இது எங்கள் பூமி" புதிய விவசாய கதை புத்தகம் வெளியீடு

**கோவில்பட்டி, மே 04:** கோவில்பட்டி இலக்கியச் சாரல் சார்பாக கோவில்பட்டி எழுத்தாளர் கோ.சுரேஷ்குமார் எழுதிய “இது எங்கள் பூமி” என்ற விவசாயம் தொடர்பான 27 கதைகள் கொண்ட புதிய புத்தகம் வெளியீடு விஸ்வாஸ் மற்றும் சிவதாம் கல்வி அறக்கட்டளை யோகா தியான கூட்ட அரங்கில் நடந்தது.

மேனாள் தலைமை ஆசிரியர் நல்லாசியர் ப. ஜான்கனேஷ் தலைமை தாங்கினார். ஞான ஒளி மலர் மேனாள் தலைமை ஆசிரியை இந்திராணி, முனைவர் முருக சரஸ்வதி, கவிஞர் இரா. சிவானந்தம், எழுத்தாளர் போத்தி ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



த.மு.எ.ச செயற்குழு உறுப்பினர் பெ.ஜெகநாதன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முதல் புத்தகத்தை வெளியிட்டார்.

தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேனாள் மேலாளர் பா.சங்கர், தமிழாசிரியை இராதா, கிராம நிர்வாக அலுவலர் முருகானந்தம் ஆகியோர் முதல் புத்தகங்களை பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து வரகவி நல்லாசிரியர் மா. முருகேசன், பேராசிரியை செல்வம், மேனாள் களத்து மேடு மாத இதழ் ஆசிரியர் தமிழ் தம்பி, மேனாள் தபால் துறை ஊழியர் தவமணி, யூ.பி. எம்.எஸ். பள்ளி ஆசிரியர் சந்தன மாரியப்பன், பஞ்., யூனியன் பள்ளி தலைமை ஆசிரியை பேச்சியம்மாள், இலுப்பையூரணி தமிழ் பாப்பிஸ்டு பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்ரீதர், பிரமுகர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி பேசினார்கள். முடிவில் எழுத்தாளர் கோ.சுரேஷ்குமார் ஏற்புரை வழங்கி நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் பல்வேறு திறன் ஆற்றல் கொண்ட இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் கல்லூரி மாணவர், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் கோடை வெயில் தாக்கம் குறைய பப்பாளி மற்றும் தர்பூசணி பழவகை இயற்கை பானம் வழங்கப்பட்டது.

# மாணவர்களுக்கு வழிகாட்ட 'ஹெல்ப் டெஸ்க்' தொடக்கம்



**சென்னை, மே 4:**

12 ஆம் வகுப்பு முடித்து கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு வழிகாட்டி உதவும் நோக்கில் திமுக மாணவர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள 'ஹெல்ப் டெஸ்க்' சேவையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தொடங்கி வைத்தார். விண்ணப்பம் நிரப்பு தல், கல்லூரி தேர்வு மற்றும் உயர் கல்வி ஆலோ சனைகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு வழிகாட்டல்களை மாண வர்களுக்கு எளிதாக கொண்டு சேர்க்கும் நோக்கில் இந்த சேவை செயல்படும். 'நான் முதல்வன்', 'தமிழ் புதல்வன்' உள்ளிட்ட அரசு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வையும் இதன் மூலம் மாணவர்களிடம் கொண்டு சேர்க்க திட்ட மிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் 500 மாணவர்கள் இந்தப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். கட்சிப் பாரபட்சமின்றி அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டம் செயல் படுத்தப்படும் என திமுக மாணவரணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார் தெரிவித்தார்.

# ரூ.59 லட்சம் இணைய வழி மோசடி கும்பலுக்கு வங்கி கணக்கு விற்பனை

**சென்னை, மே 4:**

அம்பத்தூர் அடுத்த திருவேற்காடு பகுதியைச் சேர்ந்தவர் கார்த்திகேயன் (38). கடந்த ஜனவரி மாதம் கார்த்திகேயன் வாட்ஸ்அப் எண்ணிற்கு பங்குச் சந்தையில் முதலீடு செய்தால் இரட்டிப்பு லாபம் கிடைக்கும் என குறுஞ்செய்தி வந்துள்ளது. மேலும் அதில் குறிப்பிட்ட வங்கி கணக்கிற்கு முதலீடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை நம்பிய கார்த்திகேயன் கொஞ்சம் கொஞ்சமாக ரூ.59 லட்சம் வரை வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியுள்ளார். அதன் பிறகு, அவருக்கு இரட்டிப்பு லாபம் வரவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த கார்த்திகேயன் இதுகுறித்து ஆவடி மத்திய குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினர். அதில் திருவள்ளூர் பகுதியைச் சேர்ந்த தனியார் வங்கி மேலாளர் விஜயகார்த்திக் (26), திருவண்ணாமலை பகுதியைச் சேர்ந்த மோனிஷ்ராஜ் (26) ஆகியோர் தரகுத் தொகை பெற்றுக் கொண்டு, தங்களது வங்கி கணக்குகளை இணையவழி மோசடி நபர்களுக்கு வழங்கியிருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து காவல்துறையினர் விஜயகார்த்திக், மோனிஷ்ராஜ் இருவரையும் கைது செய்தனர்.

# பைக் மீது லாரி மோதி 3 பேர் பலி

**சென்னை, மே 4:**

கொடுங்கையூர், வரலட்சுமி நகரை சேர்ந்தவர் கார்த்திகேயன் (40). இவர் ஓட்டுநராக வேலை செய்து வந்தார். அவரது மனைவி பிரேமலதா (36). இவர்களது மகன் இன்பச் செல்வன் (8). இவர்கள் அம்பத்தூர் பகுதியில் வசித்து வந்தனர். இந்நிலையில் வெள்ளிக்கிழமை மணலியில் உள்ள பிரேமலதாவின் உறவினர் வீட்டில் நடைபெற்ற சுப நிகழ்ச்சிக்கு சென்று விட்டு தனது வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் கணவன், மனைவி மற்றும் மகன் ஆகியோர் மோட்டார் சைக்கிளில் இரவு 10 மணி அளவில் வந்து கொண்டிருந்தனர். மாதவரம் ரவுண்டானா பேருந்து நிலையம் அருகே வந்து கொண்டிருக்கும் போது, கர்நாடகா மாநில பதிவு எண் கொண்ட கண்டெய்னர் லாரி ஒன்று எதிர்பாராத வித மாக இவர்கள் மோட்டர் சைக்கிள் மீது மோதியது. இதில் 3 பேரும் சம்பவ இடத்திலேயே பலியா னார்கள். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மாதவரம் போக்குவரத்து காவல் துறையினர் இறந்த வர்களின் உடலை கைப்பற்றி பிரேத பரி சோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து வழக்கு பதிவு செய்து விபத்துக்கு காரண மான கண்டெய்னர் லாரி ஓட்டுநர் காஞ்சிபுரத்தை சேர்ந்த அன்பரசு (44) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் போலீஸார் பாதுகாப்பு

**சென்னை, மே 4:**

தமிழகத்தில் திங்கள்கிழமை (மே 4) வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ள முன்னிட்டு, தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் போலீஸாா பாதுகாப்புப் பணியில் ஈடுபடவுள்ளனா.

தமிழக சட்டப்பேரவைத் தோதல் கடந்த ஏப்.23-ஆம் தேதி நடைபெற்றது. மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனா. தமிழகம் முழுவதும் உள்ள 62 மையங்களில் வாக்கு எண்ணிக்கை திங்கள்கிழமை (மே 4) நடைபெறவுள்ளது. இந்த மையங்களில் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. முதல் அடுக்கில் துணை ராணுவத்தினரும், இரண்டாம் அடுக்கில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரும், மூன்றாம் அடுக்கில் ஆயுதப் படையினரும், நான்காவது அடுக்கில் உள்ளூா போலீஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனா. வாக்கு எண்ணும் மையங்களில் தற்போது 10,000 போலீஸாா் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனா்.

வாக்கு எண்ணிக்கை நடைபெறும்போது மட்டும் சுமாா 40,000 போலீஸாா பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவாா்கள்.

மேலும், திமுக, அதிமுக, தவெக, நாதக உள்ளிட்ட முக்கிய கட்சி வேட்பாளா்களின் அலுவலகங்கள், வீடுகள், கட்சித் தலைமை அலுவலகங்கள் 60,000 போலீஸாா பாதுகாப்பிலும் ரோந்துப் பணியிலும் ஈடுபட உள்ளனா். அதன்படி தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் போலீஸாா பாதுகாப்புப் பணியில் ஈடுபட உள்ளனா். இதற்கான பணிகளை காவல் துறை தலைவா் சந்தீப்ராய் ரத்தோா கண்காணித்து வருகிறாா்.

சென்னையில் 22,000 போலீஸாா்.. சென்னை பெருநகர காவல் எல்லைக்குள்பட்ட 16 சட்டப்பேரவை



தொகுதிகளில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் ராணிமேரி கல்லூரி, லயோலா கல்லூரி, அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய 3 வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

இதைத் தொடா்ந்து, சென்னை மாநகர காவல் ஆணையா் அபின் தினேஷ் மோதக் உத்தரவின் பேரில் திங்கள்கிழமை (மே 4) சென்னை மாநகா் முழுவதும் கூடுதல் ஆணையா்கள், இணை ஆணையா்கள், துணை ஆணையா்கள், உதவி ஆணையா்கள், காவல் ஆய்வாளா்கள், சிறப்பு காவல் படை, ஆயுதப்படை, மத்திய ஆயுதப்படை பிரிவைச்சோ்ந்த காவலா்கள் என மொத்தம் 22,000 போலீஸாா பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனா்.

வாக்கு எண்ணும் மையங்களில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்

- தோ்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டை இல்லாமல் யாரும் வாக்கு எண்ணும் மையத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டாா்கள். ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையத்தின் நுழைவு வாயிலிலும் உயரதிகாரிகள் பணியில் இருப்பாா்கள்.

- ஊடகத்தினா், கேமராக்கள் அல்லது விடியோ கேமராக்களை வாக்கு எண்ணும் மையத்துக்குள் கொண்டு செல்லக் கூடாது. இருப்பினும், தோ்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அங்கீகார அட்டைகளைக் கொண்ட ஊடகத்தினா் கையடக்கப் புகைப்பட கேமராக்கள், விடியோ கேமராக்களுடன் வாக்கு எண்ணும் மையங்களில் குறிப்பிட்ட எல்லை வரை அனுமதிக்கப்படுவா்.

- தோ்தல் பாா்வையாளரைத் தவிர வேறு யாரும் வாக்கு எண்ணும் அரங்குக்குள் கைப்பேசி கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாா்கள்.

- கூா்மையான பொருள்கள், தீக்குச்சிகள், கம்பிகள், லைட்டா்கள், வெடிபொருள்கள், எளிதில் தீப்பற்றக்கூடிய பொருள்கள், பிற மின்னணு சாதனங்கள் கொண்டு வர அனுமதியில்லை.

- தனிநபா்கள், உள் மற்றும் வெளிப் பாதுகாப்பு வளையத்துக்கு இடைப்பட்ட பகுதியில் குடிநீா அருந்த வாக்கு எண்ணும் மையத்திலிருந்து வெளியே வர அனுமதிக்கப்படுவாா்கள். மீண்டும் உள்ளே நுழையும்போது முழுமையாகச் சோதனையிடப்படுவாா்கள். முகவா்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறியவுடன், அவா்கள் மீண்டும் உள்ளே நுழைய அனுமதிக்கப்பட மாட்டாா்கள்.

- மதுபோதையில் யாரும் வாக்கு எண்ணும் மைய வளாகத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டாா்கள்.

# தரமான ஓஆர்எஸ் கரைசல்களையே விற்பனை செய்ய வேண்டும்: மருந்து கடைகளுக்கு அறிவுறுத்தல்

**சென்னை, மே 4:**

அங்கீகரிக்கப்பட்ட தரமான ஓஆர்எஸ் கரைசல்களையே விற்பனை செய்ய வேண்டும் என மருந்து கடைகளுக்கு உணவு பாதுகாப்புத் துறை அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

தமிழகத்தில் கோடை வெயில் உச்சத்தை எட்டியுள்ளது. கடும் வெப்பத்தால் மக்கள் அவதிப் படுகின்றனர். வெயிலின் தாக்கத்தால் ஏற்படும் உடல் நீர்ச்சத்து இழப்பை சமன் செய்ய அனைத்து வயதினரும் பரிந்துரைக்கப்பட்ட அளவில் ஓஆர் எஸ் கரைசல்களை பரவலாக எடுத்துக்கொள்ள மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதன்மூலம் கோடை கால பாதிப்புகளில் இருந்து தங்களை தற்காத்துக் கொள்ளலாம். பொது மக்களுக்கு தரமான ஓஆர்எஸ் கரைசல்களை விற்பனை செய்வது தொடர்பாக மருந்துக் கடைகள் உரிமையாளர்களுக்கு தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டு வாரியம்




மற்றும் உணவு பாதுகாப்புத் துறை வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியுள்ளது. அதன்படி, வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தி போன்ற பாதிப்புகளால் நீர்ச்சத்து இழப்பு ஏற்படும்போது, உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தரமான ஓஆர்எஸ் கரைசல்களை மட்டுமே மருந்துக் கடை உரிமையாளர்கள் விற்பனை செய்ய வேண்டும். குறிப்பாக, ஓஆர்எஸ் தயாரிப்புகளின் பேக்கிங்கில் தயாரிப்பு தேதி, காலாவதி தேதி மற்றும் பேட்ச் எண் ஆகியவை கட்டாயம் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். அதேபோல், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஓஆர்எஸ் எல், ஓஆர்எஸ்எல் பிளஸ் மற்றும் ஓஆர்எஸ் ஃபிட் போன்ற பெயர்களில் கிடைக்கும் பானங்கள், பழச்சாறு அடிப்படையில் தயாரிக்கப்படுபவை என்பதை விற்பனையாளர்கள் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

இதுதவிர, உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்றதாக போலியாக கூறி தரமற்ற கரைசல்களை விற்பனை செய்யும் மருந்துக் கடைகள் மற்றும் அதன் உரிமையாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு எச்சரித்துள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# பண்ருட்டி அருகே சாலை விபத்து இரண்டு பெண்கள் உயிரிழப்பு

**கடலூர், மே 4:**

பண்ருட்டி அருகே இருசக்கர வாகனத்தில் சென்றவர்கள் மீது மீது கார் மோதிய விபத்தில், சம்பவ இடத்திலேயே இரு பெண்கள் உயிரிழந்தனர். கடலூர் மாவட்டம் பண்ருட்டி அடுத்துள்ள ஒறையூர் கிராமத்தைச் சேர்ந்த இரு பெண்கள் உள்பட மூன்று பேர் இருசக்கர வாகனத்தில் முந்திரி கொட்டை பறிக்கும் வேலைக்கு சென்றனர். கீழகொல்லை சாலையை கடக்கும்போது பண்ருட்டியில் இருந்து வடலூர் நோக்கி சென்ற கார் மோதி விபத்து ஏற்பட்டது. இதில் மல்லிகா (வயது 28), ரஞ்சிதா (வயது 25) ஆகிய இரு பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்த அருள் என்பவர் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். இந்த விபத்து காரணமாக பண்ருட்டி நெய்வேலி சாலையில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இப்பகுதியில் தொடர்ந்து விபத்து ஏற்படுவதால் மேம்பாலம் அமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இந்த விபத்து தொடர்பாக முத்தாண்டிகுப்பம் காவல்துறையினர் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர். ஒரே கிராமத்தை சேர்ந்த இரண்டு பெண்கள் விபத்தில் உயிரிழந்த சம்பவம் மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# புதுவை ரவுடி வெட்டிக்கொலை

**கடலூர், மே 4:**

புதுச்சேரியைச் சேர்ந்த ரவுடியை கடலூர் அருகே கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. புதுவை மாநிலம் கிருமாம்பாக்கம் பகுதியை சேர்ந்தவர் புகழேந்தி (வயது 28). ரவுடியான இவர் கட்டப்பஞ்சாயத்து செய்வது உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார். இவர் மீது புதுவை மற்றும் தமிழக பகுதிகளில் 4 கொலை வழக்கு உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் உள்ளது. இதன் காரணமாக இவர் மீது புதுவை மாநில ரவுடி கோஷ்டிகளுக்கு இடையே முன் விரோதம் இருந்துள்ளது. இந்நிலையில் மே 1 அன்று தாடி நத்தம் வயல்வெளியில் உடல் சிதைந்த நிலையில் கிடந்தது. இதனையறிந்த தூக்கணம்பாக்கம் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, 50க்கும் மேற்பட்ட இடங்களில் வெட்டப்பட்டு உடல் சிதைந்து, முகம் மட்டும் அடையாளம் காணும் அளவிற்கு இருந்தது. இதனை தொடர்ந்து கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டார். புகழேந்தியை அழைத்து வந்த ரவுடி கும்பல் அங்கு அவரை கொடூரமாக கொலை செய்து விட்டு தப்பியது தெரிய வந்தது. இதனை தொடர்ந்து காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ரவுடி புகழேந்தி கொல்லப்பட்டதற்கு ரவுடிகளுக்கிடையான முன் விரோதம் காரணமா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்று போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்தச்சம்பவம் அந்தப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. குற்றவாளிகளை கண்டுபிடிக்க 3 தனிப்படைகளை அமைத்து மாவட்ட

# 2,882 கிலோ குட்கா பறிமுதல்



**சென்னை, மே 4:**

ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்கு வேன்களில் குட்கா கடத்தி வரப்படுவதாகக் கிடைத்த ரகசியத் தகவலின் பேரில், நசரத்பேட்டை காவல்துறையினர் வண்டலூர் - மீஞ்சூர் வெளிவட்டச் சாலையில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அதிவேகமாக வந்த இரண்டு வேன்களை மடக்கிச் சோதனை செய்ததில், சுமார் 2,882 கிலோ தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக தூத்துக்குடியைச் சேர்ந்த கோபால், சென்னையைச் சேர்ந்த முத்துராஜ் மற்றும் தென்காசியைச் சேர்ந்த ராமச்சந்திரன் ஆகிய மூன்று இளைஞர்களைக் காவல்துறையினர் கைது செய்தனர். விசாரணையில், இவர்கள் ஆந்திராவிலிருந்து செங்கல்பட்டிற்கு விற்பனைக்காகக் குட்காவைக் கடத்திச் சென்றது உறுதியானது. கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களுடன் குட்கா மூட்டைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

# திருவள்ளூர்: பறக்கும் படை பறிமுதல் செய்த பொருட்களில் உரிய ஆவணம் கொடுத்தவர்களிடம் ரூ.17 கோடி ஒப்படைப்பு

**திருவள்ளூர், மே 4:**

பறக்கும் படையால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களில் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தவர்களிடம் ரூ.16.94 கோடி பணம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான பிரதாப் வெளியிடப்பட்ட அறிக்கை: தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான அட்டவணை கடந்த மார்ச் 15ம் தேதி வெளியிடப்பட்டதை தொடர்ந்து, அன்று முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டன.

திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்துக்கு உட்பட்ட 10 பேரவைத் தொகுதிகளில்,




தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்தபோது, உரிய ஆவணங்களின்றி மற்றும் சந்தேகத்துக்கு இடமான வகையில் எடுத்து செல்லப்படும் பணம், மதிப்புமிக்கப் பொருட்கள் ஆகியவற்றை கண்காணிக்கும் பொருட்டு திருவள்ளூர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான பிரதாப் தேர்தல் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு ஆகியவற்றை நியமித்தார்.

திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்துக்கு உட்பட்ட 10 தொகுதிகளில், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்தபோது, தேர்தல் பறக்கும் படைகள், நிலையான கண்காணிப்புக் குழுக்கள் உள்ளிட்ட பிற துறைகளால், உரிய ஆவணங்களின்றி, சந்தேகத்துக்கு இடமான வகையில் எடுத்து செல்லப்பட்ட ரூ.17,70,30,547 ரொக்கம், ரூ.73,58,28,713 மதிப்புமிக்க பொருட்கள், ரூ.15,81,38,293 மதிப் புள்ள இதர வகையிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் மதிப்புமிக்கப் பொருட்கள் உள்ளிட்டவற்றுக்கு, சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் உரிய ஆவணங்களுடன் மேல்முறையீடு செய்து திரும்ப பெற்றுக் கொள்ள ஏதுவாக, திருவள்ளூர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரால் அமைக்கப் பட்டிருந்த மாவட்ட குறைதீர் குழு மற்றும் மாவட்ட வருமானவரித் துறை, மாநில சரக்கு மற்றும் சேவை வரித்துறை உள்ளிட்ட பிற துறைகளால், 254 மனுக்கள், பரிசீலனை செய்யப்பட்டு, உரிய ஆதாரங்கள் சமர்பிக்கப்பட்ட இனங்களுக்கு. ரூ.16,94,79,342 ரொக்கம், ரூ.73.09,93,756 மதிப்புமிக்கப் பொருட்கள். ரூ.64.39.113 மதிப்புள்ள இதர வகையிலான பொருட்கள் விடுவிப்பு செய்யப்பட்டுள்ளன.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கக் கோரி 5 மனுக்கள் பரிசீலனையிலும், உரிய ஆவணங்கள் சமர்பிக்காத 14 கைப்பற்றுகை தொடர்பாக சம்பந்தப்பட்ட பேரவைத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்களால் வழக்குப் பதிவுகளும் செய்யப்பட்டுள்ளன.

## திருச்செந்தூர் முருகன் கோவிலில் குவிந்த பக்தர்கள்: 4 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம்

திருச்செந்தூர், மே 4:

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்கின்றனர்.

ஆன்மிகரீதியாக குரு தலமாகவும், செவ்வாய் தலமாகவும் போற்றப்படுவதால் கோவிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்போது பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ளது. இதனால் திருச்செந்தூர் கோவிலுக்கு வரும் பக்தர்களின் கூட்டம் மேலும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் விடுமுறை தினமான இன்று கோவிலில் அதிகாலை 4 மணிக்கு நடை திறக்கப்பட்டு, விஸ்வரூப தீபாராதனை, உதயமார்த்தாண்ட அபிஷேகம், தீபாராதனை நடந்தது. தொடர்ந்து மற்ற கால பூஜைகள் வழக்கம்போல் நடைபெற்றன. கோடை விடுமுறை மற்றும் வார விடுமுறையான இன்று கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

பக்தர்கள் அதிகாலை முதலே கடற்கரை மற்றும் நாழிக்கிணறில் புனித நீராடி இலவச தரிசனம், ரூ.100 கட்டண தரிசனத்தில் நின்று சாமி தரிசனம் செய்து வருகின்றனர். சாமி தரிசனம் செய்ய சுமார் 4 மணி நேரம் ஆகிறது என பக்தர்கள் தெரிவித்துள்ளனர். பக்தர்கள் குவிந்ததால் கோவில் வாகன நிறுத்துமிடங்களிலும், திருச்செந்தூர்-தூத்துக்குடி, நெல்லை சாலையோரங்களிலும் ஏராளமான வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

## குற்றாலம் செண்பகாதேவி அம்மன் கோவிலில் தீர்த்தவாரி

தென்காசி, மே 4:


தென்காசி மாவட்டம், குற்றாலம் மெயின் அருவிக்கு மேல் பகுதியில் சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் அடர்ந்த வனப்பகுதியில் உள்ள ஸ்ரீ செண்பகாதேவி அம்மன் கோவிலில் வருடம் தோறும் சித்ரா பௌர்ணமி தினத்தன்று திருவிழாவானது வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம்.

அந்த வகையில், நேற்று முன்தினம் சித்ரா பௌர்ணமி திருவிழாவானது வெகு விரிசையாக தொடங்கி நடைபெற்ற நிலையில், நேற்று அம்மனுக்கு தீர்த்தவாரி நடைபெற்றது. கோவிலுக்குப் பின்புறம் உள்ள செண்பகாதேவி அருவியில் மஞ்சள் துண்டுகளைக் கரைத்து, மஞ்சளாக கொட்டும் அருவி நீரில் அம்மனுக்கு தீர்த்தவாரி நிகழ்ச்சி பாரம்பரியமாக நடைபெறுவது வழக்கம். ஆனால், இந்த வருடம் வனத்துறையினரின் கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக பல நூற்றாண்டு காலமாக நடைபெற்று வந்த பாரம்பரிய முறை மாற்றப்பட்டு மஞ்சள் தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெறாமல், அருவிக்கு அருகாமையில் உள்ள மண்டபத்தில் வைத்து அருவி புனித நீரை எடுத்து வந்து அம்மனுக்கு அபிஷேகங்கள் மட்டுமே நடைபெற்றன.

# மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்: இன்று 400 பரிவார தெய்வங்களுக்கு பாலாலயம்

மதுரை, மே 4:

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் உலக புகழ் பெற்றது. கடந்த 2018-ம் ஆண்டு நடந்த தீ விபத்தில் கோவிலின் வீரவசந்தராயர் மண்டபம் சேதமடைந்தது. அதனை சீரமைக்க அரசு நிதி ஒதுக்கி அந்த பணிகள் தாமதமாகி கொண்டிருந்தது. மேலும் கோவில் கும்பாபிஷேகத்தை நடத்தவும் நிர்வாகம் முடிவு செய்தது. ஆனால் வீரவசந்தராயர் மண்டப பணிகளை முடிக்காமல் கும்பாபிஷேகத்தை நடத்த கூடாது என்று பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். எனவே மண்டப பணிகளை விரைந்து முடிக்க அரசு உத்தரவிட்டது.



அதன்படி தற்போது மண்டபத்தில் உள்ள 73 தூண்கள் பொருத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 6 தூண்கள் பொருத்தும் பணி இந்த மாத இறுதியில் நிறைவு பெறும். இதன் மூலம் மண்டப பணிகள் நிறைவடையும் தருவாயில் இருப்பதால் மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் செப்டம்பர் மாதம் 17-ந்தேதி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மேலும் கும்பாபிஷேகத்தை யொட்டி கோபுரத்தில் வர்ணம் பூசும் பணி மற்றும் வெளிபுரத்தில் உள்ள பணிகள் அனைத்தும் நிறைவுப்பெற்றது. எனவே கோவிலில் உள்ள உப சன்னதியில் சீரமைப்பு பணிகளை தொடங்க கோவில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அதன்படி மீனாட்சி அம்மன் சன்னதி, சுந்தரேசுவரர் சன்னதியை தவிர கோவிலில் உள்ள சுமார் 400-க்கும் மேற்பட்ட பரிவாரதெய்வங்களுக்கான பாலாலய பூஜை நாளை (திங்கட்கிழமை) நடக்கிறது.

இதில் நடராஜர், துர்க்கை, லட்சுமி உள்ளிட்ட 400-க்கும் மேற்பட்ட பரிவாரதெய்வங்களை சித்திரமாக வரைந்து, அதில் அந்த தெய்வங்களை உருவேற்றுவார்கள். அதன்பின்னர் பரிவார தெய்வங்கள் உள்ள சன்னதிகளில் சீரமைப்பு பணிகள் தொடங்கப்படும். பாலாலய பூஜைக்கான யாகசாலை பூஜைகள் ஸ்தானிக பட்டர்கள் ஹலாஸ், செந்தில் பட்டர் தலைமையில் நேற்று தொடங்கியது.

இந்நிலையில் நாளை காலை 9 மணிக்கு மேல் யாகசாலையில் பூஜிக்கப்பட்ட கலசங்கள் புறப்பாடு நடந்து, 9.30 மணிக்கு பரிவார தெய்வங்களுக்கான பாலஸ்தான கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை கோவில் இணை கமிஷனர் சுரேஷ் தலைமையில் பணிகள் நடந்து வருகின்றன.

# காஞ்சிபுரம் அஷ்டபுஜ பெருமாள் கோவிலில் கருட சேவை

காஞ்சிபுரம், மே 4:

108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான காஞ்சிபுரம் அஷ்டபுஜ பெருமாள் கோவிலில் சித்திரை பிரம்மோற்சவ விழா விமரிசையாக நடைபெற்று வருகிறது. தினமும் சிறப்பு பூஜைகள் மற்றும் வாகன சேவை நடைபெறுகிறது. அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் உற்சவர் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

அவ்வகையில் விழாவின் மூன்றாம் நாளான இன்று கருட சேவை நடைபெற்றது. பல்வேறு மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, ரோஸ் நிற பட்டு உடுத்தி, திருவாபரணங்கள் அணிந்து கருட வாகனத்தில் எழுந்தருளிய பகவான், வீதியுலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார்.





கோவிலில் இருந்து புறப்பட்ட கருட சேவை, ரங்கசாமி குளம், டி.கே.நம்பி தெரு, செட்டி தெரு, வரதராஜ பெருமாள் மாடவீதி வழியாக வலம் வந்தது. அப்போது பக்தர்கள் தீபாராதனை காட்டி பகவானை வழிபட்டனர்.

# நாகை: அண்ணாபேட்டையில் சித்திரை திருவிழா.. குதிரை வாகனத்தில் காமாட்சியம்மன் வீதி உலா

நாகை, மே 4:

நாகை மாவட்டம் வாய் மேட்டை அடுத்த அண்ணாபேட்டை கிராமத்தில் உள்ள காமாட்சி அம்மன் மற்றும் முனீஸ்வரர் ஆலய சித்திரை திருவிழா கடந்த ஒரு வார காலமாக நடைபெற்று வந்தது. தினந்தோறும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், பல்வேறு வாகனங்களில் வீதியுலா நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவின் முக்கிய நிகழ்வாக, இன்று காமாட்சியம்மன் குதிரை வாகனத்தில் வண்ண மலர் அலங்காரத்தில் எழுந்தருளி கோவிலை சுற்றி திருவீதிஉலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திருக்குவளைகட்டளை பகுதியின் சார்பில் இந்த சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றன.



மேளதாளம், வாண வேடிக்கைகள் முழங்க நடைபெற்ற இந்நிகழ்வில் திரளான பத்ர்கள் கலந்துகொண்டு அம்மனை தரிசனம் செய்தனர்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## நலம் தரும் மருத்துவம்



### பன நுங்குவின் மகத்துவங்கள்

உடலுக்கு குளிர்ச்சி மற்றும் சத்துக்கள் வழங்கும் இயற்கை பானமாக பதநீர் கருதப்படுகிறது. பதநீரை வெறுமனே கோடைக்கு ஏற்ற இயற்கை குளிர்பானம் என்று மட்டும் சொல்ல முடியாது. இதில் கால்சியம், சர்க்கரைச்சத்து, தயாமின், வைட்டமின் சி, புரதச்சத்து மற்றும் நிகோனிக் அமிலம் உள்ளிட்ட சத்துகள் அடங்கியுள்ளன. ஆக, பல்வேறு ஊட்டச்சத்துகள் நிறைந்த பதநீரைக் குடிப்பதால் வயிற்றுப்புண், தொண்டைப்புண், உடல்சூடு, பெண்களின் வெள்ளைப்படுதல், வெட்டை நோய்கள், மலச்சிக்கல் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளில் இருந்து விடுதலை பெறலாம்.

இவை தவிர உடல்வீக்கம், நெஞ்செரிச்சல், பித்தம் தொடர்பான கோளாறுகள், கல்லீரல் - மண்ணீரல் வீக்கம் போன்றவற்றையும் குணப்படுத்தக்கூடியது பதநீர். சிறுநீர் தொடர்பான நோய்களுக்கு நல்ல பலன் தரும்.

அந்த காலங்களில் பதநீர் அருந்தி வந்த பெண்களுக்கு மாதவிடாய்க் காலங்களில் ஏற்படும் தொந்தரவுகள் எதுவும் வராமல் இருந்தன. மேலும் அவர்களுக்கு மகப்பேறு காலங்களில் வரும் பிரச்னைகளை நீக்கி குழந்தை பெற்றபிறகு அதிகமாக பால் சுரக்கும் தன்மை இருந்தன.

இதனால் தாயும், சேயும் நலமாக இருந்தனர். இதுதவிர கால்சியம் குறைபாட்டால் ஏற்படக்கூடிய மூட்டுவலி, பற்களில் ஏற்படும் பிரச்னைகள் எதுவும் அவர்களை நெருங்காமல் இருந்தன. அதன் அடிப்படையில் இந்த பதநீரை அருந்துவதன்மூலம் தாயும் சேயும் நலம் பெறலாம். பிரிட்டிஷ் காரர்கள் பனை நுங்கிற்கு வைத்த பெயர் 'ஐஸ் ஆப்பிள்'. இது தாகத்தை தணிப்பது மட்டுமல்ல, பல்வேறு நோய்களை தடுக்கும் ஆற்றல் பெற்றது. 100 கிராம் பாலில் 3 கிராம் புரதம் இருக்கிறது. ஆனால் அதே அளவு நுங்கில் 10 கிராம் புரதம் இருக்கிறது. இதில் 60% புரதமும், 30% மாவுப் பொருளும், மிகக்குறைந்த அளவே கொழுப்பு உள்ளது. நுங்கில் வைட்டமின் பி, இரும்பு, துத்தநாகம், பொட்டாசியம், பாஸ்பரஸ், கால்சியம் போன்ற ஊட்டச்சத்துகள் இருந்தாலும், இந்த பழத்தில் குறைந்த கலோரி மற்றும் அதிக நீர்ச்சத்து இருக்கிறது.. அதனால்தான் நுங்கை சாப்பிட்டவுடன், வயிற்றை நீண்டநேரம் நிரப்புகிறது.. எடை இழப்பு முயற்சியில் இருப்பவர்கள் இதனை சாப்பிட இதுவே காரணம் என்கிறார்கள்.. தினமும் 2 அல்லது 3 நுங்கு சாப்பிட உடல் சூடு குறையும், நீர்ச்சத்தை மேம்படுத்தும், வெயில் காலத்தை தவிர, நிறைய பேர் இதைப் பெரிதாக கண்டுகொள்வதில்லை... ஆனால், எந்த காலத்திலும், கட்டாயம் சாப்பிட வேண்டிய பழம்.. எப்போது வேண்டுமானாலும் சாப்பிடலாம். காலநேரம் கிடையாது.

பெண்களுக்கு நுங்கு அருமருந்தாக அமைந்துள்ளது என்கிறார்கள்.. அந்த அளவுக்கு அதில் மருத்துவ பலன்கள் நிறைந்துள்ளதாம். செரிமானத்தை துரிதப்படுத்தும், அசிடிட்டி தவிர்க்க மற்றும் ரத்த சோகை தவிர்க்க மற்றும் மார்பக கட்டி தடுக்கும் என்கிறார்கள்.

# உடலை எரிக்க வேண்டாம், கரைத்துவிடலாம்! உலகையே வியக்க வைக்கும் 'நீர் தகனம்'


அண்மையில் பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த ஸ்காட்லாந்து அரசு, பாரம்பரிய தகனம் மற்றும் அடக்கம் செய்யும் முறைக்கு மாற்றாக, சுற்றுச்சூழலுக்கு உகந்த நீர் தகனம் (HYDROLYSIS) முறையை சட்டப்பூர்வமாக அனுமதித்துள்ளது. இதன் மூலம், பிரிட்டனில் தண்ணீரில் தகனம் செய்ய அனுமதித்த முதல் நாடாக ஸ்காட்லாந்து மாறியுள்ளது. 2023-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில், 84 சதவீத மக்கள் நீர் தகனத்தை ஆதரித்தனர். இதனால் அரசு சட்டத்தை நிறைவேற்றியது.

இந்தச் செயல்முறையில், உடல்கள், பட்டு அல்லது கம்பளி போன்ற மக்கும் தன்மையுள்ள துணியால் போர்த்தப்பட்டு, உடலின் எடையை அளந்து, சிறப்பு இயந்திரத்தில் வைக்கப்படுகிறது. பின்னர் பொட்டாசியம் ஹைட்ராக்சைடு மற்றும் நீர் கலவையில் 90 நிமிடங்கள் வரை 150°C (300°F) வெப்பநிலைக்குச் சூடுபடுத்தப் படுகிறது.

இதனால் உடலின் மென்மையான திசுக்கள் கரைந்து, எலும்புகள் மட்டும் மீதமாகின்றன. அவை 120 டிகிரி செல்ஸியஸ் வெப்பத்தில் சுத்தம் செய்யப்பட்டு, உலர்த்தப்பட்டு, கிரெமுலேட்டர் (CREMULATOR) எனும் இயந்திரத்தில் சாம்பலாக மாற்றப்படுகின்றன. தூளாக்கப்பட்ட எச்சங்கள் ஒரு கலசத்தில் உறவினர்களிடம் திருப்பி அளிக்கப்படுகின்றன.

நீர் தகனம் அமெரிக்காவின் 28 மாநிலங்களில், கனடா, அயர்லாந்து, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

நீர்த்தகனம் (AQUAMATION), அல்கலைன் ஹைட்ரோலிசிஸ் (ALKALINE HYDROLYSIS) என்றும் அழைக்கப்படுகிறது. இது உடலை எரியூட்டுவதற்குப் பதிலாக வெப்ப நீர் மற்றும் காரக்கரைசலைப் பயன்படுத்தி இயற்கையான சிதைவை வேகப்படுத்தும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பாதுகாப்பு முறை. இதனை அமோஸ் ஹெர்பர்ட் ஹாப்சன் (AMOS HERBERT HOBSON) எனும் பிரிட்டிஷ் கண்டுபிடிப்பாளர் 1888-ல் உருவாக்கினார். இவர் விலங்குகளின் உடல்களை உரமாக மாற்ற இந்த முறையை உருவாக்கினார், இந்த முறையை முதன்முதலில் கண்டுபிடித்து காப்புரிமையும் பெற்றார்.



1888-ல் விலங்குகளுக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட இது, 1990-களில் மருத்துவ ஆராய்ச்சிக்கும், போவைன் ஸ்பாஞ்சிஃபார்ம் என்செஃபலோபதி (பைத்தியம் பிடித்த மாட்டு நோய்) நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளை அப்புறப்படுத்தும் ஒரு முறையாக இந்த செயல்முறை முதன்முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2005-ல், ஜோசப் வில்சன் (JOSEPH WILSON) என்பவர் மனித உடல்களை நீர் தகனம் செய்யும் முதல் இயந்திரத்தை உருவாக்கினார்.

மயோ கிளினிக் போன்ற நிறுவனங்கள் இதைப்பயன்படுத்தத் தொடங்கின. 2005 முதல் மனிதர்களுக்குப் பரவலாகவும் பயன்படுத்தப்படுகிறது. இது பாரம்பரிய தகனத்தைவிட 90% குறைவான ஆற்றலைப் பயன்படுத்துகிறது.

இதுதற்போது சுற்றுச்சூழலுக்கு உகந்த மனித உடலடக்கம் செய்யும் முறையாகப் பயன்படுத்தப் படுகிறது.

2010களில் அமெரிக்காவின் பல மாநிலங்களில் இந்த முறை சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. டிசம்பர் 2021-ல் காலமான, அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற தென் ஆப்ரிக்காவின் டெஸ்மண்ட் டுட்டு இந்த முறையைத் தேர்ந்தெடுத்ததால், நீர் தகனம் உலகெங்கும் செய்திகளில் இடம்பெற்றது.

ஒரு வழக்கமான தகனச் சடங்கானது, சுமார் 320 கிலோகிராம் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான கார்பனை வெளிவிடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது - கார நீராற்பகுப்பு முறையானது ஏழு மடங்கு குறைவான கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்திற்கு வழிவகுப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே தற்போது இந்த செயல்முறை உலகெங்கிலும் உள்ள மற்ற நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது, நெருப்பு தகன முறை 3 மணி நேரத்திற்குள் முடிந்துவிடும். ஆனால், நீர் தகன முறையில் 6 மணி நேரத்திற்கு மேலாகும் மற்றும் செலவுகளும் கொஞ்சம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்ணுக்குத் தெரியாத உண்மைகள்!



அரசுப் பள்ளியில் ஆசிரியராக பணி புரியும், திலகம் தனது வகுப்பு மாணவ மாணவிகளிடம், தினசரி வகுப்பு துவங்கும் போது பொது அறிவு கேள்விகளை கேட்பது வழக்கம். சில சமயங்களில் இன்று காலை,நீங்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கு புறப்படும் வரை என்னென்ன வேலைகளை செய்தீர்கள் என்று வகுப்பில் ஒரு சில மாணவ, மாணவிகளிடம் கேட்பது உண்டு.

அப்படித்தான் இன்று வகுப்புத் துவங்கும் போது, காலை எழுந்ததிலிருந்து பள்ளிக்கு புறப்படும் நேரம் வரை நீங்கள் செய்த வேலைகள் என்னவென்று மாணவன் சேகரிடம், கேட்க அதற்கு அவன் காலை 6 மணிக்கு எழுந்தேன். காலைக் கடன்களை முடித்தேன். அம்மா தந்த நீராகாரம் அருந்திவிட்டு பள்ளிப் பாடங்களை படித்தேன். வீட்டுப் பாடங்களையும் எழுதி முடித்துவிட்டு குளித்தேன். பிறகு காலை உணவை முடித்து பள்ளிக்கு புறப்பட்டு வந்தேன் என்றான்.

மாணவி பல்லவி, தன்னிடம் ஆசிரியர் கேட்ட கேள்விக்கு காலை 6 மணிக்கு எழுந்து , பல் துலக்கிவிட்டு எனது அம்மாவுக்கு உதவியாக பாத்திரங்களை துலக்கி வைத்தேன். வீட்டைப் பெருக்கி வைத்துவிட்டு, பள்ளிக்கு செல்வதற்கு தயாரானேன் என்றாள்.

அதேபோல மாணவன் புகழேந்தியிடம் ஆசிரியர் கேட்டதற்கு, இன்று காலை நான் 6-30 மணிக்கு எழுந்தேன். எனது தந்தை வெளியூர் சென்று விட்டதால் அம்மா சொன்ன மளிகை சாமான் மற்றும் காய் கறிகளை வாங்கி வந்து கொடுத்தேன். நேற்றைய தினம் பள்ளிக்கு அணிந்து வந்த எனது ஆடைகளை , துவைத்து காயப் போட்டேன். வீட்டுப் பாடங்களை நேற்று மாலையே எழுதி வைத்துவிட்டதால், குளித்து முடித்து காலை உணவை சாப்பிட்டுவிட்டு பள்ளிக்கு புறப்பட்டு வந்தேன் என்று தெரிவித்தான்.

பத்து பணிரெண்டு மாணவ, மாணவிகளிடம் இப்படியாக கேள்விகளை க் கேட்டு அவர்களிடமிருந்து பதிலை பெற்றதும் அவர்கள் அனைவரையும் பாராட்டி தனது வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு மட்டுமல்லாது, வீட்டில் அம்மா அப்பாவுக்கு உதவியாக வீட்டு வேலைகளை செய்ய வேண்டும்.

அப்படி செய்து வந்தால் உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கும் என்று ஆசிரியர் திலகம் மாணவர்களை பாராட்டி பேசினார்.

கடைசியாக வைதேகி என்ற மாணவி, நான் காலை 6 மணிக்கு எழுந்து காலை கடன்களை முடித்து விட்டு, உடல் நலமில்லாத எனது அம்மாவுக்கு வேண்டிய உதவிகளை செய்துவிட்டு, காலை உணவை தயாரித்து வைத்துவிட்டு வருவது எனது தினசரி வேலையாக உள்ளது என்று தெரிவித்தாள்.

இதனைக் கேட்ட ஆசிரியர் திலகத்தின் கண்களில் நீர் தாரையாகக் கொட்டியது. மாணவ மாணவிகள் பதற்றத்தோடு,டீச்சர்... டீச்சர்... ஏன் டீச்சர் அழறீங்க... என்றனர்.

சிறிது நேரத்தில் கைக் குட்டையில் தனது கண்களை துடைத்துக் கொண்டு, அதெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் அனைவரும் அமருங்கள் என்று சொல்லிவிட்டு பாட்டிலை திறந்து தண்ணீர் அருந்தியபடி தன்னை ஆசுவாசபடுத்திக் கொண்டார்..

இப்படி தன்னுடைய வகுப்பிலுள்ள மாணவர்களின் தினசரி செயல்பாடுகளை கேட்டறியும் ஆசிரியர் திலகம், மாற்றுத் திறனாளியான தனது கணவரை கழிவறைக்கு அழைத்து செல்வது முதல் குளியல் செய்து வைப்பது வரை தனது தினசரி வேலை என்பதை எவரிடத்திலும் இதுநாள்வரை தெரிவித்ததேயில்லை.!

ஆக்கம்:
தமிழ்ச் செம்மல்,
**நன்னிலம் இளங்கோவன்.**

# கலையும் கனவுகள்



பத்து மணிக்கு நிகழ்ச்சி தொடங்கும் என அறிவிப்பு செய்தும் இப்போ மணி பத்தரை ஆகுது இன்னும் பத்துப்பேர்க்கூட வரல,,, அரங்கத்தில் நிகழ்ச்சி நடத்துவதில் இந்த சிக்கல் வேற இருக்கு பொது இடத்தில் நிகழ்ச்சி என்றால் கூட்டம் கூடிடும் பிரச்சனை இல்லை,,, பதினோரு மணியாகப்போகுது இப்பதான் ஒவ்வொருத்தராக வந்துக்கொண்டு இருக்கிறார்கள் எப்படி இருந்தாலும் பதினோரு மணிக்கு நிகழ்ச்சியைத் தொடங்கிடலாம் ஒரு நாலுப் பாட்டு பாடச்சொன்னா அதுக்குள்ள வந்திடுவார்கள் மழை வேற லேசா தூறிக்கிட்டு இருக்கு நெனச்சமாதரி தோழர்கள் வருவார்களாயென தெரியவில்லை கவலையோடு செயலாளர் கிராமியப்பாடகர் புன்சை பூமிநாதனை அழைத்து ஒரு நாலுப்பாட்டு பாடுங்க தோழர் பிறகு நிகழ்ச்சியை தொடங்கலாமென்றார்

இது மாதாமாதம் நடக்கும் நிகழ்ச்சிதான் இன்று ஒரு புத்தகம் வெளியீடு இருக்கு அந்த புத்தகத்தை வெளியிட்டு பேசுவதற்காக சென்னையிலிருந்து செண்பகராமன் என்ற இலக்கிய ஆளுமை வந்திருக்கிறார்,,, பந்தாவா ஒரு கும்பலைக் கூட்டினாதானே அவருக்கும் மைக்கைப் பிடித்துப்பேச ஆர்வமிருக்கும் இன்னும் பாதி நாற்காலிகள் காத்துக்கொண்டுதான் இருக்கிறது உச்சக்குரலில் "பொண்ணுப்பொறக்குமா ஆணுப்பொறக்குமா" என பாடக்கொண்டிருந்தார் புன்சை பூமிநாதன் செயலாளர் அரங்க வாசலிலே நின்று வருபவர்களை புன்னகையோடு வரவேற்றார் கோபத்தைக் காட்டமுடியாதே,,, நாலுப் பாட்டு முடிந்தவுடன் கவிஞர் முன்னா வரவேற்புரை நிகழ்த்தி நிகழ்ச்சிக்கு தலையேற்க கவிஞர் அரங்கநாயகியை அழைத்தார் அவர் தன்பங்குக்கு சில வார்தைகள் பேசிவிட்டு நேரம்கருதியாம்,,,, சிறப்பு அழைப்பாளர் ,மற்றும் நூலாசிரியர் இருவரையும் மேடையில் வந்து அமரும்படி மைக்கில் அறிவிப்பு செய்தார் இதற்கிடையே டீயும் பிஸ்கெட்டும் வாங்கி வரும்படி ஒரு தோழரை அனுப்பி வைத்தார் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்

தோழர்களே இப்போது கவிஞர் செல்லாண்டி அவர்களின் "வாடியப்பூக்கள் " என்ற கவிதைநூலை தோழர் செண்பகராமன் அவர்கள் வெளியிட மக்கள் சேவை மையத்தின் தலைவர் கரிகாலன் அவர்கள் பெற்றுக்கொள்வாரென விழாத்தலைவர் அறிவிப்பு செய்ய,,, யாரும் எந்த ரியாக்சனும் காட்டவில்லை இதைக்கண்ட அரங்க நாயகி இங்கே இருக்கைகள் சும்மா இருந்தால் பரவாயில்லை உங்கள் இரு கைகள் சும்மா இருக்க வேண்டாம் பலத்தக் கரக்கோசம் எழுப்பி படைப்பாளியை உற்சாகப்படுத்துங்கள் என்றார் பிறகு சிறப்பு அழைப்பாளர் செண்பகராமன் நூலைப்பற்றிப் பேசும்போது,,,,

இக் கவிதைத் தொகுப்பு இடதுசாரி சிந்தனையை தங்களுக்குள் வரித்துக் கொண்டிருக்கிறது தோழரது படைப்புகள் பெரும்பாலும் பிரச்சாரங்களாகத்தான் இருக்கின்றன என்ற பொதுவான கருத்து வாசகர்களிடம் இருக்கின்றன சரிதான்..! ஆனால்,எனது கேள்வியெல்லாம் ஏன் பிரச்சாரங்களாக இருக்கக் கூடாது.? என்பதுதான் உங்களுக்கு தெரிந்த உலக இலக்கியங்களிலெல்லாம் மனித குலத்தின் மேம்பாட்டிற்காக சிந்திக்கப்பட்டவை என்று எதையெல்லாம் எண்ணுகிறீரோ.. அதையெல்லாம்தான் இடதுசாரி சிந்தனைகள் என்று சொல்கிறோம்.

கதையோ கவிதையோ கட்டுரையோ..எழுதும் முறைகளில் வெவ்வேறான உத்திகள் இருக்கலாம் அது உங்கள் வாசிப்பு அனுபவத்திற்கேற்ப பிடிக்கலாம் அல்லது பிடிக்காமல் கூட போகலாம் ஆனால் அந்தப் படைப்பின் மைய அச்சாக இருக்கின்ற கருவை,கருத்துகளை நீங்கள் புறந்தள்ளவே முடியாது இந்த அணுகுமுறையோடுதான் நான் படைப்புகளை அணுகுகிறேன்.

தோழரின் படைப்புகளும் அவ்வாறுதான் பிரச்சாரங்களையும் கவிதைகளின் வாயிலாக நன்றாகவே கொண்டு செல்ல முடியும் என்பதை,மிகவும் எளிய மொழியில் சிறுவர்களுக்கும் புரிகிற வகையில்,தமிழ்படிக்கத் தெரிந்த அனைவருமே புரிந்து கொள்ளும் வகையில் தனது நூலைத் தந்திருக்கிறார் இது அவரின் முதல் நூல்போலவே தெரியவில்லை நல்ல முதிர்ச்சி இருக்கிறது மென்மேலும் அவர் இச்சமூகத்திற்கு பல நூல்களைத் தந்து பேரும் புகழும் அடைய எனது வாழ்த்துகள் அவர் பேசிக்கொடிருக்கும்போதே எல்லோருக்கும் டீயும் பிஸ்கெட்டும் வழக்கப்பட்டது சிறிய சலசலப்புக்கிடையே கவிஞர் செல்லாண்டி ஏற்புரை வழங்கினார் தான் இருபது ஆண்டுகளாக கவிதை எழுதுவதாகவும் இதுவரை ஒரு புத்தகம்கூட போடுவதற்கு வாய்ப்பு வரவில்லை இதுதான் எனது முதல் புத்தகம் இதற்காக பல தோழர்கள் என்னை உற்சாகப்படுத்தி ஊக்குவித்தார்கள் அவர்களுக்கு என் நன்றியை இந்த நேரத்தில் தெரிவிக்கின்றேன் என அமர்ந்தப்பின்னர் விழாத்தலைவர் ஒரு அறிவிப்பு செய்தார் இப்போது வெளியிடப்பட்ட நூல் தமிழ் இலக்கிய உலகில் போற்றிப் பாதுக்காக்க வேண்டிய பொக்கிசியம் இந்த இலக்கியவாதியை வளர்க்கவும் அவருக்கு உற்சாகம் ஏற்படவும் அனைவரும் ஒரு புத்தகம் வாங்கிச் செல்லவும் இதுதான் படைப்பாளிக்கு நாம் செய்ய வேண்டிய உதவி,,, காசுக்கொடுத்து ஒரு நல்லப் புத்தகத்தை வாங்குவதற்கு ஈடாக வேறு எதையுமே நாம் வாங்கமுடியாது என ஓர் அறிஞர் சொல்கிறார் எனவே தோழர்களே வாய்ப்புள்ள தோழர்கள் வாங்கிச் செல்லுங்கள் என்றார்

எல்லோரின் இருக்கையிலும் புத்தகம் கொண்டித் தரப்பட்டது அவர்கள் ஒரு கையில்கூட தொட்டுக்கூட பார்க்கவில்லை எல்லோருமே ஒவ்வொரு காரணம் ரெடிமேடாக வைத்திருந்தார்கள்,,, சில்லரை இல்லை,அவசரமா வந்துட்டேன்,இன்னொரு நாளைக்கி வாங்கிக்கொள்கிறேன்,இப்படி ஆளாளுக்கு சொல்ல கவிஞர் முகம் வெளுரிப்போய் கிடந்தது ஒருசிலர் பிறகு ஜிபே பன்றேன்னு வாங்கிட்டுப் போனார்கள் பன்னுவாங்கலான்னு தெரியாது ஒரு சிலர் என்ன தோழா நான்கூட பணம் தரணுமா ஒரு புத்தகம் கொடு தோழான்னு இலவசமா வாங்கிட்டாங்க,,,பார்வையாளர்கள் வாங்காவிட்டாலும் பரவாயில்ல படைப்பாளிகள்கூட வாங்குவதில்லை அப்படியே இலவசமாக் கொடுத்தாலும் அதை வாசித்துவிட்டு முகநூலிலோ வாட்ஸ் அப் குழுவிலோ விமர்சனம் செய்வதில்லை அதைவிடுங்க ஒரு போன்பன்னிக்கூட விமர்சனம் செய்வதில்லை கவிஞர் கைக்கு ஒரு புத்தகத்தின் காசுக்கூட வரவில்லை விழாவிற்கு வரும்போது சிரித்தப்படி புத்தகமூட்டையை தூக்கி வந்தவர் விழா முடிந்து எடைக்குறைந்த மூட்டையை சுணக்கத்தோடே சுமந்துச்சென்றார்

புத்தகம்போடும் எழுத்தாளர்களுக்கு உதவிசெய்ய வேண்டாம் உயரிய விருது தரவேண்டாம் உரிய விலைக்கொடுத்தாவது புத்தகம் வாங்கலாமே அவர்கள் கனவுகள் கலையாமல் இருக்குமே.

**நாகை ஆசைத்தம்பி**
**கோவை**

# திருவிளையாடல் புராணம் 33



**சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி.

## அட்டமாசித்தி உபதேசித்த படலம்

சிவபெருமான் கார்த்திகைப் பெண்களுக்கு அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய அட்டமா சித்திகளை உபதேசித்த நிகழ்வை கூறும் திருவிளையாடல் புராணத்தின் கூடல் காண்டத்தில் முப்பத்தி மூன்றாவது படலமாக அமைந்துள்ளது.

ஒருமுறை இறைவனான சிவபெருமான் கயிலாயத்தில் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார். அப்போது உமையம்மை அவர் பக்கத்திலேயே அமர்ந்து இறைவனாருக்கு வெற்றிலைச் சுருளை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அப்போது இறைவனார் சிவகணங்களுக்கும், பெருந்தவ முனிவர்களுக்கும் போக மூர்த்தியாய் அமர்ந்து சிவகதையினை திருவாய் மலர்ந்தருளிக் கொண்டிருந்தார்.

அப்போது கார்த்திகைப் பெண்கள் அறுவரும் கயிலாய மலைக்கு வந்தனர். இறைவனாரிடம் “எம்பெருமானே, தாங்கள் எங்களுக்கு அட்டமா சித்தியை உபதேசித்து அருள வேண்டும்” என்று வேண்டிக் கொண்டனர். கார்த்திகைப் பெண்களின் வேண்டுதலைக் கேட்ட இறைவனார் அவர்களிடம் உமையம்மைச் சுட்டிக் காட்டி “உலகத்தின் அன்னையான இவ்வம்மை தன்னுடைய பூரணத் தன்மையால் உலகெங்கும் பராசக்தியாகியும், மகேஸ்வரியாகியும் எங்கும் நிறைந்திருக்கிறாள். அட்டாமா சித்திகள் இவளைப் பணிந்து பணிவிடைகள் செய்யும். ஆதலால் நீங்கள் இவ்வம்மையை வழிபட அட்டமா சித்திகளை இவள் உங்களுக்கு அருளுவாள்” என்று கூறினார்.

ஆனால் கார்த்திகைப் பெண்கள் ஊழ்வினையால் உமையம்மையை வழிபட மறந்தனர். இதனைக் கண்ட இறைவனார் “நீங்கள் உமையம்மையை அலட்சியப்படுத்தியதால் பட்டமங்கை என்னும் தலத்தில் கற்பாறைகளாகக் கிடக்கப் பெறுவீர்கள்” என்று சாபம் அளித்தார்.

இதனைக் கேட்டதும் கார்த்திகைப் பெண்கள் தங்களின் சாபம் எவ்வாறு நீங்கும் என்று இறைவனாரை வினவினர்.

அதற்கு அவர் “ஆயிரம் ஆண்டுகள் கழித்து யாம் மதுரையிலிருந்து வந்து உங்களுக்கு சாபம் நீக்கி அட்டமா சித்தியை உபதேசிக்கிறேன்” என்று கூறினார்.

கார்த்திகைப் பெண்கள் பட்டமங்கலம் என்னும் தலத்தில் கற்பாறைகளாகக் கிடந்தனர். ஆயிரம் வருடங்கள் கழித்து சொக்கநாதர் ஞானாசிரியராக வடிவம் கொண்டு பட்டமங்கலத்திற்கு வந்தார்.

இறைவனாரின் கடைக்கண் பார்வை பட்டதும் கற்பாறைகள் கார்த்திகைப் பெண்களாக மாறினர்.

இறைவனார் அப்பெண்களின் தலைமீது தன்னுடைய கையினை வைத்து அட்டாமா சித்தியை உபதேசித்தார்.

அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகியவை அட்டமா சித்திகள் ஆகும்.

அணிமா என்பது மிகச்சிறிய உயிரினத்திலும் சிறுமையாகச் சென்று தங்குவது அணிமா ஆகும்.

மண் முதல் சிவதத்துவம் வரையிலான முப்பத்தாறு தத்துவங்களிலும் உள்ளும் புறமும் நீங்காமல் நிறைந்துள்ள பெருமை மகிமா ஆகும்.

மேருமலையைப் போல கனத்திருக்கும் யோகியை எடுத்தால் இலேசான பரமாணுவைப் போல் கனமற்று இருப்பது இலகிமா ஆகும்.

லேசான பரமாணுவைப் போல் மெலிந்திருக்கும் யோகியை எடுத்தால் மேருமலையின் பாரம் போல் கனப்பது கரிமா ஆகும்.

பாதாளத்தில் இருக்கும் ஒருவன் பிரம்மலோகம் சென்று மீண்டும் பாதாளத்தை அடைவது பிராத்தி ஆகும்.

வேறு உடலிற் புகுதலும், விண்ணில் சஞ்சரித்தலும், தான் விரும்பிய இன்பங்கள் அனைத்தையும் தான் இருக்கும் இடத்திற்கு வரவழைத்தல் பிராகமியம் ஆகும்.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் தம் இச்சைப்படி இயற்றி, சூரியன் முதல் ஒன்பது கோள்களும் ஏவல் கேட்க வீற்றிருப்பது ஈசத்துவம் ஆகும்.

எல்லாவகை உயிர்களையும், இந்திரன் உள்ளிட்ட திக்பாலர்களையும் தன் வசமாகக் கொள்வது வசித்துவம் ஆகும்.

கார்த்திகைப் பெண்கள் உமையம்மையை முறைப்படி வழிபட்டு தியான பயிற்சி வலிமையால் அட்டமா சித்திகளில் தேர்ச்சி பெற்றனர். பின்னர் திருகையிலாய மலையை அடைந்து சிவப்பேறு பெற்றனர்.

அலட்சியம் ஊறு விளைவிக்கும் என்பதே இப்படலம் கூறும் கருத்தாகும்.



(தொடரும்)

# பஜகோவிந்தம் பாடலில் ஏன் 'கோவிந்தா' என்று 3 முறை சொல்ல வேண்டும்?



ஸ்ரீ ஆதிசங்கரர் பெருமானார், எட்டாம் நூற்றாண்டில் இன்றைய கேரளத்திலுள்ள காலடி என்னும் ஊரில், ஆர்யாம்பாள் - சிவகுரு தம்பதிக்கு மகனாய் அவதரித்தார். இளம் பிராயத்திலேயே கௌடபாதரின் சீடரான கோவிந்த பகவத்பாதரிடம் வேதாந்தம் மற்றும் இதர தத்துவங்கள் பயின்று, 'சங்கர பகவத்பாதர்' என்று அழைக்கப்பட்டார். அத்வைத தத்துவத்தை உலகிற்குத் தெளிவுபடுத்தியவர் இவரே.

பாரத தேசம் முழுவதும் கால்நடையாகவே மூன்று முறை விஜய யாத்திரை மேற்கொண்டு, நாட்டின் நான்கு திசைகளிலும் மடங்களை ஸ்தாபித்தார். அதன் பின்,ஸ்ரீ ஆதிசங்கரர் காஞ்சி மாநகரம் வந்து 'சர்வஞான பீடம்' ஏறியமர்ந்தார்.ஸ்ரீ சக்கர வழிபாட்டு நெறிமுறைகளை வகுத்துக் கொடுத்து, அந்தப் பூஜா முறைகளைக் கற்பித்தார். இன்று நாம் கொண்டாடும் பல பண்டிகை வழிபாட்டு முறைகள் அவர் வகுத்துக் கொடுத்தவையே.

தன்னுடைய 32-ஆவது வயதில் சித்தியடைந்த இவர், எண்ணற்ற ஸ்லோகங்களை எழுதியுள்ளார். சிறு வயதில் பிக்ஷை யாசிக்கச் சென்றபோது, ஒரு ஏழைப் பெண்மணி ஒரு நெல்லிக்கனியை மட்டும் அளிக்க, அந்தப் பெண்மணியின் வறுமை தீர மஹாலட்சுமியை வேண்டி அவர் பாடிய 'கனகதாரா ஸ்தோத்திரம்' பொன்மாரி பெய்ய வைத்தது. இது உலகறிந்த அற்புதமாகும். தன்னுடைய விஜய யாத்திரையின் போது பல்வேறு திருத்தலங்களில் பல ஸ்தோத்திரங்களை இயற்றினார்:

**வைத்தீஸ்வரன் கோவில்:** வைத்யநாத அஷ்டகம்
**மதுரை மீனாட்சியம்மன்:** மீனாட்சி பஞ்சரத்தினம்
**ஸ்ரீரங்கம்:** ரங்கநாத அஷ்டகம்
**குருவாயூர்:** கோவிந்தாஷ்டகம்
**காசி:** அன்னபூர்ணா ஸ்தோத்திரம் & காலபைரவாஷ்டகம்

தீராத வயிற்றுவலியில் அவதிப்பட்டபோது, திருச்செந்தூர் சென்று முருகப் பெருமான் மீது 'சுப்ரமண்ய புஜங்கம்' பாட, அவரது வலி குணமாயிற்று. இவை தவிர கணேச பஞ்சரத்தினம், சௌந்தர்ய லஹரி, மதுராஷ்டகம், சிவானந்த லஹரி, பஜகோவிந்தம் ஆகியவையும் முக்கியமானவை.

இவருடைய ஸ்லோகங்களின் சிறப்பு என்னவென்றால், அவற்றின் சந்தங்கள் இசையமைத்துப் பாட ஏற்றதாக இருப்பதே ஆகும். ஆதிசங்கரரின் ஸ்லோகம் என்றாலே முதலில் நினைவுக்கு வருவது 'பஜகோவிந்தம்'. இசையரசி திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அம்மாவின் காந்தர்வக் குரலில் ஒலிக்காத இல்லமே இல்லை எனும் அளவுக்கு இது பிரபலம்.

வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய அத்தனை நெறிமுறைகளையும், மெய்ஞ்ஞானத்திற்கான வழிகாட்டுதலையும் இதில் சங்கரர் வழங்கியுள்ளார்.

**"பஜகோவிந்தம், பஜகோவிந்தம், கோவிந்தம் பஜ மூடமதே!"**

இந்த முதல் ஸ்லோகத்தில் ஏன் மூன்று முறை 'கோவிந்தா' என்று துதிக்க வேண்டும்? துதிப்பது என்பது வெறும் நாவோடு நின்றுவிடக் கூடாது; அது சிந்தையிலும் செயலிலும் ஊடுருவ வேண்டும் என்பதாலேயே மூன்று முறை சொல்லப்பட்டுள்ளது. 'மூட' என்றால் அறிவில்லாதவன் என்று பொருளல்ல; 'அறிவு மூடியிருக்கும் நிலை' என்று ஆதிசங்கரர் விளக்குகிறார். ஆன்மீக ஆர்வம் தோன்றி, அறிவு திறக்கப்பட வேண்டும் என்பதற்காகவே 'நாமஸ்மரணை' செய்யச் சொல்கிறார். ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்து அமாவாசைக்குப் பின் வரும் சுக்கிலபட்ச வளர்பிறை பஞ்சமியன்று அவருடைய ஜயந்தி கொண்டாடப்படுகிறது.

எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி-20 015

# தினம் ஒரு தலைவர்கள் — மரகதம் சந்திரசேகர் வரலாறு



மரகதம் சந்திரசேகர் (MARAGATHAM CHANDRASEKAR) (நவம்பர் 11 1917 - அக்டோபர் 27 2001) இவர் ஒரு இந்திய விடுதலைப் போராட்ட வீரர், இந்திய அரசியல்வாதி, மற்றும் முன்னாள் நடுவண் அமைச்சரும் ஆவார்

வாழ்க்கை

மரகதம் சந்திரசேகர் 11 நவம்பர் 1917-இல் வித்வான் களத்தூர் முனிசாமிக்கு மரகதம் முனிசாமியாகப் மகளாகப் பிறந்தார். இவர் இந்தியாவில் தனது இளநிலை அறிவியல் பட்டத்தினைப் பெற்றார். இலண்டனில் இதழியல், அறிவியல் மற்றும் உணவுமுறை படிப்புகளில் பட்டயப்படிப்பினை முடித்தார். இலண்டனில் சிறப்பு நிறுவ்னத்தில், நிர்வாக மேலான்மை என்ற பாடத்தையும் இவர் பயின்றார். மரகதம் ஆர். சந்திரசேகரை மணந்தார். இந்த இணையருக்கு ஒரு மகனும் (இலலித் சந்திரசேகர்) ஒரு மகளும், லதா பிரியகுமார் உள்ளனர். லதா பிரியக்குமார் தமிழகத்தின் சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்


அரசியல்

மரகதம் சந்திரசேகர் இந்திய தேசிய காங்கிரசில் இணைந்து 1951ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் திருவள்ளூர் மக்களவைத் தொகுதியிலிருந்து இந்திய நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1951 முதல் 1957 வரை திருவள்ளூர்



மக்களவை உறுப்பினராகவும், 1970 முதல் 1984 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றினார். 1951 முதல் 1957 வரை சுகாதாரம், 1962 முதல் 1964 வரை உள்துறை மற்றும் 1964 முதல் 1967 வரை சமூக நலத்துறை துணை அமைச்சராகவும் பணியாற்றினார். 1972ல், அகில இந்திய காங்கிரசு கட்சியின் பொதுச் செயலாளராக மரகதம் தேர்ந்தெடுக்கப்பட்டார். ராஜீவ் காந்தியின் படுகொலை திருபெரும்புதூரில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த மரகதம், இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி 1991ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது சந்திரசேகர் நடைபெற்ற பேரணியில் மரகதம் சந்திரசேகருடன் கலந்துகொண்டார்.

மரகதம் சந்திரசேகர் முதுமை மற்றும் உடல்நலக் குறைவால் 26 அக்டோபர் 2001 அன்று இறந்தார்.



இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மரகதம் சந்திரசேகர் (1917-2001) சுதந்திரப் போராட்ட வீரர். மத்திய அரசிலும் காங்கிரஸ் கட்சியிலும் முக்கியப் பதவிகளை வகித்தவர். ஜவாஹர்லால் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்திக்கு மிகவும் நெருக்கமான சகா. தந்தை வித்வான் களத்தூர் முனிசுவாமி. இந்தியாவில் இளங்கலைப் பட்ட வகுப்பு வரை படித்த மரகதம், லண்டனில் மனை அறிவியல், சிறப்பு நிர்வாகவியல் பட்டயங்களைப் பெற்றார். சிறிது காலம் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

ஐந்து முறை மக்களவை உறுப்பினராகவும் மூன்று முறை மாநிலங்களவை உறுப்பினராகவும் இருந்தவர் மரகதம் சந்திரசேகர். ஜவாஹர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி அமைச்சரவைகளில் தொடர்ந்து இடம்பெற்றார்.

1972-ல் அனைத்திந்திய காங்கிரஸ் பேரவையின் (ஏஜசிசி) பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும் சிறிது காலம் பதவி வகித்தார்.

ஸ்ரீபெரும்புதூர் மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளரான மரகதம் சந்திரசேகரை ஆதரித்துப் பிரச்சாரம் செய்ய 1991 மே 21-ல் வந்தபோதுதான், படுகொலைக்கு ஆளானார் ராஜீவ் காந்தி.

# பாலிவுட் நடிகர் சுதேஷ் குமார் மறைவு



பழம்பெரும் பாலிவுட் நடிகர் சுதேஷ் குமார் வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவால் மும்பையில் காலமானார். அவருக்கு வயது 95.

சுவாசக் கோளாறு காரணமாக கடந்த திங்கட்கிழமை மும்பையில் உள்ள பிரீச் கேண்டி மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

அவரது விருப்பப்படி வியாழக்கிழமை காலை வீட்டிற்கு அழைத்து வரப்பட்டார்.

வீட்டிலேயே தீவிர மருத்துவ சிகிச்சைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில், அடுத்த நாள் காலை அவர் தனது கடைசி மூச்சை சுவாசித்தார்.

அவரது மறைவை அவரது மனைவி ஜெயா தவன் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளார்.

'சாரங்கா' போன்ற வெற்றிப் படங்களின் மூலம் நாயகனாக தடம் பதித்த சுதேஷ் குமார், பிரபல நடிகர் பிருத்விராஜ் கபூரின் உறவினர் ஆவார்.

சுதேஷ் குமார் மறைவு பாலிவுட் ரசிகர்கள் மற்றும் பிரபலங்கள் இடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு சென்று தற்போது சென்சேஷனல் கதாநாயகியாக வலம் வருகிறார் ப்ரீத்தி அஸ்ரானி. அயோத்தி திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து பாராட்டுகளை பெற்றார். இதை தொடர்ந்து எலெக்ஷன், கிஸ், பல்டி ஆகிய படங்களில் நடித்தார். ஆனால், எதுவும் பெரிதளவில் வரவேற்பை தரவில்லை. அடுத்ததாக இவர் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 29. இப்படம் வருகிற மே 8ஆம் தேதி வெளிவரவுள்ளது. இது மட்டுமின்றி அடுத்ததாக எஸ்.ஜே. சூர்யாவுடன் இணைந்து கில்லர் எனும் படத்தில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், நடிகை ப்ரீத்தி அஸ்ரானியின் லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் வெளியாகியுள்ளது.




# ஒரு முறை மட்டும் நிகழ்வதல்ல காதல்



இருவர் தனித்தனியாக ஒருவரை ஒருவர் காதலிக்கலாம். ஆனால் அந்த உறவே காதலை வரையறுக்கிறது என்று அர்த்தமல்ல.. நாம் ஒருவரை நேசிக்க வேண்டும் என்றால் அவர்களை சுதந்திரமாக விட வேண்டும். உங்கள் எண்ணங்களை அவர்கள் மீது திணிப்பதன் மூலம் நீங்கள் நேசிக்க முடியாது.

ஒரே ஒரு உண்மையான காதல் என்ற வழக்கமான சினிமா கருத்தை உடைத்து காதல் என்பது ஒரே ஒரு அனுபவத்திற்கு மட்டும் உரியதல்ல. காதல் என்பது ஒரு முறை மட்டும் நிகழும் ஒன்றல்ல. நீங்கள் தீர்மானிக்கும் வரை அது நிகழலாம். அந்த உணர்ச்சி வெளிப்புற சக்திகளால் தீர்மானிக்கப்படுவதில்லை. அது உள்ளுக்குள் உருவாக்கப்படுகிறது. இவ்வாறு தமன்னா காதல் குறித்து கூறியுள்ளார். தமன்னா நடிகர் விஜய் வர்மாவை காதலித்து வந்தார். ஒரு கட்டத்தில் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு பிரிந்து விட்டனர்.

# 'கருப்பு' பட ட்ரெய்லர்- அப்டேட்



நடிகர் சூர்யா மற்றும் இயக்குநர் ஆர்.ஜே. பாலாஜி கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் "கருப்பு." பலமுறை இந்தப் படத்தின் ரிலீஸ் தேதி மாற்றப்பட்ட நிலையில், இந்தப் படம் வருகிற 14-ந்தேதி தேதி வெளியாகும் என்று படக்குழு அறிவித்து இருக்கிறது.

டிரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவாகி உள்ள "கருப்பு" படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளார். கதாநாயகியாக திரிஷா நடித்துள்ளார். மேலும், சுவாசிகா, இந்திரன்ஸ், யோகி பாபு, ஷிவாதா, சுப்ரீத் ரெட்டி, அனகா மாயா ரவி மற்றும் நட்டி நட்ராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இதனிடையே, சமீபத்தில் 'கருப்பு' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா மதுரையில் நடைபெற்றது. படத்தில் இடம்பெற்றுள்ள பாடல்கள் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெற்றுள்ளது.

இந்நிலையில், கருப்பு' திரைப்படத்தின் ட்ரெய்லர் விரைவில் வெளியாகும் என இயக்குநர் ஆர்.ஜே.பாலாஜி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில்," டிரெய்லர் தயாராகிக்கொண்டிருக்கிறது. விரைவில் வெளியிடப்படும்" என குறிப்பிட்டுள்ளார்.

# AI-க்கு தடை.. ஆஸ்கார் அகாடமி எடுத்த அதிரடி முடிவு






அகாடமி ஆப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் அண்ட் சயின்சஸ் அமைப்பு வருடந்தோறும் ஆஸ்கர் விருதுகளை வழங்கி வருகிறது.

ஆஸ்கார் விருது திரைத்துறையின் உயரிய அங்கீகாரமாக பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் மனித உழைப்பிற்கும் படைப்பாற்றலுக்கும் முன்னுரிமை அளிக்கும் வகையில் ஆஸ்கார் அகாடமி அதிரடி முடிவொன்றை எடுத்துள்ளது.

அதாவது, ஏஐ படைப்பிகள் இனி ஆஸ்கார் போட்டியில் இடம்பெறாது என அகாடமி அறிவித்துள்ளது.

ஆஸ்கர் விருதுகளுக்கான நடிப்புப் பிரிவில், மனிதர்களால் நேரடியாகச் செய்யப்பட்டு, அவர்களின் ஒப்புதலுடன் திரையில் காட்டப்படும் கதாபாத்திரங்கள் மட்டுமே தகுதியானவை.

AI மூலம் உருவாக்கப்பட்ட கதாபாத்திரங்கள் இந்த பிரிவில் போட்டியிட முடியாது.


அதேபோல திரைக்கதை பிரிவில், திரைக்கதைகள் மற்றும் வசனங்கள் மனிதர்களால் எழுதப்பட்டிருக்க வேண்டும். AI மூலம் உருவாக்கப்பட்ட கதைகள் விருதுகளுக்குப் பரிசீலிக்கப்படாது.

படத் தயாரிப்பில் AI எந்த அளவிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது குறித்து ஸ்டுடியோக்களிடம் கூடுதல் விளக்கங்களைக் கேட்கும் உரிமை அகாடமிக்கு உண்டு.

ஒரு படத்தின் வெற்றிக்கு மனிதனின் படைப்பாற்றல் எந்த அளவிற்கு ஆதாரமாக இருந்தது என்பதைப் பொறுத்தே அதன் தகுதி நிர்ணயிக்கப்படும்.

ஹாலிவுட் எழுத்தாளர்கள் மற்றும் நடிகர்கள் நீண்ட கால போராட்டத்தின் விளைவாக இந்த புதிய விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவரை 2027 ஆஸ்கார் விழா முதற்கொண்டு அமலுக்கு வரும். 2026 ஆஸ்கார் விருது விழா கடந்த மார்ச் மாதம் நடந்து முடிந்தது குறிப்பிடத்தக்கது.

# கேன்ஸ் திரைப்பட விழாவில் அறிமுகமாகும் மஞ்சும்மல் பாய்ஸ் இயக்குநரின் 'பாலன் தி பாய்'!



மஞ்சுமல் பாய்ஸ் வெற்றியைத் தொடர்ந்து அதன் இயக்குநர் சிதம்பரம் இயக்கியுள்ளப் படம் 'பாலன்: தி பாய்'. கே.வி.என் புரொடக்ஷன்ஸ் மற்றும் தெஸ்பியன் ஃபிலிம்ஸ் இணைந்து தயாரித்துள்ள இந்தப் படம் கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட உள்ளது.

மே.12 முதல் 23வரை 79வது கேன்ஸ் திரைப்பட விழா நடைபெற உள்ளது. இதில் 14ம் தேதி இப்படம் திரையிடப்பட உள்ளது. இதுதொடர்பாக இயக்குநர் சிதம்பரம் கூறியுள்ளதாவது;

"'பாலன்: தி பாய்' என்பது நமக்குத் தெரியாமலேயே நாம் சுமந்து கொண்டிருக்கிறோம் விஷயங்களைப் பற்றியது. நாம் எங்கிருந்து வருகிறோம் என்பதன் பாரம், மற்றும் நமக்குரிய இடத்தைக் கண்டறியும் தாகம். யாரெல்லாம் இந்த இரண்டு உணர்வுகளையும் ஆழமாக உணர்ந்து, அவற்றை விவரிக்க வார்த்தைகள் கிடைக்காமல் தவித்தார்களோ, அவர்களுக்காகவே இந்தத் திரைப்படத்தை நான் உருவாக்கினேன்.

# உயிரை கொடுத்து அதனை செய்தாலும், ஏமாற்றம் மட்டும்தான்

திரையுலகில் பிரபலமான பின்னணி பாடகியாக வலம் வருபவர் ஸ்வேதா மோகன். இவர் பிரபல பின்னணி பாடகி சுஜாதா மோகனின் மகள் ஆவார்.

இவர் கடந்த 1995ஆம் ஆண்டு வெளிவந்த இந்திரா படத்தின் மூலம் பாடகியாக தமிழ் சினிமாவில் அறிமுகமானார். நீ பார்த்தா விழிகள், என்ன சொல்ல, இன்னும் கொஞ்ச நேரம், வா வாத்தி என பல சூப்பர்ஹிட் பாடல்களை பாடியுள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் 700க்கும் மேற்பட்ட பாடல்களை ஸ்வேதா மோகன் இதுவரை பாடியுள்ளார்.

இந்த நிலையில், வெற்றிகரமாக பின்னணி பாடகியாக வலம் வரும் ஸ்வேதா மோகன், "ஒரு பாடகராக ஒரு பாடலை பதிவு செய்வது என்பது வேறு வேலை அல்ல; அது எமோஷனலான தருணம்; ஒரு பாடலை பாடிய பிறகு அது எப்போது வெளியாகும் என்ற எதிர்பார்ப்பு எப்போதும் மனதிற்குள் இருக்கும். ஆனால், அது வெளியாகும்போது வேறொருத்தர் குரலில் கேட்கும்போது ஏற்படும் ஏமாற்றத்தை விளக்க முடியாது; இது எனக்கு மட்டுமல்ல, பலருக்கும் நடந்திருக்கிறது" என கூறியுள்ளார்.



# ரஜினி படத்திலிருந்து விலகியது குறித்து சுந்தர்.சி ஓபன் டாக்



இந்நிலையில் இதுகுறித்து சமீபத்தில் அவர் அளித்த பேட்டியில், "உண்மையில் சொல்லப்போனால் ரஜினி சார் படத்தில் எனக்கு அதிக PRESSURE இருந்தது.

என்னுடைய விருப்பம் போல் தான் இத்தனை வருடங்களாக படங்கள் செய்துள்ளேன். மக்களுக்கு பிடிக்கும் என தோன்றினால் அதை செய்துவிடுவேன்

ஆனால் இவ்வளவு பெரிய படத்தை செய்யும்போது அது தனிநபர் சார்ந்த முடிவாக இருக்க முடியாது.

எனவே அந்த படத்தில் அதீத அழுத்தம் இருந்தது. அந்த ப்ராஜெக்ட்டுக்கும் உண்மையாக இருக்க முடியவில்லை வாய்ப்பு கொடுத்தவர்களுக்கும் உண்மையாக இருக்க முடியவில்லை. அதனால்தான் விலகினேன். ரஜினிகாந்தோ, கமல்ஹாசனோ இதற்கு காரணமில்லை. ரஜினி சாரிடம் சொல்லிவிட்டுதான் படத்திலிருந்து நான் விலகப்போவதாக அறிவித்தேன்" என்று தெரிவித்தார்.


WANTED
சமையல்
வீட்டுவேலை
குழந்தை பராமரிப்பு
நோயாளி கவனிக்க உண
இடம் (Accomodation/Place)
சென்னை
தொடர்புக்கு: 9380476241 / 9790766391


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com



டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
2
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை
சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041


Seek Strive Succeed
Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Key Features
BANK LOAN
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர்
to
செங்கல்பட்டு ரோடு
1 to 2
ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773


துபாயை தலைமையிடமாகக் கொண்டு
தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக
பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY - 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


WANTED:
செக்யூரிட்டி
வேலைக்கு
ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617


EMI 50%
50% OFFER
PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலவளம்பேட்டை
SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.
CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259


PLOTS FOR SALE
SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரகடம், படப்பை
EMI Available
BANK LOAN
CONTACT: 8220711499, 8870158259


PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர்,
கடம்பத்தூர் அருகில்
வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


WANTED
• LAB HELPER
• OFFICE BOY
• GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US
7550093245 / 7358696451


WANTED
OFFICE BOY
GUINDY
CALL US
7550093245 / 7358696451


WANTED
ELECTRICIAN SUPERVISOR
/
ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US
7550093245 / 7358696451


WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அணுகவும். 8668107106



# புதுக் கவிதை பகுதிகள்

1. நமக்குதெரிந்த வாழ்க்கை
வேறு நாம் தேடுகிற
வாழ்க்கை வேறு நாம் வாழ்கிற
வாழ்க்கையும் வேறு

2. நிகழ் காலத்தில் கவனம்
எடுத்துக் கொள் எதிர்காலம்
தன்னைத்தானே கவனித்துக்
கொள்ளும்

3. புரியாதவர்களுக்கு தான்
ஆயிரம் விளக்கம் சொல்ல
வேண்டும் புரிந்தவர்களுக்கு
அழகான சிரிப்பு போதுமானது

4. உலகில் உள்ள
தலைசிறந்த போதை
அவமானப்பட்டு இடத்தில்
வெற்றி பெற்று காண்பிப்பது

5.சிந்திக்காமல் நீ செய்கிற
வேலை ஒரு நாள் உன்னை
சரி படிக்கும்

--------------------

1. உண்மையாக
இருப்பவர்களிடம் உறவுகள்
ஒட்டாது

2. பணத்தால் வாங்க முடியாத
விஷயங்களில் ஒன்று
அக்கறை

3. காகத்திற்கு வர்ணம்
பூசினாலும் செத்த எலியை
கண்டால் அங்கே தான் ஓடும்

4. உன்னை குறை கூறும்
பலருக்கு உத்தமனாக
வாழ்வதைவிட உன்னை
நம்பும் சிலருக்கு
நல்லவனாக இரு

5. ஆயிரம் எதிரிகளை
விட
ஒரு போலி நண்பனால் தான்
ஆபத்து அதிகம்

6. சிரிப்பவர்கள் எல்லோரும்
கவலையின்றி வாழ்பவர்கள்
இல்லை கவலையை மறக்க
கற்றுக் கொண்டவர்கள்



1. அனுபவம் இல்லாத
வாழ்க்கையும் அனுபவிக்காத
வாழ்க்கையும் வீண் தான்

2. தராசுக்கு நியாயம் எல்லாம்
தெரியாது எந்த பக்கம்
கனமாக இருக்கிறதோ அந்த
பக்கம் சாய்ந்து விடும்
இந்த உலகமும் அப்படித்தான்

3. மரணத்தைக் கண்டு
பயப்படாதே நீ இருக்கும் வரை
அது வரப்போவதில்லை
அது வரும்போது நீ இருக்கப்
போவதில்லை
பிறகு எதற்கு பயம்

4. தடைகள் ஆயிரம் வந்தால்
என்ன அடி எடுத்து வைத்து
முன்னேறு வாழ்க்கை உன்
வசப்படும்

5. காலம் விசித்திரமானது
முடிந்ததை
தொடங்கி வைக்கும்
தொடங்கியதை
முடித்து வைக்கும்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## காதல் - கல்யாணம் !

ஒரே இளநீரில் இரண்டு
ஸ்ட்ரா போட்டு குடிப்பதும்....
ஒரே ஆப்பிள் ஜூஸை ...
எச்சில் தொட குடிப்பதும்....

ஒரே ரோஸ்டை,ஒரே
தட்டில் இருவர் பங்கிட்டு
ஊட்டிவிட்டு சாப்பிடுவதும்....
காதலோடு சரி...
திருமணத்திற்கு பின்....


"உன் எச்சில் தட்டை கழுவி
வைக்க நான் என்ன வீட்டு
வேலைக்காரியா.. !"
என உருமாற்றம்
அடைவது...
சில காதலின்
சோகமான
பக்கங்கள் !



**எம்.பி. தினேஷ்.**
கோவை

## வழிகாட்டி

அன்புக்கு வழிகாட்டி
எங்கள் அறிவுக்கு ஒளியூட்டி
வாழ்வில் பண்புகள்
வளர்வதற்கு உதவும்
பரமனின் பதம் போற்றி நீரில்
ஆடும் குமிழிகள்போலே
நிலையில்லாத உலகினிலே
நேர்வழி என்றும் யாம்
நடக்க நிறைவாம் கருணை
அருள்புரிவாய் கண்ணில்
மணியாய் நீ இருக்காய்
கருத்தில் உணர்வாய்
வாழ்ந்திருப்பாய் மண்ணில்
காணும்
மாந்தருன்னை
மகிழ்வாய் கூடி
வாழ்த்துகின்றோம்.



**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை



## வரம் கேட்பேன்

ஒரு வரம் கேட்பேன்
தினம் ஒன்று கேட்பேன்
யாரும் கேட்காத
யாரும் வாங்காத
வரம் கேட்பேன்
தினம் கேட்பேன்
நீ எனக்கருள்வாய்

காலை நேரம்
கதிரவன் எழும் நேரம்
பொழுதே எழுந்து
பொழுதும் புலர
எழும் ஆதவன்
அவனை வணங்கி
அவனருள் பெறவேண்டும்

மலர் வேண்டும்
நறுமலர் வேண்டும்
மலர்கொண்டு அர்சித்து
காக்கும் உமை வணங்கி
உனக்களித்து, ஆராதித்து
எமை காப்பாய் என
காக்கும் வரம் வேண்டும்

பசியாற வேண்டும்
நான் பசியாறு முன்னே
பறவைக்கு இட வேண்டும்
வாடும் வயோதிகர்,
ஆதரவு அற்றோர்
ஊனமுற்றோர் என தினம்
ஒருவரை பசியாற்றி
நான் பசியாற வேண்டும்

வந்த நாள் நீ சொன்னதே
வாழும் வரைக்கும் நன்றி
என் வாழ்வு முடிவதையும்
அறிந்தவன் நீ அன்றோ
என்னை அழைக்கும் நாள்
நான் அறியேன் அந்நாள்
வரையிலும் மாறாதிருக்க
என் மனம் மாறாதிருக்க
அருள்
வேண்டும்
உன் அருள்
வேண்டும்



**ஓம் குமார்**
P N



யுகங்களின் பதிவுகளை
மீட்டெடுத்துக்
கொண்டிருந்தோம்
ஒரு முழு நிலவொளி நாளில்.

என் பரிசாய் ஒற்றை ரோஜா.
கூடவே படகும்.
பேசி முடித்ததும்
பயணத்திற்காய்.

முதல் வார்த்தை இன்னும்
பேசப்படாமல்.. நம்
உதடுகளைப் பூட்டி
சாவியை கடல் கொண்டு
போனது.. திறக்க ஓர்
உபாயமுண்டெனச் சொல்லி.

ரகசிய வார்த்தையை
சொல்லிப் பார்க்கலாமா
இதழ்களைச் சேர்த்து..
வானமும் நிலவும் காத்துக்
கிடக்கின்றன
இது வரை
எழுதப்படாத
அந்தக்
கவிதைக்காய்.



**ரிஷபன்**

குளிர் விலகா
முன்பனிக்காலை!

ஊர் வரைந்திருந்த
நீரோவியம்!

நடை வாசல் நீரும்,கோடு
தாண்டா கோலங்களும்!

வெளுத்திருந்த வானம்!
தீற்றலிசையில் ஒற்றை
சிறகசைப்பு!


உடல் வருடி ஜில்லிடச்செய்த
மென் காற்று!

சில மிடறு தேநீரும்
அருகிலொரு பேச்சும் காற்றில்
மிதக்கிற விழிகளுமிருந்தால்
தேவலாமென படுகிறது!

ஆமோதிக்கிறது காலம்!

இரு சக்கர வாகனத்தின்
மூச்சை நிறுத்தி விட்டு கடை
வீதி மிதிக்கிறேன்!

விலை கேட்கும்
போதே எனக்கு முன்
காய்கறி வாங்கியவள்
முகம் வரைகிறாள்
ஒற்றைக்கோட்டில்!



காக்காய் கடிகடித்துத்தின்ற
கடலை மிட்டாயும்
சொட்டாங்குபோட்டுதின்ற
உப்பு மாங்காயும்
ஞாபகத்தினருகில்!

பரஸ்பரம் கழண்டோடிய
இருவர் விழிகளும் மனதும்
ஓரமமர்ந்து பேசிவிட்டு
வருகின்றன!

பதினொன்னு பி பிரிவு முதல்
தளம் முன்னிருக்கை மாணவி!

பாடம் கற்றவள், பாடம்
சொன்னவள்.



பார்த்துக்கடக்கிறாள்,பேசிய
விழிகளையும் மௌனித்த
வார்த்தைகளையுமாய்
கையளித்து விட்டு!

விலகியிருந்தது குளிர்!


**விமலன்.**

## தாய்மண்ணைப் போற்றல் தகவு!

நேரிசை வெண்பா!

பண்பாட்டின் மூலம்
பழக்க வழக்கத்தின்
கண்ணியம் தாய்மண்ணே
காண்போமே!--
மண்வாசம் தோய்ந்து
தொடர்ந்திடக் காணுமே
எஞ்ஞான்றும் தாய்மண்ணைப்
போற்றல் தகவு!

பாட்டனும் பூட்டனும்
பண்பாட்டில் வாழ்ந்தாரே
ஈட்டிடும் செல்வம்
இனியமண்.. காட்டிடுமே
ஆய்ந்துபார் நம்மின்
அழகான பண்பாட்டை!
தாய்மண்ணைப்
போற்றல் தகவு!



## புரட்சிக்கவி பாரதிதாசனார்!

எண்சீர் மண்டிலம்.


பெண்ணடிமை போக்கிடவே
பாடல் தந்தான்
பொதுவுடைமை கண்டிடவே
கூட வந்தான்!
மண்ணடிமை நீக்கிடவே
நாடி வந்தான் மங்கையரின்
அடிமையினைப்
பாடி நின்றான்!
கண்ணியத்தைக்கவிஞர்க்குக்
கற்க வைத்தான் கவிஞர்க்கு
இலக்கணமாய்
உயர்ந்து நின்றான்!
வண்ணமுறைப்பாவியங்கள்
இயற்றித் தந்தான்
வண்டமிழை வளர்த்திடவே
நயன்மை செய்தான்!

குழந்தைமணத்திருமணத்தை
எதிர்த்து நின்றான்
கூறுகின்ற தொழிலாளர்
தம்மைக் கண்டான்!
அழகான சிரிப்புதனை
ஆக்கித் தந்தான்
ஆட்சியிலே தமிழ்வேண்டும்
என்றே சொன்னான்!
பழகுதமிழ் உலகுக்கெல்லாம்
பரவ வேண்டிப்பாடல்கள்
பாடித்தான் உயர்ந்து நின்றான்!
உழவரையே உன்னதமாய்ப்
பாடிச் சென்றான்
உலகமெல்லாம் புகழ்ந்திடவே
தாசன் வாழ்ந்தான்!

## நடனத்தை வாழ்த்து!

அறுசீர் மண்டிலம்

பண்பாட்டு
வெளிப்பாட்டின்
கருவி பாரதத்தின்
பெருமையுறு நடனம்
கொண்டாட்டம்



மூலம்தான்
நன்று கூடித்தான் மகிழலாமே
வென்று! கண்ணாக
உலகெல்லாம் போற்றும்
கருத்தோடு நடனத்தைச்
சாற்றும் விண்முட்டும்
புகழைத்தான் வெல்லும்
வெற்றிக்கு வித்தாகிச்
சொல்லும்!

கலையுலகம் தானன்றோ
நடனம் காட்சிக்கு எழிலாகும்
படிமம் நலவடிவம் தேனன்றோ
நடனம் நாளெல்லாம்
பார்த்தாலும் மகிழ்வே!
பலவடிவம் நடனத்தில்
உண்டு பண்புடனே
பணிவும்தான் கண்டு
அலையாத நெஞ்சேதான்
நடனம் ஆடிடுவார்
காண்போமே புரிந்து!

## துன்பிற்குத் துன்பம்புரி!

நேரிசை வெண்பா!

இன்பமும் துன்பமும்
ஈங்குச் சரிநிகரே
அன்பும் அரவணைப்பும்
ஆங்கேதான் -- நன்றாக்கு!
இன்னல் எதுவரினும்
இங்கே எதிர்த்துநின்று
துன்பிற்குத் துன்பம் புரி!


இடுக்கண் வருங்கால்
இனிதே நகுக
அடையாத துன்பந்தான்
ஆங்கே..உடைத்தாயின்
கன்னல் மொழிபேசி
கண்டே எதிர்த்துநின்று
துன்பிற்குத் துன்பம் புரி!

## இதழாளரைக் காப்போம்!

அறுசீர் மண்டிலம்.

நான்காம் தூணே ஊடகம்
நலமே காணும் இதழ்களே!
ஆன்ற செய்தி தந்திடும்
அறிவை மேலும் வளர்த்திடும்!
ஈன்ற செய்தி உண்மையை
என்றும் தந்தே மகிழ்ந்திடும்!
சான்றோர் நல்கும் தகவலை
சான்று தந்தே வளர்ந்திடும்!


இதழில் காணும் ஊழியர்
என்றும் நன்கே வாழணும்
பதமாய் வாழ்வை நடத்திட
பாங்காய் நாளும் சூழணும்!
இதயம் போற்றி வாழ்ந்திட
எங்கும் ஓங்கி வாழணும்!
உதயம் ஆகும் நன்மைகள்
ஊரே பேசும் இதழ்களே!




**முனைவர் இராம.வேதநாயகம்.**

# நூல் விமர்சனம்

குறிஞ்சிப் பூ இதழ்கள் !
நூல் ஆசிரியர் :
இனவெழுச்சிப் பாவலர் நா. மகிழ்நன் !
நூல் விமர்சனம் :
கவிஞர் இரா. இரவி !
செந்தமிழ்ப் பதிப்பகம்,
37, 21வது கிராஸ் பாலாஜி லே அவுட், ஒய்சலா நகர், 3வது மெயின், இராமமூர்த்தி நகர்
பெங்களூரு 560 016
விலை ரூ. 100 பக்கங்கள் 144.



பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சிப்பூ, ஒருமுறை கொடைக்கானல் சென்று இருந்த போது கண்டு மகிழ்ந்தேன். குறஞ்சி ஆண்டவர் கோவில் என்று ஒன்று உள்ளது. அதன் பின்புறம் மலர்ந்து இருந்தன. இந்த நூலின் தலைப்பான 'குறஞ்சிப்பூ இதழ்கள்' என்று படித்தவுடன் மலரும் நினைவுகளை மலர்வித்தன.

இந்த நூல் ஆசிரியர் இனவெழுச்சிப் பாவலர் நா. மகிழ்நன் அவர்களை நெருப்பலைப் பாவலர் இராம இளங்கோவன் அவர்கள் பெங்களூருவில் அறிமுகம் செய்து வைத்தார். நூலாசிரியர் தமிழ்ப்பற்று மிக்கவர், பேச்சு, எழுத்து இரண்டிலும் நல்ல தமிழ் கடைபிடித்து வருபவர். பெங்களூருவில் நடைபெற்று வரும் ஏரிக்கரை கவியரங்கம், பாவாணர் பாட்டரங்கம் உள்ளிட்ட கவியரங்குகளில் கலந்துகொண்டு கவிதை பாடி வருபவர்.

இந்த நூலில் 125 தலைப்புகளில் மரபுக் கவிதைகள் உள்ளன. மரபுக் கவிதைகள் படிப்பது என்பது பழைய பாடல்கள் கேட்டதைப் போன்ற இனிய உணர்வு தருபவை. சந்த நயம், ஓசை நயம் மட்டுமல்ல, சொற்களஞ்சியமாக நூல் உள்ளது.

வளரும் கவிஞர்கள் இந்த நூல் படித்தால் தமிழின் அருமை, பெருமை மட்டுமல்ல, பல சொற்கள் பற்றியும் அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். பல கவிதைகளில் சொற்களால் விளையாண்டு உள்ளார். சொற்கள் நடந்தால் வசனம். சொற்கள் நடனமாடினால் கவிதை. இந்த நூலில் சொற்கள் களிநடனம் புரிந்து உள்ளன. கவிதைக்கு தலைப்பிடுவதும் ஒரு கலை. தலைப்பைப் படித்தாலே கவிதையைப் படிக்க வேண்டுமென்ற ஆவலைத் தூண்டும் வண்ணம் உள்ளன. பதச்சோறாக சில தலைப்புகள் இதோ !

காதற்களியாடுவோம், கெண்டை விழிப்பார்வையால், கற்பனைக்குள் தள்ளினாள், நிகரேது தேனே, உயிருக்கு இன்பம் , ஏசுதடி என் நெஞ்சு, என்றும் தேயாது உன்முகம், குறளில் தேர்ந்தேன், மெய்தான் அன்பே, கூறடி கண்மணியே! - இப்படி 125 தலைப்புகள் உள்ளன. காதல் கவிதைகள் எந்த வயதிலும் எழுதலாம். வயது வரம்பு இல்லை. நூல் ஆசிரியர் வயது 60 கடந்த போதும் அற்புதமான காதல் கவிதைகள் அதுவும் மரபுக் கவிதைகள் எழுதி வருவதால் இன்னும் இளமையாகவே வலம் வருகின்றார்.

காதல் கவிதை எழுதுவது இளமையைத் தக்க வைத்துக் கொள்ளும் ஒரு யுத்தியாகவும் எழுதலாம். காதல் ரசம் சொட்டச் சொட்ட கவிதைகள் வடித்துள்ளார். அறிஞர் அண்ணா எழுதிய நூலிற்கு கம்பரசம் என்று பெயர் உண்டு. நூல் ஆசிரியர் நா. மகிழ்நன் எழுதிய இந்த நூலிற்கு காதல் ரசம் என்று வைத்து இருந்தால் பொருத்தமாக இருக்கும்.

சங்க இலக்கியத்தில் வரும் தலைவன், தலைவி கூற்று போலவே அவள்-அவன், கணவன்-மனைவி, காதலன்-காதலி என இருவர் கூற்றாக கவிதைகள் வடித்துள்ளார்.

### விலகிலேன் !

இனியப்பூந் தென்றல் இளைய நிலாவின் மண்ணொளித் தாரால் இதழ்விரித் தின்பம் இனிதே ஈந்திடும், வெண்முல்லை ஈர்ப்பு இருள்வான் விரிபட்டாடை ஒப்பனைச் செய்யும் செதுக்காத் தாரகை மின்னல் !

இவரது கவிதைகள் படித்த போது எனக்கு டி. ராஜேந்தர் அவர்களின் கவிதைகள் நினைவிற்கு வந்தன. எதுகை, மோனை இயைபு என எதற்கும் பஞ்சமின்றி சொல் விளையாட்டு விளையாடி வர்ணனைகள் வடித்து உள்ளார்.

### கவிதையுடன் ஏட்டில்?

ஈட்டியெனப் பாய்கின்ற ஓரவிழிக் காட்டி பூட்டியெனை அகம் வைத்தாள் புன்முறுவல் கூட்டி நாட்டியத்தின் நற்பங்கை நல்லிடையில் நாட்டி பாட்டிசைக்கும் பாவலர்க்குப் படைத்தாளே போட்டி? தலைவி தோழியிடம் தலைவனைப் பற்றி கூறுவது போல கவிதைகள் வடித்துள்ளார். அதில் சொல்லும் உவமை மிக வித்தியாசமாக உள்ளது பாருங்கள்.

### நெத்திலி மீன்சோறு !

அத்தை மகன் தந்துவிட்டப் பார்வை அடுப்பிலிட்ட நெத்திலிச் சாறாய் மரபுப் படி என்றன் நினைவில் அத்தான் நினைவாய் கொதித்து மணக்கும்! நூல் முழுவதும் காதல் காதல் காதல் காதலின்றி வேறில்லை என்று சொல்லுமளவிற்க்கு காதல் கவிதை விருந்து வைத்துள்ளார்.

### காதற்கிறுக்கு !

கண்ணுக் கினியவளே காதலியே என்றமிழின் பண்ணுக் கிசையாகும் பாவழகே மண்ணுக்குள் பொன்னழகுக் கோலமிட்ட எந்தமிழ்ப் பைங்கிளியே மின்னுகின்றாய் என் நெஞ்சில் நீ! பாடலாகப் பாடிடும் வண்ணம் இசைப்பா வடிவிலும் கவிதைகள் உள்ளன. இசையமைத்து பாடலாகப் பாடி விடலாம்.

தடுமாறிப்போகுது (இசைப்பா)

சங்கத் தமிழ் மெல்ல இங்கு நடந்து வந்தது! நடந்து வந்த அழகைக் கண்டேன் கவிதைப் பிறந்தது! கவிதையாகவும் தமிழ் அவளின் எழிலைச் சொன்னது அந்த எழிலைக் கண்ட கவிஞன் மனம் தடுமாறிப் போனது!

### இலை பூவின் மொட்டு (இசைப்பா)

அவள்செந்தாழப்பூங்கட்டுமலர் சூழ்ந்தாழும் தேன்சிட்டு இவள் திருமேனி பயிராடும் இளம்பச்சை பட்டு அவளிதழ் காட்டும் அழகோ இளம்பூவின் மொட்டு ! இசைப்பாக்களை எள்ளல் சுவையுடனும் வடித்துள்ளார். நீண்ட நெடிய கவிதைகளும் சிறு சிறு கவிதைகளும் என பல்சுவை விருந்தாக உள்ளன.


முடித்தாள் (இசைப்பா) விழியோரம் நெஞ்சுக்குத் தூது விட்டாள் எனை ஆழி நீர் சுழல் போல ஆட்டி வைத்தாள்! பழிக்காரி என்றுரைத்து வழக்கு தொடுத்தேன் கோவைப் பழவிதழ் தந்தெனக்கு வழக்கு முடித்தாள்!

நூலில் உள்ள கவிதைகளைப் படிக்கும் வாசகர்களுக்கு அவரவர் காதல் நினைவுகளை மலர்விக்கும் விதமாக கவிதைகள் உள்ளன. மாந்தோப்பும் குலுங்குதடி ! (இசைப்பா) வண்ண வண்ண நிறப் பூவாய் வந்து விழும் உந்தன் சிரிப்பாலே மண்ணும் இங்கே சிலிர்க்குதடி உன் மலர்ப்பாதம் பதிகையிலே மாந்தோப்பும் குலுங்குது!

மரபுக் கவிதைகளால் காதல் கவி விருந்து வைத்துள்ளார். காதல் கவிதை படிப்பது ஒரு சுகம். காதல் கவிதைகள் எப்போதும் சலிப்பதில்லை. மறு வாய்ப்பு செய்தாலும் சுவை தரும். நூலாசிரியர் இனவெழுச்சிப் பாவலர் நூல் முழுவதும் நல்ல தமிழில் வடசொல் இன்றி குறிப்பாக ஆங்கிலச் சொற்கள் எதுவுமின்றி கவிதைகள் வடித்துள்ளார். பாராட்டுக்கள். கவிதை என்ற பெயரில் ஆங்கிலச் சொற்கள் கலந்து தமிங்கிலம் வடிக்கும் கவிஞர்கள் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

நூலாசிரியருக்கு ஒரு வேண்டுகோள். காதல் கவிதைகள் போதும் அடுத்த நூல் இனஎழுச்சிப் பாடலாக இருக்கட்டும்.





## வானிலை !

புரியவில்லை எனக்கு
வானிலை அறிக்கை.... !
மின்னல் அடிக்கும்
என்றார்கள் அடித்தது....
காற்று வீசும் என்றார்கள்
வீசியது... வானவில்



தோன்றும்
என்றார்கள்
தோன்றியது....
மழை மட்டும்
வரவில்லை...
உன்
வரவைக்கண்டு
தானோ
வானிலை அறிக்கை
வாசித்திருப்பார்கள் !

**எம்.பி.தினேஷ்**
கோவை



## ஈன்றோரே என்றும் இறை

தோன்றிவர காரணராய்
துணையான பெற்றோர்
ஆன்றோராய் ஆக்கியே
மகிழ்ந்தார்... சான்றோரே
யாண்டும் நாம்வாழ
யாவருக்கும் ஆசியீந்த
ஈன்றோரே என்றும் இறை.

கட்டிலிலும் தொட்டிலிலும்
கருத்துடனே காத்திருந்து..
பெட்டியிலே பணம்சேர்த்து
வைத்தார்... வட்டிலிலே
சோறூட்டி வான்நிலாவை
சுட்டியவர் பசிதீர்த்த
ஈன்றவரே என்றும் இறை.

ஈன்றே புறம்தந்தாள்..
இடுப்பொடிய பாடுபட்டார்
தோன்றிவர துணையானார்!..
சான்றோனாய்..மன்றிலே
ஊன்றியெழ வளத்தவரே..
உண்டாக்கி விட்டவராம்
ஈன்றவரே என்றும் இறை.

**வே.கல்யாண்குமார்**

## குத்தாத முட்கள்

சுத்துகிற முட்கள்
குத்தாத முட்கள்
கடிகார முட்கள் எனக் கூறு.
குத்துகிற முட்கள்
போகின்ற பாதையில்
கிடப்பதை இங்கு பாரு.

சொற்களே முட்களாய்
சொந்தமே முதுகினில்
குத்தியக் காலம் பாரு.
கற்காலம் போலவே
வாழ்வின்று இல்லையே
காரணம் யாது கூறு?

விற்காத பூக்களாய்
வீதியில் கிடக்கின்ற
குத்தாத முட்கள் நூறு..
நிற்காத ஓட்டமாய்
நம்முடைய வாழ்க்கை
தினமிங்கு ஓடும் காலு..

பத்தோடு பதினொன்று
அல்ல உன் பிறப்பென்று
பாரிலே நிமிர்ந்து கூறு.
இத்தோடு முடியாது .
எழுட்சியின் பயணத்தில்
குத்திடினும் முன் னேறு.!

சித்தாந்தம் செயலாக
சிந்தனையை கூராக்கு
செயலாற்ற துணிந்து பாரு.
நித்திரை மெத்தையோ
நெருப்பாறு முட்களோ
நீந்தி நீ கரையிலேறு..!


**வே.கல்யாண்குமார்.**



## முதல்வனே

முத்தான மக்களின்
முத்திரையால் முழு நிலவு
மறைந்த பின்
மகேசனுக்கு உகந்த
மகத்தான நாளில்
மளமளவென எண்ணப்படும்
மங்கலமான ஓட்டுகள்
முதல்வன் யாரென
முடிவை சொல்லிடுமே!
மக்களை காக்க மட்டுமே
நானென மார்தட்டும்
தலைவனெல்லாம்
முதல்வன் அல்ல!
மக்களை என்றுமே
மனிதனாய் நேசிப்பவனே
மக்களின் இனிய
மனதினில் நிற்கும்
மா முதல்வன்!
முத்தான முதல்வன்!
மகத்தான சூளுரையை
மனதினில் பதித்து
மகிழ்வாய் என்றுமே
மக்களை வாழ வை!
முதல்வனே ! முதல்வனே!

**பா.கலைமகள்**
விழுப்புரம்



## தெருவிளக்கு.!

மண்விளக்கு மனஇருளை
நீக்கும்! விண்விளக்கு
வீதியெங்கும் பால்வார்க்கும்!
கண்விளக்கு மழையாகப்
பொழியும்..! என்பெயரோ..
இவ்வுலகில்
தெருவிளக்காம்.!

மழையினிலே
இருளினிலே ஒளிதரவே
தழைத்துவரும்
நிலமெங்கும் வழிதரவே
இழைந்தோடும்
இறையன்பே என்பிறப்பு!
அழைக்கின்றார்..
என்பெயரோ தெருவிளக்கு!


பொதுவுடமை என்பிறப்பின்
பொருளேயாகும்!
எளியதொரு ஈசல்என்னை
வட்டமிடும்! எதுவரினும்
எனதுபணி வெளிச்சமாகும்..
புதுஉலகே..
அழைக்கின்றேன்
தெருவினக்கு.!

ஒண்ட ஒரு குடிசையில்லா
ஏழையர்க்கு.. ஒதுக்கப்பட்டு
தெருவோரம் கிடப்பவர்க்கு..
அன்பு முதல் விளக்கென்றே
எவ்வுயிர்களுக்கும்..
ஆண்டவனே
ஏற்றிவைத்தான்
தெருவிளக்கு!

பொதுவழியை
காட்டவந்தேன் இங்கே..
பொதுமகளீர் போல் நானும்
தெருவில் நின்றேன்!
பொதுத்தொண்டின்
புகழ் விளக்காவேன்!
புதுயுகமே என்பெயர்தான்
தெருவிளக்கு!

கவிஞர்கள் அறிஞர்கள்
கலைவளத்தார்..!
காலைவரை என் ஒளியில்
கவியுரைத்தார்.!
புவியெங்கும் ஒளிதந்தேன்
அறம்வளர்த்தார்..!
தெருவெங்கும் தவமிருக்கும்
தெருவிளக்கை ஏற்றுவீரோ!

**வே.கல்யாண்குமார்.**



## அழுகை

அழுகை சத்தமில்லாத குரல்,
இதயம் உடையும் ஒலி!

கண்ணீரின் ஒவ்வொரு
துளியிலும்
ஒரு கதை இருக்கும்!

சிரிப்பின் பின்னால்
மறைந்த சோகங்கள்,
அழுகை வழியே
வெளிச்சம் காணும்!

குழந்தையின் அழுகை
பசியின் குரல்!
மனிதனின் அழுகை
வேதனையின் நிழல்!

அழுகையின் முடிவில்
மனசு இலேசாகும்!
ஆம்! அழுகையும் ஒரு
மாமருந்து!

சோகங்களின் ஒத்தடம்!
துயரங்களின் மொழியாக்கம்!
அழுகையென்ற ஒன்று



இல்லாது
போனால்
பல
இருதயங்கள்
வெடித்துச்
சிதறியிருக்கும்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## கவிஞன் !

கவிதை எப்படி எழுத
வேண்டும் தெரியுமா..

ஹைக்கூ எத்தனை வரிகள்
இருக்க வேண்டும் தெரியுமா!

புதுக்கவிதை என்பது என்ன
தெரியுமா...

மரபுக் கவிதையை
உணர்ந்ததுண்டா !

இலக்கிய காதல் கதையை
படித்தது உண்டா....

எல்லாம் தெரியவரும் ஒரே
ஒரு முறை...
காதலித்துப் பாருங்கள் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை – 25



## குருவே.. குருவியே.!

சிட்டுக்குருவி!
சிட்டுக்குருவி!
சிறந்து வாழுறீங்க.!
கட்டுப்பாடாய்..
இனிய உலகில் பறந்து
வாழுறீங்க.!

எட்டுத்திக்கும் பறந்து
சென்று.. இரையைத்
தேடுறீங்க.! விட்டுவிடாத
பாசத்தாலே
உயர்ந்து வாழுறீங்க.!


நிலையிழந்த
மனிதர்முன்னே..
நிமிர்ந்து வாழுறீங்க!

நிம்மதியாய் சிறகடித்துப்
பறந்து வாழுறீங்க.!

மலையளவு தடைவரினும்
கடந்து வாழுறீங்க.!

மலர்களிலே தேன் குடித்து
மகிழ்ந்து வாழுறீங்க.!

நாளைக்கென்று பதுக்கும்



குணத்தை
துறந்து
வாழுறீங்க.!

நற்குருவாய்
குருவிகளே
கண்ணில்
தெரியுறீங்க!

**வே.கல்யாண்குமார்.**

## இயற்கையை கவனிக்க மறந்தோமா!...

பச்சை நிற போர்வை
கொண்டு போர்த்திக்
கொண்டிருந்த பூமியின்
தூக்கம் மெல்ல கலைகிறது.

தமது செல்ல குழந்தைகளின்
தொந்தரவுகள் அளவுக்கும்
மீறியதான உணர்வில்.

மஞ்சள், சிவப்பு மலர்களின்
புன்னகையில் தேனையும்
சிந்த வைக்கும் வண்டுகள்.

தென்றல் காற்றில்
வாசனைகள் பரவி வாசல்
தோறும் வந்து
கதவை திறக்கும்.

நினைக்கத் தெரிந்த
மனங்கள் கதைகள் பல பேசி
ஆனந்தத்தை அரங்கேற்றும்.

வேர்கள் அழகிய தமிழ்
மரபுகளை காலத்தால்
கடத்திச் செல்கிறது...

மரம் செடி கொடி
எல்லாமே அபிநயத்துடன்
ஆடிடும் ஆட்டத்தை,
இசையுடன் பாடிடும் பாட்டை
கவனிக்கப்படவில்லை.

இயற்கையின் மௌன
மொழியை புரிந்து
அதன்வழி நடக்க வேண்டும்.



யாரும்
சொல்லாமலே!...

**எறும்பூர் கை. செல்வகுமார்,**
செய்யாறு.

நதியில் நீராடச் செல்லும்
பொழுதெல்லாம்
காற்றிலாடும் நாணல்
அவனை விரும்பிக்கேட்டது;

எந்நிலையிலும் பணிவு
ஒரு மனிதனுக்கு
வேண்டுமென்பதைக்
காலகாலமாய் அழுத்தந்
திருத்தமாய்ச் சொல்லும் எம்
கூட்டத்தைப் பற்றி நாலுவரி
எழுதுவீர்களா? என்று..!

காட்டாற்று வெள்ளம்; ஈவு
இரக்கமற்ற புத்தம்புதுப்
புயல்; இவற்றிற்கெல்லாம்
ஈடு கொடுத்து
சகிப்புத்தன்மையுடன் இம்
மண்ணில் வாழப் பழக்கிக்
கொண்டதால் "காலத்தால்
அழியாதப் புல்வகை எனும்



மங்காப்
புகழ்பெற்ற
நாணலே!" நீ
நீடூழிகாலம்
வாழிய...
வாழிய...
வாழியவே..!

**கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ்,**
திருச்சி

## நடிப்பால் நாட்டை ஆண்டவர்

நடித்தார் நடித்தார்
நாட்டையே பிடித்தார்
நாட்டைப் பிடித்தபின்
நடிப்பையே விட்டார்
மக்கள் துடிப்பையே
பிடித்தார்
களைவதற்கு.

வெள்ளித்திரையில்
நடித்தார் ஆட்சித்துறையில்
நடிக்காது துடித்தார்
நலப்பணி ஆற்றிட
பிடித்தார் இடத்தை
மக்கள் மனதினிலே !!

மூன்றெழுத்தில்
மூச்சென்றார்
நான்கெழுத்தாய்
மாறிநின்றார்
ஐந்தெழுத்தில் புகழ்
பெற்றார் ஆறெழுத்து
விருது பெற்றார்
எட்டெழுத்தில்
அடக்கமானார்



நடிப்பால்
நாட்டை
ஆளும்போது
நடிக்காது
ஆண்ட
நல்லவர்.

**சண்முக சுப்பிரமணியன்**


## ஹைக்கூக்கள்

நங்கூரமிட்ட படகு/
நுரையும் ஓசையும் மோத/
நகர்கிறது பகல்./
*********
பாதி நிழலை /
பாசிக்குத் தாரை வார்க்கும்/
கரையோர மரம்./
*********
'ஆசை அற்றவனுக்கே
இன்பம்' / உத்தரவாதம்
கிடைக்காமல்
திரும்புகிறேன்/
புத்த ஆலயத்திலிருந்து/
*********
பூந்தொட்டியை
நகர்த்துகையில்/
புலம் பெயரும்
பட்டாம்பூச்சிகளை/
சரிபாதியாய் மூடிடும்
சிறகுகள்/
********
சிந்தும் ஒளியை
அழித்து/
சாலையைச் சுத்தம்
செய்தவாறே/
பேருந்தைத் துரத்தும்
இருள்/
********
அறுவடைக் காலம்/
வயலுக்கு வயல்
அனாதையாகும்/
பொம்மைகள்./
*********
அனைத்து பள்ளி
அங்கீகாரம்/ மாலை
மணியோசையைத் தொடரும்/
மாணவர் ஆரவாரத்திற்கு/
********
நல்லடக்கம் முடிந்து
திரும்புகையில்
வரவேற்கின்றன உதிர்ந்த
குல்மொஹர்கள்/
நான்கு–நாள்
பத்திரிகைகளுடன்/
*********
நீண்ட நிழலின் உச்சியிலேறி/
வெப்பத்தைத் தணித்துக்
கொள்கிறது/ மாலையில்
மரம்./
********



வெளிச்சத்தை
இருட்டடிப்பு செய்து/
இருளில் கோட்டோவியம்
வரையும்/
மின்மினிகள்./

**முனைவர் வே. புகழேந்தி,**
பெங்களூரு



மஞ்சத் தேச்ச முகம்
மாமனுக்குக் காத்திருந்து
வாடிப் போய் கிடக்கேடி!
வேகமா வந்துடுறேன்!
மாட்டு வண்டி பூட்டிக்கிட்டு
சந்தைக்குப் போய் வரலாம்!!

தெம்மாங்கு பாட்டுக்கட்டி
வகை வகையா நான் பாட!
பக்கத்துல ஒய்யாரமா
எசைப் பாட்டு
கட்டழகி நீ பாட!!

ஓரக் கண்ணால
உன்னை நான் பார்க்க!
வெத்தலை போட்ட
சிவப்பாட்டம்
உன் கன்னம் சிவப்பாக!
தத்தளிக்கும் என் மனசு
றெக்க கட்டி பறக்க!!

புத்தம் புது ரோசாவாய்
புன்னகையை நீ பூக்க
தலை காலு புரியாம
தடுமாறி நான் போக!!

ஆசைப்பட்ட பைங்கிளியே!
உன்னைப் போல பேரழகி
பூமியில இல்லயடி!

என்ன தவம் செய்தேன் ;உன்
மாமனாய் நான் பிறக்க!!!

கண்ணாடி வளையலிட்டு
திண்ணையில உக்காந்து
வண்ணப் பூ கட்டும் மயிலு
எண்ணமெல்லாம் மாமன்
எழிலு!!!

பட்டுப் பாவாடை கட்டி
சிட்டுப் போல சிரிச்சிருப்பா!
கண்ணு பட்டு போகுமுனு
சுத்தி போட வாறேன் புள்ள!!

**Nishaa**

## ஹைக்கூ !

சிலமணி நேரத்தில்
சிதைந்தது வாழ்க்கை
கசாப்புயல் !

உணர்த்தியது
வாழ்வின் நிலையாமையை
புயல் !

பெயர் சூட்டுவது
இருக்கட்டும் வரும்முன்
அறிவியுங்கள்
புயலை !

காற்றின்
கோரத்தாண்டவம் புயல் !

குறை தீர்க்கும் நாள்
கூட்டம் கூட்டம்
குறை தீர்ந்தபாடில்லை !

தாங்கமுடியவில்லை
தமிழக மீனவர்களுக்கு
இலங்கையின் இடையூறு !

காற்றால் நகர்ந்தால்
கைது செய்யும்
இலங்கைப்படை !

கணினியுகத்தில்
தூக்கிலிடுங்கள்
தூக்குத் தண்டனையை !

தந்தது முன்னேற்றம்
பெண்கள் வாழ்வில்
சுயஉதவிக்குழு !

உருகி விடுகின்றன
ஐஸ் கட்டியாக
அரசின் திட்டங்கள் !

கட்டித்தருவோம் வீடு சரி
அதுவரை எங்கு வாழ்வது
சோகத்தில் மக்கள் !

வேதனையில்
சாகிறான்
மரம் வைத்தவன்
சாய்த்தது புயல் !

நிகழ்ந்தது தோல்வி
நெகிழி ஒழிப்பில்
ஒத்துழைக்காத மக்கள் !

எடுத்துச் செல்லுங்கள்
கேவலமல்ல துணிப்பை !

நடிகர்கள் கோடிகள் ஈட்ட
ரசிகர்கள் செலவழிப்பு
பணம் !

குப்பையோடு நாற்றமும்
சிந்தியபடி சென்றது
குப்பைவண்டி !

மூடநம்பிக்கை பரப்பும்
மூடர்கள் நிறைந்துள்ளனர்
தொ(ல்)லைக்காட்சியில் !

காரணியாகின்றன
விபத்துக்கு வேகத்தடைகள் !

ஓய்ந்தது அலை சுருங்கியது
தாமரை தேர்தல் முடிவு !

பண மதிப்பு இழப்பால்
இழந்தனர் மதிப்பை
தேர்தலில் !

கூட்டினர் வரியை
குறைத்தனர் தொகுதியை
மக்கள் !

மாட்டுக்காக மனிதனை
கொன்றவர்களை
தண்டித்தனர் மக்கள் !

பயன்படுத்தாவிட்டால்
துரு பிடிக்கும் இரும்பும்
மூளையும் !

எதிர்பார்ப்பு அதிகரிக்க
மிஞ்சுவது ஏமாற்றம் !

தாவுவதில்



வென்றனர் குரங்கை
அரசியல்வாதிகள் !

உடன்பிறந்த நோயானது
ஊழல்
அரசியல்வாதிகளுக்கு!

**கவிஞர் இரா .இரவி !**

## பிறந்ததே புண்ணியம்

பூவே பூ பார்த்த நேரம்
புனிதம் பிறந்தது அந்த
காலம்.....

சிறகு இல்லாத மலர்
அதன் வாசனை பறந்து
செல்லும் சில தூரம்...

எத்தனை அழகு மலர்கள்
நிகரான அழகு மழலைகள்...

நட்டவனுக்கு நன்றி
சொல்லதானே...
இருந்த இடத்தை
அலங்கரித்தாய்...

உன் கழுத்தை திருகி
துண்டித்த பின்பும்...
கவலையில்லாமல்
கமகமத்தாய்...

தலையில் சூடினாலும்..
தங்க தேரில் ஏற்றினாலும்
தரையில் போட்டு
மிதித்தாலும்...
உன் தரத்தை நீ
காத்திருந்தாய்....



பூவாய்
பிறந்ததே
புண்ணியமே....!!

**பொன். கருணா**
நவி மும்பை

## வயலும் வாழ்வும்

வயல்வெளி காண வடக்கு
நோக்கி சென்றேன்!
வயல்வெளிகள் வீடுகளாக
காட்சியளித்தது!
தண்ணீரைக் காண
தஞ்சை நோக்கி
சென்றேன் தண்ணீரின்றி
தரையாகிவிட்டது
காவிரிப்படுகை! தொண்டை
மண்டலம் காண காஞ்சிக்கு
சென்றேன்! பாலாறு பால்
மணலாறாக் ஓடியது
கண்டு கலங்கினேன்! ஏரி
ஜில்லா சென்றேன் ஏரிகள்



வீடுகளாயின!
திரும்பினேன்
தென்னாட்டுக்கு,
திருநெல்வேலி
சீமை,
தாமிரபரணி
வற்றி
தரையாகிகிடந்தது
வயலுக்குள் வாழும் வாழ்வு!

**எஸ் சந்திரசேகரன் அமுதா**

## தாமரை மலர்

தாமரை மலர் தரணியில்
தனிமலர், நமது தேசிய
மலர், செந்தாமரைச்வ
செல்வி, வெண்டாமரைத்
தேவி, வெண்டாமரை
தேவன், என தெய்வங்களை,
துதித்து வணங்கும்
புனிதமலர், மதபேதமின்றி
அனைத்து ஆலயங்களிலும்
ஆராதனைக்கு பயன்படும்
தாமரைமலர் ஆறுதாமரை
மலர்களில் ஆறுமுகன்
தவழ்ந்ததாக, ஆன்மீகம்



கூறுகிறது.
தாமரைத்
தண்டுத் திரி
ஒளிவிளக்கேற்ற
உகந்தது.

தன்னிகரில்லா
தாமரையை நாமும்
போற்றுவோம்.

**தயாளன்** காட்பாடி சேவூர்.

## உலக கவிதை தினம்

சிந்தனை தவத்தில் பிறந்தவள்!
கற்பனை வளத்தில் மலர்ந்தவள்!
தமிழால் நாளும் வளர்ந்தவள்!
வார்த்தை ஜாலம் நிறைத்தவள்!
ஒப்பனை அழகில் சிறந்தவள்!


புத்தக வடிவில் நிலைப்பவள்!
படிப்பவர் மனதை ஈர்ப்பவள்!
இசையுடன் கலந்து இனிப்பவள்!
துன்பங்கள் எல்லாம் தீர்ப்பவள்!
இன்பம் இரண்டாய் கொடுப்பவள்!

கவிதை என்னும் கலைமகள்!
பலருக்கு அவள்தான் அலைமகள்!
மலருக்குள் தேனான மலைமகள்!
நிலையாய் நிலைத்த சிலை மகள்!
நானும் அவளால் வாழுகிறேன்.



அவளை
வணங்கி
வாழ்த்துகிறேன்.

**கவிஞர் பொன். பனகல் பொன்னையா**

























## ATTENTION

## ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு

10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.

திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள
சாரதா கம்பெனிக்கு

## ஆட்கள் தேவை

**ஆண்கள் மட்டும்**
வயது: 18 முதல் 35 வரை

**கல்வி தகுதி**
**10 முதல் any Degree**

தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற
அனைத்து வசதிகளும் உண்டு

சம்பளம் :
**18,000 முதல் 22,000 /-**
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com




## WANTED

**READYMADE SHOWROOM:**
• Sales Man / Sales Girl

**RESTAURANT :**
• Briyani Master
• Chinese Master
• Atho Master
• Chef
• Helper

**OTHER POSITIONS:**
• Accounts
• Billing
• Internet Engineer

PLACE: T NAGAR, NAVALUR

CALL / WHAT'SAPP:
7550123560
6369528629




GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹ 1.80
லட்சம்
800 SQFT
1. முன்பணம் ₹ 1,00,000/-
2. 50% பணம் செலுத்தினால் பத்திரப்பதிவு செய்யப்படும்.
3. மாதம் குறைந்தபட்சம் ₹.2500/- முதல் செலுத்தலாம்
4. முழு தொகையும் செலுத்திய பின்பு உரிய நபரிடம் பத்திரம் ஒப்படைக்கப்படும்.
5. பத்திரப்பதிவு
6. பட்டா COPY
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN சேமியுங்கள்
அரக்கோணம் பாராஞ்சி
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118


WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF
(Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD
(Male & Female)
ELECTRICIAN & HELPERS
(Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


குன்னத்தோழம்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெனிழக்கு வுரளன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379


ADVERTISE
WITH US
7789941009


ULTRA SEC FACILITY FORCE
YOUR SAFETY, OUR COMMITMENT
OUR SERVICES
Security Services
(Trained Security Guards, Supervisors, 24x7 Coverage)
Facility Management Services
(Housekeeping, Maintenance, Cleaning)
Manpower Supply
(Skilled & Unskilled Stafffor Industries. Apartments, Offices
WHY CHOOSE US?
• Experienced & Professional Team
• 24/7 Reliable Support
• Affordable & Transparent Pricing
• Customized Service Plans
ULTRA SEC FACILITY FORCE
Flat No : 13A, Door No: 1,
Moovarasampet Main Road,
Madipakkam, Chennai-600091.
+91 93632 98980
ultrasecfacility@gmail.com
www.ultrasecfacility.com


WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு
8148215778
8248610592
A trustworthy help service for Chennai families


உ
முருகன் துணை
A.S.R
ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591,9578622711


ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.


SHRI RAGHAVENDRA SCAN CENTRE
We Are
HIRING
PRO
PUBLIC RELATION OFFICER
DIAGNOSTIC ULTRASOUND & COLOUR DOPPLER STUDIES
TIMING : 9AM-8PM
Attractive salary package
@TONDIARPET
+91 8189997221
+91 9094337745
ADDRESS:THAI APARTMENTS 618 T.H.ROAD (NEAR) TONDIARPET METRO STATION CHENNAI-81


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennal
Real Choice Chennal
Real Choice Chennal


THANIGAI
WANTED
ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
☑ Flexible work
☑ No Age Limit / No Investment
☑ No Experience/No Qualification
☑ No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy
90879 55111


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
• Location: (Nr Mylapore Jn)
• Direction: N/ Face
• Total Area: 2400 sft
• Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com



எலாவூர் மிக அருகில்
சுண்ணாம்பு குளம்
Sqft ₹120/_
(மினிமம் 10000sqft)
Ph.9600660997

























## Special Invitation


to retired seniors housewwives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided


For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780





# பல்சுவை களஞ்சியம்




## மூன்று விஷயங்கள்

1. மூன்று விஷயங்கள் யாருக்காகவும் காத்திருப்பது இல்லை.
நேரம்
இறப்பு
வாடிக்கையளர்கள்

2. மூன்று விஷயங்கள் சகோதர சகோதரிகளையும் விரோதியாக்கும்.
நகை
பணம்
சொத்து

3. மூன்று விஷயங்கள் யாராலும் திருடமுடியாது.
புத்தி
கல்வி
நற்பண்புகள்

4. மூன்று விஷயங்கள் ஞாபகம் வைத்திருப்பது அவசியம்.
உண்மை
கடமை
இறப்பு

5. மூன்று விஷயங்களி வெளிவந்து திரும்புவதில்லை.
வில்லிலிருந்து அம்பு
வாயிலிருந்து சொல்



உடலிலிருந்து உயிர்

"6. மூன்று பொருள்கள் வாழ்க்கையில் ஒருமுறைதான் கிடைக்கும்.
தாய்
தந்தை
இளமை

7. இந்த மூன்று பேர்களுக்கும் மரியாதை கொடு.
இறைவன்
தாய்
தந்தை

நம்மை உயர்த்தும் ஏழு விஷயங்கள்:
1) ஏழ்மையிலும் நேர்மை
2) கோபத்திலும் பொறுமை
3) தோல்வியிலும் விடாமுயற்சி
4) வறுமையிலும் உதவிசெய்யும் மனம்
5) துன்பத்திலும் துணிவு
6) செல்வத்திலும் எளிமை
7) பதவியிலும் பணிவு

வழிகாட்டும் ஏழு விஷயங்கள்:
1) சிந்தித்து பேசவேண்டும்
2) உண்மையே பேசவேண்டும்
3) அன்பாக பேசவேண்டும்
4) மெதுவாக பேசவேண்டும்
5) சமயம் அறிந்து பேசவேண்டும்
6) இனிமையாக பேசவேண்டும்
7) பேசாதிருக்க பழக வேண்டும்

நல்வாழ்வுக்கான ஏழு விஷயங்கள்:
1) மகிழ்ச்சியாக இருக்க பழகுங்கள்
2) பரிசுத்தமாக சிரிக்ககற்று கொள்ளுங்கள்
3) பிறருக்கு உதவுங்கள்
4) யாரையும் வெறுக்காதீர்கள்
5) சுறுசுறுப்பாக இருங்கள்
6)தினமும் உற்சாகமாக வரவேற்கத் தயாராகுங்கள்
7) மகிழ்ச்சியாக இருக்க முயற்சி மேற்கொள்ளுங்கள்

கவனிக்க ஏழு விஷயங்கள்:
1) கவனி உன் வார்த்தைகளை
2) கவனி உன் செயல்களை
3) கவனி உன் எண்ணங்களை
4) கவனி உன் நடத்தையை
5) கவனி உன் இதயத்தை
6) கவனி உன் முதுகை
7) கவனி உன் வாழ்க்கையை

## சில பழமொழிகள் சில தப்பான அர்த்தங்கள்

** சனி நீராடு என்றார் ஆத்திச்சூடியில் ஔவையார் அவர்கள். அதை நாம் சனிக்கிழமை அன்று எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும் என்ற தவறான ஒரு அர்த்தத்தை எடுத்துக் கொண்டு விட்டோம். அது அப்படி அல்ல.

சனி நீராடு என்பது, சனித்த நீரில் அதாவது, புதிதாக உருவாகிய ஓடிக் கொண்டேயிருக்கும் ஆற்று நீரும், ஊற்றாகப் பொங்கும் ஊற்று நீரும் சனித்த நீராகும். இதில் பிராண ஆற்றல் மிகுந்திருக்கும். இதில் குளிப்பது ஆரோக்கியம் என்பது தான் நிஜமான அர்த்தம்.

** கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே. இதற்கு நாம் தவறான பொருள் என்ன எடுத்துக்கொண்டோம். கப்பலே கவிழ்ந்து விட்டாலும் உன் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கவலையில் உட்காராதே என்று.

ஆனால் உண்மையான பொருள் என்னவென்றால் கப்பல் வியாபாரம் செய்வது என்பது ஒரு பெரிய விஷயம் அப்படி கப்பல் கவிழ்ந்து விடும் பொழுது பொருள் நஷ்டம் மிகவும் ஆகிவிடும். கையில் எதுவுமே காசு இருக்காது அந்த சமயத்தில் கன்னக்கோலில் கை வைக்காதே. திருடனுடைய கோள்தான் கன்னக்கோல்.



வறுமையில் வாடும் பொழுது, வியாபாரத்தில் அனைத்தையும் இழக்கும் போது, திருடினால் என்ன என்ற எண்ணம் வரக்கூடாது என்பதுதான் அதன் அர்த்தம். கப்பல் கவிழ்ந்தாலும் கன்னக்கோலில் கை வைக்காதே என்பது மருவி கன்னத்தில் என்று வந்துவிட்டது.

ஊருக்கு இளிச்சவாயன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்று நாம் நினைப்பது, பிள்ளையார் கோவிலில் உள்ள ஆண்டியை யாரும் கவனிப்பதில்லை என்பது பொருள். ஆனால் உண்மையான பழமொழி என்னவென்றால் ஊருக்கு வெளிச்சம் பிள்ளையார் கோயிலாண்டி என்று. ஊர் முழுக்க வெளிச்சம் அடங்கி விட்ட போதிலும் பிள்ளையார் கோவிலில் மட்டும் விளக்கின் ஒளியால் வெளிச்சம் இருந்து கொண்டே இருக்கும் என்பது தான் அதன் அர்த்தம்.
இது போன்ற நிறைய விஷயங்களை நாம் தவறாக கணித்துக் கொள்கிறோம்.

## மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம் அது என்ன? | கொசு |
| மழையில் பிறந்து வெயிலில் காயுது? | காளான் |
| அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான், அவன் யார்? | பந்து |
| வட்ட வட்ட நிலவில் வரைஞ்சிருக்கு; எழுதியிருக்கு. அது என்ன? | நாணயம் |
| ஓடையில கருப்பு மீனு துள்ளி விளையாடுது அது என்ன ? | கண் |
| பூ பூப்பது கண்ணுக்குத் தெரியும். காய் காய்ப்பது கண்ணுக்குத் தெரியாது. அது என்ன? | வேர்கடலை |
| பட்டுப்பை நிறைய பவுண் காசு. அது என்ன? | வத்தல் மிளகாய் |



## ஜோக்ஸ்

தத்துவம்
ஏழு பரம்பரைக்கு உட்கார்ந்து சாப்பிடுற அளவுக்கு சொத்து இருந்தாலும் பாஸ்ட் புட்க்கு போனா நின்று தான் சாப்பிடணும்.
------------------------------------------------------------------

தோழிகள் இருவர் பேசிக் கொள்கிறார்கள்
ராதா: நேத்து உன் லவ்வரை பார்க்க கூஷநநஉh-க்கு போறதா சொன்னியே! என்ன ஆச்சு?

கீதா: அட! அத ஏண்டி கேக்குறா? வாத்தியாரை லவ் பண்ணது தப்பா போச்சு!

ராதா: ஏன்! என்ன ஆச்சு?

கீதா: கொஞ்ச நேரம் லேட்டா போனேன். அதுக்காக படகு மேல ஏறி நிற்க சொல்லிட்டாருடி!

ராதா: ஹா! ஹா! ஹா!
--------------------------------------------------



முத்தம்
கணவன்: டார்லிங்! நான் இந்த மாச சம்பளத்துக்கு பதிலா 500 முத்தம் தரலாம்-னு நினைக்கிறேன். என்ன டிம தானே?

மனைவி: எனக்கொன்னும் பிரச்சினை இல்லை. நானும் அப்படியே கேபிள் காரனுக்கு 30 முத்தம், பால்காரனுக்கு 50 முத்தம், பேப்பர் காரனுக்கு 20 முத்தம், மளிகை கடைகாரனுக்கு 150 முத்தம். அவுஸ் ஓனருக்கு 250 முத்தம் கொடுத்துடுறேன் என்ன? ஓ.கே. தானே?

கணவன்: ???
--------------------------------------------------

தொலைக்காட்சி விளம்பரம்
வரும் சனிக்கிழமை இரவு பத்து மணிக்கு... உங்கள் அபிமான தொலைக்காட்சியில்... அற்புதமான ஹாலிவுட் திரைப்படம்... தமிழில்

சிலந்தி அண்ணாச்சி (Spiderman)

உங்களின் விடுமுறை நாளை குதூகலமாக கொண்டாட ஞாயிற்றுகிழமை மதியம் 2 மணிக்கு

சூப்பர்ஹிட் ஹாலிவுட் திரைப்படம்

"அம்மாச்சி திரும்ப வந்தாச்சு" (Mummy Returns)

முற்றிலும் தமிழில்... காணத்தவறாதீர்கள்!!!





# பன்முகம்



## மகிழ்ச்சிக்கான மந்திரங்கள்!

எல்லோரும் வாழ்வில் சந்தோஷத்தை தேடிக்கொண்டே இருக்கிறார்கள். உண்மையில், மகிழ்ச்சிக்குமான மந்திரங்கள் ரகசியமானவை அல்ல, எளிமையானவை.

அவற்றில் சில இதோ...

* எப்போதும் முதலில், உடம்பை பார்த்துக் கொள்ளுங்கள். சுவர் இருந்தால்தான் சித்திரம்.

* உடனடி சந்தோஷத்தை மட்டும் பார்க்காதீர்கள், பின்விளைவுகளை யோசித்து மனசை கட்டுப்படுத்தப் பழகுங்கள்.

* உங்களுடைய உறவுகளுக்கு, நண்பர்களுக்கு, தொழில் கூட்டாளிகளுக்கு விசுவாசமாக இருங்கள்.

* உங்கள் வயசு எதுவானாலும் பரவாயில்லை, குழந்தைகளோடு நேரம் செலவிடுங்கள்.

* பெற்றோரை மதியுங்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுங்கள்.

* அடுத்தவர்களுக்கு நான் ஒரு நல்ல முன்னுதாரணமாகத் திகழ்வேன் என்று உங்களுக்கு நீங்களே உறுதி எடுத்துக்கொள்ளுங்கள்.

* உண்மை எத்தனை கசப்பானாலும் பரவாயில்லை, ஏற்றுக்கொள்ளுங்கள்.

* யாரையும் வருத்தப்பட வைக்காதீர்கள், வார்த்தைகளால் கூட.

* சட்டவிரோதமான எதையும் செய்யாதீர்கள், அதனால் எத்தனை லாபம் வந்தாலும் சரி!

* பாரபட்சமின்றி சமூகத்தில் ஒரு சமநிலை வருவதற்கு உங்களால் என்ன செய்ய முடியும் என்று யோசிக்க ஆரம்பியுங்கள்.

* ஒருவர் நல்லது செய்யும்போது, ஏதாவது சொல்லி அவரது முயற்சியைக் கெடுத்து விடாதீர்கள்.

* உங்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது உங்களுடைய பொறுப்பு என்று உணர்ந்து நடங்கள்.

* தவறான வழியில் செல்லாதீர்கள்.

* எல்லோருடைய நம்பிக்கைக்கும் உரியவராக இருங்கள்.

* சொன்ன வாக்கை மீறாதீர்கள். நிறைவேற்றுவது கடினம் என்று தோன்றினால், வாக்குக் கொடுக்காதீர்கள்.

* 'சும்மா இருப்பதே சுகம்' என்று யாராவது சொன்னால் நம்பாதீர்கள். அவ்வப்போது ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் வெட்டியாய் பொழுதைக் கழிப்பதைத் தவிருங்கள்.

* வருடத்துக்கு ஒரு புதிய மென்திறனாவது கற்றுக் கொள்ளுங்கள். நம்மை விடச் சிறியவரிடமும் கற்றுக்கொள்ளலாம். தவறில்லை.

* கல்வி என்பது முடிவற்றது, எந்நேரமும் மாணவர் போல் வாழ வேண்டும். கிடைக்கும் ஒவ்வொரு அனுபவமும் பாடம்தான். சந்திக்கும் ஒவ்வொருவரும் ஆசிரியர்தான்.

* அடுத்தவர்களுடைய மத உணர்வுகள், நம்பிக்கைகளை மதியுங்கள், கேலி செய்யாதீர்கள்.

* மற்றவர்கள் உங்களுக்கு எதையெல்லாம் செய்யக்கூடாது என்று நினைக்கிறீர்களோ, அதை நீங்களும் அவர்களுக்குச் செய்யாதீர்கள்.

* மற்றவர்கள் உங்களை எப்படி நடத்த வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அப்படியே நீங்கள் அவர்களை நடத்துங்கள்.

* பெருந்தன்மையோடு நடந்துகொள்ளுங்கள். எப்போதும் உங்கள் நலத்தையும், உங்கள் வசதியையும் மட்டுமே முன்னிறுத்தாதீர்கள்.

* இந்த உலகம் வளங்களால் நிறைந்தது, அள்ளிக் கொடுங்கள். ஏனென்றால் நாம் போகும் போது சிறிதும் கிள்ளிச் செல்ல முடியாது.

* நம்பிக்கைதான் வாழ்க்கை. எப்போதும் நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள். நாளையே எல்லாம் மாறும்.



# கோடை காலத்தில் வெள்ளரிக்காய் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்...

கோடை காலத்தில் தாகம் தணிக்கும் பழங்கள், காய்கறிகளின் பட்டியலில் வெள்ளரிக்காய்க்கு எப்போதுமே மவுசு உண்டு. அது வெறுமனே நீரிழப்பை தடுக்கும் தன்மையை மட்டும் கொண்டிருக்கவில்லை. உடலுக்கு நன்மை அளிக்கும் ஏராளமான சத்துக்களையும் கொண்டிருக்கிறது. அதனை தெரிந்து கொள்வோமா?

**1. நீரேற்றத்தை அதிகரிக்கும்**

வெள்ளரிக்காயில் கிட்டத்தட்ட 95 சதவீதம் நீர்ச்சத்து இருப்பதால் இயற்கையாகவே உடலை நீரேற்றத்துடனும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்க உதவும். செரிமானம், ரத்த ஓட்டம், உடல் வெப்பநிலையை கட்டுப்படுத்துவதற்கும், உடல் ஊட்டச்சத்துக்களை விரைவாக உறிஞ்சுவதற்கும் துணைபுரியும். வெப்பமான நாட்களிலோ அல்லது உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இயங்கும்போதோ வெள்ளரிக்காய் உட்கொள்வது நீரேற்ற அளவை கட்டுக்குள் வைத்திருக்க சிறந்த வழியாகும்.

**2. எலும்பு ஆரோக்கியத்தை பலப்படுத்தும்**

வெள்ளரிக்காயில் இருக்கும் வைட்டமின் கே, உடல் கால்சியத்தை உறிஞ்சுவதற்கும், எலும்புகளை பராமரிப்பதற்கும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு கப் நறுக்கிய வெள்ளரிக்காய் தினசரி வைட்டமின் கே தேவையில் சுமார் 20 சதவீதத்தை பூர்த்தி செய்துவிடும். மூட்டுகள் மற்றும் இணைப்புத்திசுக்களை ஆதரிக்கும் சிலிக்கா என்னும் நுண்ணிய தாதுக்களையும் கொண்டிருப்பதால் வயதானவர்கள் வெள்ளரிக்காய் சாப்பிடுவது அவசியமானது.

**3. செரிமான ஆரோக்கியத்தை மேம்படுத்தும்**

செரிமானத்திற்கு உதவிடும் சிறந்த நண்பனாக வெள்ளரிக்காய் விளங்கும். அதிலிருக்கும் நார்ச்சத்து மலச்சிக்கலை தடுத்து, கழிவுகளை எளிதாக வெளியேற்ற உதவிடும். அதாவது வெள்ளரிக்காயில் இருக்கும் அதிக நீர்ச்சத்தானது உடலில் இருக்கும் கழிவுகளை மென்மையாக்கி செரிமானத்தை எளிதாக்கும்.

**4. எடை மேலாண்மைக்கு உதவும்**

எப்போதும் பசியாக உணராமல், கலோரி அளவை குறைவாக வைத்திருக்க முயற்சிக்கிறீர்களா? வெள்ளரிக்காய் சிறந்த தீர்வாக அமையும். அதிலிருக்கும் நார்ச்சத்து மற்றும் நீர்ச்சத்து காரணமாக நீண்ட நேரம் வயிறு நிறைந்த உணர்வை தரும்.

**5. இதய ஆரோக்கியம் காக்கும்**

வெள்ளரிக்காயில் உள்ள பொட்டாசியம், உடலில் சோடியம் அளவை சமநிலைப்படுத்த உதவும். ரத்த அழுத்தத்தை பராமரிக்கவும் வழிவகுக்கும். அதுமட்டுமின்றி, வெள்ளரிக்காயில் உள்ள நார்ச்சத்து மற்றும் ஆன்டி ஆக்சிடென்ட் சேர்மங்கள், இதய நோய்க்கு வித்திடும் ஆபத்துக் காரணிகளான கெட்ட கொலஸ்ட்ரால் மற்றும் அழற்சியை குறைக்க உதவக்கூடும்.

**6. சரும ஆரோக்கியத்தை மேம்படுத்தும்**

அழகு நிலையங்களில் வெள்ளரிக்காய் துண்டுகள் பயன்படுத்துவதற்கு முக்கிய காரணம், அதில் இருக்கும் அதிக நீர்ச்சத்து சருமத்தை ஈரப்பதமாக்குவதுதான். அதே நேரத்தில் சிலிக்கா, கொலாஜன் உற்பத்தியை அதிகரித்து சருமத்தை மென்மையாக்குகிறது. மேலும் வெள்ளரிக்காயில் காணப்படும் ஆன்டி ஆக்சிடென்டுகள் சருமம் வயதாவதைத் தடுக்கவும். சூரிய ஒளி மற்றும் மாசுபாட்டினால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கவும் உதவுகின்றன.

**7. ரத்த சர்க்கரையை நிர்வகிக்கும்**

வெள்ளரிக்காயில் இயற்கையாகவே கார்போஹைட்ரேட் மற்றும் கிளைசெமிக் குறியீடு குறைவாக இருப்பதால் ரத்தத்தில் சர்க்கரையை நிர்வகிப்பதற்கு சிறந்த தேர்வாக அமையும்.

**8. நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்தும்**

மூட்டு வலி முதல் இதய நோய் வரை பல உடல்நலப் பிரச்சனைகளுக்கு நாள்பட்ட அழற்சியே மூல காரணமாகும். வெள்ளரிக்காயில் உள்ள ஆன்டி ஆக்சிடென்டுகள் இந்த பிரச்சனையை கட்டுப்படுத்த உதவிடும். அதனை தவறாமல் சாப்பிடுவது வீக்கத்தை குறைக்கவும், உள் எரிச்சலைக் கணிக்கவும், நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்தவும் உதவும்.



# பெண்களை பாதிக்கும் எலும்பு தேய்மானம்

சமீப காலமாக அனைவரையும் பயமுறுத்தி வரும் பாதிப்பு எலும்புத் தேய்மானம். இதனை ஆங்கிலத்தில் osteoporosis என்பார்கள். இதை ஒரு நோய் என்பதை விட குறைபாடு என்பது மிகப் பொருந்தும்.

அதாவது மனிதன் முதுமை அடையும் போது ஏற்படும் உடல் மாற்றங்களில் இந்த எலும்புகளும் சேதம் அடையத் தொடங்கிவிடுகின்றன. மிக மெதுவாக தேயத் தொடங்கும் எலும்புகள் பிற்காலத்தில் ஏற்படுத்தும் நோயின் தீவிரம் ஆளைக் கொல்லும் வலிமை உடையது.

முதுமையில் பொதுவாக 40 வயதைத் தொடும் பொழுது மனித எலும்புகள் தனது வலுவை இழக்கத் தொடங்கிவிடுகின்றன. இதனைத் தான் மருத்துவர்கள் எலும்புத் தேய்மானம் என்று பொதுவாக விளக்கம் அளிக்கிறார்கள்.

இது பொதுவாக பெரும்பாலும் பெண்களை அதிகமாக அவதிகுள்ளாக்கிவிடுகிறது. பெண்களில் 40 வயது முதல் இந்த நோயின் தாக்கம் ஏற்படத் தொடங்கி அவர்கள் வயது அதிகரிக்க அதிகரிக்க நோயின் தீவிரம் அதிகரித்து மிகத் தீவிரமான பக்கவிளைவுகளை ஏற்படுத்திகிறது.

எலும்புகளுக்குத் தேவையான முக்கியமான ஒன்று கால்சியம் என்ற தாது உப்பு. இந்த தாது உப்பை எலும்புகள் நாம் உண்ணும் உணவில் இருந்து எடுத்துகொள்ளும் தன்மை கொண்டுள்ளது. இந்த குணம் பொதுவாக நாம் முதுமையை நெருங்கும் பொழுது மெதுவாக மாறியும் மறைந்தும் போய்விடுவதால் எலும்புத் தேய்மானம் வருகிறது.

அதாவது முக்கியமாக பெண்களில் உதிரப்போக்கு நின்று போகும் காலகட்டங்களில் உடலில் ஏற்படும் ஹார்மோன் மாறுபாடுகளால் எலும்புகளில் கால்சியம் உப்பை சேகரித்து வைக்கும் பண்புகள் வலுவிழந்து இந்த குறைபாடு ஏற்படுகிறது.

எலும்பு முறிவு, மூட்டு வலி, மூட்டு வாதம், கழுத்து எலும்பு தேய்மானம், முதுகு எலும்பு தேய்மானம், முதுகு வலி, உடல் சோர்வு, அசதி, முதுகு எலும்பு வளைந்து கூன் விழுதல், நடையில் தளர்வு போன்ற பக்க விளைவுகளால் பெண்கள் தனது 40 வயது முதல் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். நோய்களை குணப்படுத்துவதை விட எளிதாகத் தடுக்க முடியும் என்பது எல்லோராலும் அறியப்பட்ட உண்மை.



# உடலில் முக்கிய சத்துக்கள் குறைவாக இருப்பதற்கான அறிகுறிகள்

**1 வைட்டமின் டி குறைபாடு**
உடல் ஆற்றல் குறையும்
உடல் வலி உண்டாகும்
நோய் எதிர்ப்பு சக்தி பலவீனமடையும்
மனநிலையில் மாற்றம் ஏற்படும்.

**2 இரும்புச்சத்து**
முடி உதிர்வு
மூச்சுத் திணறல்
கைகள்/கால்களில் குளிர்ச்சி
மாதவிடாய் சமயத்தில் அதிக சோர்வு

**3 ஒமேகா-3**
சருமம் உலர்தல்
நினைவாற்றல் குறைவு
மூட்டு இறுக்கம்
எரிச்சல் உணர்வு

**4 போலேட் (பி9)**
வாய்ப்புண்கள்
உடல் சோர்வு
வெளிறிய சருமம்
பலவீனமான பற்கள்

**5 அயோடின்**
கழுத்து வீக்கம்
உடல் எடை அதிகரிப்பு
உலர்ந்த சருமம்
குளிர் தாங்க முடியாமை

**6 வைட்டமின் பி12**
சிந்தனை திறன் குறைதல்
கைகள், கால்களில் முள் குத்துவது போன்ற உணர்வு
கவனக்குறைவு
உடல் சோர்வு

**7 மெக்னீசியம்**
பதற்றம், மன அழுத்தம்
தூக்கமின்மை, தாடை இறுக்கம்
தசைப்பிடிப்பு/ நரம்பு இழுத்தல்

**8 துத்தநாகம்**
முடி மெலிதல்
முகப்பரு தோன்றுதல்
நகங்கள் பலவீனமடைதல்
காயங்கள் ஆறுவதில் தாமதம்


**9 கால்சியம்**
தசைப்பிடிப்பு
எளிதில் உடையும் நகங்கள்
முதுகு/ முழங்கால் வலி
கைகள், பாதங்களில் உணர்வின்மை

**10 பொட்டாசியம்**
தசை பலவீனம்
இதய துடிப்பு அதிகரிப்பு
தசைப்பிடிப்பு
பற்கள் பலவீனம்

இவை பொதுவான அறிகுறிகள் மட்டுமே. சரியான காரணத்தை அறிய மருத்துவரை அணுகி பரிசோதனை, ஆலோசனை செய்வது அவசியமானது.



## திவ்ய சேவை



தூப்புல் ஸ்ரீ வேதாந்த தேசிகர் திவ்ய சேவை.



காளமேகப் பெருமாள் சனிக்கிழமை ஆஸ்தான திவ்ய சேவை.

## பட்டாபிஷேகம்



மாம்பலம் ஸ்ரீ கோதண்டராமர் ஸன்னதி பராபவ வருட ப்ரம்மோத்ஸவம் 10ம் திருநாள் மாலை பட்டாபிஷேகம்

## சிம்ம வாகனம்



இந்த நாள் மாலை பத்தினம் கோவில் சென்னை கெசவ பெருமாள் கோவில் சென்னை சிம்ம வாகனம்

## ஸ்ரீ கள்ளழகர் தசாவதார திருக்கோலம்.



ஸ்ரீ கள்ளழகர் தசாவதார திருக்கோலம்.

## கருடசேவை



நேற்று காலை MGR நகர் பரஸன்ன வேங்கடேஸ்வர பெருமாள் கோவில் சென்னை 78-ல் கருடசேவை

## இணைய வழியில் திறனாய்வு களம் 04




நூலேணி பதிப்பகம், சென்னை மற்றும் கவிச்சிறகுகள் குழுமம், அமெரிக்கா இணைந்து நடத்தும் திறனாய்வு களம் நிகழ்ச்சி இணைய வழியில் நடைபெற்று வருகிறது.

வாரந்தோறும் நடைபெறும் இந்த நிகழ்வில் நூலேணி பதிப்பகம், லாலிபாப் சிறுவர் உலகம் பதிப்பகங்களில் வெளியாகும் நூல்களையும், படைப்பாளர்களையும் அறிமுகம் செய்து வருகிறார்கள்.

மே 02, 2026 சனிக்கிழமை இந்திய நேரம் காலை 8:00மணிக்கு கவிஞர் அனுராதா செளரிராஜன் அவர்கள் எழுதிய "சதுரங்கத்தின் நாற்படை" (தன்முனைக் கவிதைகள்) நூலை கவிஞர் ந. வேலாயுதம் (தன்முனைக் கவிதைகள் குழும செயலாளர்) அவர்கள் திறனாய்வு செய்தார். நூலில் உள்ள சிறப்பான கவிதைகள் பலவற்றை எடுத்துப் பேசிய அவர், இந்த நூலில் இடம் பெற்றுள்ள பல்வேறு பாடுபொருள்களைப் பற்றியும், கவிதைகளின் நடை, சமூக அக்கறை கலந்த கருத்துச் செறிவு போன்றவை பற்றியும் பேசினார்.

வங்கிப்பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும் தமிழ்ப்பணியில் தனது பயணத்தை ஓயாமல் செய்து கொண்டிருக்கும் நூலாசிரியர் கவிஞர் அனுராதா செளரிராஜன் ஏற்புரை வழங்கினார். ஒரு படைப்பாளரின் படைப்புகள் அங்கீகாரம் இல்லாமல் படும் அல்லல்களை எடுத்துரைத்தார்.

இந்த நூலை "நூலேணி பதிப்பகம்' பதிப்பித்துள்ளது.

இந்த நிகழ்ச்சியை கவிச்சிறகுகள் குழும நிறுவுனர் கவிஞர் நெல்லை அன்புடன் ஆனந்தி அவர்கள் மிகச் சிறப்பாக நெறியாளுகை செய்தார்.


கவிஞர் கன்னிக்கோவில் இராஜா அவர்கள் நூலின் வடிவமைப்பினைப் பற்றியும், சதுரங்கத்தின் நாற்படையாக கவிதைகள் அமைந்த அழகையும் தனது சிறப்புரையில் எடுத்துரைத்தார்.

**தகவல்: நெல்லை அன்புடன் ஆனந்தி மிச்சிகன், அமெரிக்கா**



பூவரசன்குப்பம் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர்.

## ஸ்ரீபெருமாள் சேவை



காஞ்சி ஸ்ரீ வரதன் தோட்ட உற்சவம் ஸ்ரீபெருமாள் சேவை.

## செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கவிஞர் எறும்பூர் கை .செல்வகுமாருக்கு பாராட்டு

**செய்யாறு மே .04:**

செய்யாறில் தொடர்ந்து 30 வாரங்கள் பள்ளி மாணவர்களுக்கான திருக்குறள் பயிற்சி வகுப்பு ஒருங்கிணைத்து நடத்திய கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமாருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம் ,மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்டத்தின் கீழ் திருக்குறள் பயிற்சி வகுப்பு செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 30ஆவது வார பயிற்சி வகுப்பு மற்றும் நிறைவு விழாவில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரும் திருக்குறள் பயிற்றுநருமான கவிஞர் எறும்பூர் கை செல்வகுமாருக்கு மாவட்ட தமிழ் வளர்ச்சி துறை உதவி இயக்குனர் ந. நிலா, திருக்குறள் திருப்பணிகள் திட்ட கண்காணிப்பாளர் பா. இந்திரராசன் ஆகியோர் சால்வை அணிவித்து நினைவு பரிசுகளை வழங்கிப் பாராட்டிப் பேசினர்.



நிகழ்வின் போது தலைமை ஆசிரியர் ஜி . ஜெயகாந்தன்,தொழிலதிபர் பா. ஜெயக்குமார்,விஸ்டம் மெட்ரிக் பள்ளி முதல்வர் சரஸ்வதி, திருக்குறள் பயிற்றுனர் பாவலர் ப.குப்பன், திருக்குறள் திருப்பணிகள் திட்ட கண்காணிப்பாளர் விஷ்வேஸ்வரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

மேலும் செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கத்தைச் சேர்ந்த புலவர் ந. கனகசபை, தலைமை ஆசிரியர் தேன்மொழி, முதுகலை ஆசிரியர்கள் பாரதி, தமிழ்த்தேனி, பட்டதாரி ஆசிரியர்கள் ஆனந்தி, இளவரசி ,சத்தியமூர்த்தி, மற்றும் அரிமா சங்க மாவட்ட தலைவர் சண்முகம், ஐபிஎல் செய்யாறு கிளை அமைப்பாளர் ராமகிருஷ்ணன், துணைச் செயலாளர் மோதிலால், அறிவொளிவெங்கடேசன், ஆகியோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

## கேசவர் கருடசேவை



நேற்று காலை சென்னை கேசவர் கருடசேவை

## திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை



**திருப்பத்தூர், மே 04:**

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், 84 சிசிடிவி கேமராக்கள் மூலம் 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

அங்கு ஆயுதப்படை காவலர்கள், மத்திய பாதுகாப்பு படையினர் மற்றும் 130 காவல்துறையினர் சுழற்சி முறையில் பல அடுக்குகளாக பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி, இ.ஆ.ப., மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி வி. சியாமளா தேவி, இ.கா.ப., நேரில் ஆய்வு செய்து, காவல்துறையினருக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கினார்.



**திருப்பத்தூர், மே 04:**

கடந்த மாதம் 23ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில், நாளை (04.05.2026) வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. திருப்பத்தூர் மாவட்டத்தில், வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளதால், எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக (02.05.2026) கொடி அணிவகுப்பு நடைபெற்றது, வாணியம்பாடி நகரப் பகுதியில் வாணியம்பாடி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திருமதி. மகாலட்சுமி., தலைமையில், வாணியம்பாடி வாரச்சந்தை ரவுண்டானாவில் தொடங்கி CLரோடு,நூருல்லாப்பேட்டை சந்திப்பு வரை கொடி அணிவகுப்பு நடைபெற்றது.

ஆய்வாளர் ,மாவட்ட காவல் துறையினர் மற்றும் துணை ராணுவத்தினர் கலந்து கொண்டனர்.




## கஜேந்திர மோட்சம்.



ஸ்ரீ ஸ்ரீனிவாச பெருமாள் திருக்கோவில், தில்லைஸ்தானம்.3ம்திருநாள் காலை கஜேந்திர மோட்சம்.

## இன்று (மே 4) வாக்கு எண்ணிக்கை தமிழகத்தில் யார் பெறுவார் இந்த அரியாசனம்!




**வேலூர், மே04:**

தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளா, புதுச்சேரி, அஸ்ஸாம் ஆகிய 5 மாநிலங்களில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி இன்று காலை 8 மணிக்கு தொடங்குகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 62 மையங்களில் வாக்கு எண்ணும் பணிகள் நடைபெற உள்ள நிலையில், அங்கு 3 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதலில் 8:00 தபால் வாக்குகளும், 8.30 மணிக்கு EVM-ல் பதிவான வாக்குகளும் எண்ணப்படும். முன்பெல்லாம் நண்பகலிலேயே யார் ஆட்சி என்பதை கணித்துவிட முடியும். ஆனால் தற்பொழுது உள்ள தொழில்நுட்பம் வளர்ச்சி காரணமாக விரைவில் தெரிந்து கொள்ளலாம். தமிழகம் மட்டுமல்லாது மேற்கு வங்க தேர்தலும் பெரிய எதிர்பார்ப்பைஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலா: கேரளாவில் சுற்றி பார்க்க வேண்டிய இடங்கள்!

சுற்றுலா செல்வதற்கு கோடைகால விடுமுறை நாட்களில் மட்டுமல்ல, குளிர் காலத்திலும் செல்ல ஏற்ற இடங்களில் ஒன்றுதான் நம் அண்டை மாநிலமான கேரளா. கேரளாவில் உள்ள மலைப் பிரதேசங்கள். அக்டோபர் முதல் பிப்ரவரி வரை மிகவும் அழகாக பனிப்படர்ந்து அற்புதமாக காட்சி தரும். அந்த வகையில் குளிர்காலத்தில் கேரளாவில் சுற்றுலா செல்ல ஏற்ற 5 இடங்கள் குறித்து இப்பதிவில் காண்போம்.



1. அழகான பள்ளத்தாக்கு என்ற சைலண்ட் வேலி: குளிர்காலத்தில் அமைதியான இயற்கை எழில் சூழ்ந்த இடம் தேடுபவர்களுக்கு மிகச்சிறந்த இடம் இந்த சைலண்ட் வேலி. அடர்ந்த காடுகள் வழியாக, வழிகாட்டியுடன் செல்லக்கூடிய ட்ரக்கிங் ஒரு புதுவித அனுபவத்தை தரும். மேலும் காடு மலைகளுக்கு இடையே உள்ள நடைபாதைகள் மெய் சிலிர்ப்பை உண்டாக்கி மறக்க முடியாத நினைவை ஏற்படுத்தும்.

2. தேக்கடி: குளிர்காலத்தில் கேரளாவில் ரசிக்கக்கூடிய இடங்களில் ஒன்றாக தேக்கடி இருக்கிறது. குளிர் அதிகமாக இருந்தாலும் படகு சவாரியின் போது வனவிலங்குகளை காணும் வாய்ப்பு அதிகமாக உள்ளது .மேலும் தேக்கடிக்குச் செல்லும் வழியே மிகவும் அழகாக ரம்மியமாக காட்சி தரும்.



3. பொன்முடி: குளிர்காலத்தில் குதூகலத்தை அனுபவிக்க பொன்முடிக்கு சென்று வரலாம். ஏனெனில் இங்குள்ள பனி மூடிய மலைச் சிகரங்கள், அழகான வளைவு, தெளிவான சாலைகள், அடர் காடுகள், பள்ளத்தாக்குகள் என குளிர்காலத்தில் அமைதியான அழகான சுற்றுலா செல்ல ஏற்ற இடமாக உள்ளது.

4. மூணாறு: ஆண்டு முழுவதும் பார்க்கக்கூடிய இடங்களில் ஒன்றுதான் கேரளாவில் உள்ள மூணாறு. ஆனாலும் குளிர் காலத்தில் வெப்பநிலை குறைவாகவே இருந்தாலும் மலை சிகரம், படகு சவாரி, ட்ரெக்கிங் என அனைத்தையும் கண்டு களிக்க ஏற்ற இடமாக மூணாறு உள்ளதால் குளிர்காலத்தில் மூணாறை மிஸ் செய்யாதீர்கள்.

5. வயநாடு: பனி சூழ்ந்த குளிர்ச்சியான இடமாக கோடை காலத்திலேயே இருக்கும் கேரளாவின் வயநாடு, குளிர் காலத்தில் உறைபனியில் மிகவும் அசத்தலான அனுபவத்தை வழங்குகிறது. இங்குள்ள ட்ரெக்கிங், போட்டிங், அட்வென்சர் முதலியவை வேறு எங்கும் கிடைக்காத ஒரு புதுவித அனுபவத்தை வழங்கும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

மேற்கூறிய கேரளாவில் இருக்கும் இடங்களுக்கு குளிர்கால விடுமுறையில் சுற்றுலா சென்று சுத்தமான காற்றை சுவாசித்து மகிழுங்கள்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### எஸ்பிஐ வங்கியில் வேலை வேண்டுமா?

பொதுத்துறை வங்கிகளில் முதன்மை வங்கியான ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவில்(பாரத ஸ்டேட் வங்கி) நிரப்பப்பட உள்ள சிறப்பு அலுவலர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்தும் வரும் மே 4 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வேலைவாய்ப்பு அறிவிப்பு எண்.: CRPD/SCO/2026-27/04

பணி: Lead Business Analyst காலியிடங்கள்: 8

தகுதி: கணினி அறிவியல், ஐடி, எலக்ட்ரானிக்ஸ், எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ், டேட்டா சயின்ஸ், ஏஐ மற்றும் எம்சி, அனலிடிக்ஸ் போன்ற ஏதாவதொரு பிரிவில் பிஇ அல்லது பி.டெக் முடித்து 8 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: 31.3.2026 தேதியின்படி 30 லிருந்து 40 க்குள் இருக்க வேண்டும்.

பணி: Group Chief Economic Advisor காலியிடம்: 1

தகுதி: பொருளாதாரத்தில் முதுநிலைப் பட்டம் பெற்று 8 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: 31.3.2026 தேதியின்படி 55 முதல் 62-க்குள் இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: நேர்முகத்தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம்: ரூ. 750. கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும். எஸ்சி, எஸ்டி, மாற்றுத்திறனாளி பிரிவினர்களுக்கு கட்டணம் செலுத்துவதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் முறை: https://sbi.bank.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். எதிர்கால பயன்பாட்டிற்காக ஆன்லைனில் விண்ணப்பித்தவுடன் அதனை பிரிண்ட் அவுட் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 4.5.2026

## ஸ்கிரைப் விவரங்களை பதிவு செய்ய வேண்டும்: மாற்றுத் திறனாளிகளுக்கு என்டிஏ அறிவுறுத்தல்

**சென்னை, மே 4:**

நாடு முழுவதும் உள்ள மத்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் அதன்கீழ் இயங்கும் கல்லூரிகளில் இளநிலை, முதுநிலை பட்டப்படிப்புகளில் சேர பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வில் (க்யூட்) தேர்ச்சி பெறவேண்டும். வரும் கல்வியாண்டில் (2026-27) இளநிலை படிப்புகளுக்கான க்யூட் நுழைவுத் தேர்வு மே 11 முதல் 31-ம் தேதி வரை நடத்தப்பட உள்ளது. இதற்கான இணையதள விண்ணப்பப் பதிவு கடந்த ஜன. 3-ல் தொடங்கி பிப். 26-ம் தேதி வரை நடைபெற்றது. இந்நிலையில் மாற்றுத் திறனாளி மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கான உதவியாளர் (ஸ்கிரைப்) விவரங்களை பதிவு செய்ய வேண்டுமென என்டிஏ அறிவித்துள்ளது. இதுகுறித்து தேசிய தேர்வு முகமை (என்டிஏ) வெளியிட்ட அறிவிப்பு: மாற்றுத் திறனாளி மாணவர்களில் தேர்வெழுத உதவியாளர் (ஸ்கிரைப்) தேவைப்படுபவர்கள், தங்கள் ஸ்கிரைப் குறித்த விவரங்களை /CUET.NTA.NIC.IN/ எனும் இணையதளத்தில் மே 5-ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இதில் ஏதேனும் சிரமங்கள் இருப்பின் 011-40759000 என்ற தொலைபேசி எண் அல்லது CUET-UG@NTA.AC.IN என்ற மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளலாம். மேலும், இதுகுறித்த கூடுதல் விவரங்களை /WWW.NTA.AC.IN/ என்ற வலைதளத்தில் அறியலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


## சென்னை: கன்டெய்னர் லாரி மோதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழப்பு

**சென்னை, மே 4:**

சென்னை, அம்பத்தூர் அடுத்த ஓரகடம், எம்ஜிஆர் தெருவைச் சேர்ந்தவர் கார்த்திகேயன் (42) கார் ஓட்டுநர். இவரது மனைவி பிரேமலதா (40). இவர்களது 8 வயது மகன் இன்ப செல்வன், அப்பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 4ம் வகுப்பு படித்து வந்தான். நேற்று முன்தினம் மாலை கார்த்திகேயன் தனது மனைவி மற்றும் மகனுடன் பைக்கில் கொடுங்கையூரில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்று விட்டு, இரவு சுமார் 9 மணியளவில் அவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். மாதவரம் ஆந்திர பேருந்து நிலையம் அருகே அவர்கள் வந்து கொண்டிருந்த போது, பேருந்து நிலையத்தில் இருந்து ஆந்திர மாநில அரசுப் பேருந்து ஒன்று வெளியே வந்தது. அப்போது, பின்னால் வந்து கொண் டிருந்த கன்டெய்னர் லாரியின் ஓட்டுநர், பேருந்து வருவதைப் பார்த்து பிரேக் பிடித்துள்ளார். அப்போது, கட்டுப்பாட்டை இழந்த லாரி, பேருந்தின் பின் பகுதியில் லேசாக மோதியதோடு, முன்னால் சென்ற கார்த்திகேயனின் பைக் மீதும் பலமாக மோதியது. இதில் நிலைத் தடுமாறிய கார்த்திகேயன், பிரேமலதா மற்றும் சிறுவன் இன்ப செல்வன் ஆகிய மூவரும் ஒரே பக்கமாக கீழே விழுந்தனர். கண் இமைக்கும் நேரத்தில் லாரியின் சக்கரம் அவர்கள் மீது ஏறி இறங்கியதில், மூவரும் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். தகவல் அறிந்து, சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மாதவரம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீஸார், உயிரிழந்தவர்களின் உடல்களைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்த போலீஸார், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநர் அன்பரசன் (40) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சென்னை கோட்டத்தில் 12 ரெயில்வே கேட்டுகள் அகற்றம்

**சென்னை, மே 4:**



சென்னை கோட்டத்திற்கு உட்பட்ட முக்கிய ரெயில் பாதை களில் விபத்துகளை தவிர்க்கவும், ரெயில்களின் வேகத்தை அதிகரிக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, கடந்த 2025-2026-ம் நிதியாண்டில் சென்னை கோட்டத்தில் 12 லெவல் கிராசிங் கேட்டுகள் நிரந்தரமாக அகற்றப்பட்டுள்ளன.

பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் வசதிக்காக இந்த இடங்களில் சுரங்கப்பாதைகள், மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. குறிப்பாக சென்னை புறநகர் பகுதியான பல்லாவரம் தாம்பரம் இடையே இருந்த 27-வது எண் கொண்ட ரெயில்வே கேட் அகற்றப்பட்டு, அங்கு கீழ்ப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அந்த பகுதியில் நிலவி வந்த கடும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

அதேபோல், வாலாஜா ரோடு, காட்பாடி, லத்தேரி, குடியாத்தம், ஜோலார்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் 7 சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஓத்திவாக்கம், விண்ணமங்கலம் மற்றும் சித்தேரி ஆகிய இடங்களில் 3 மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

ரெயில்வே கேட்டுகள் அகற்றப்பட்டதன் மூலம், தண்டவாளங்களை கடக்கும்போது ஏற்படும் விபத்து அபாயங்கள் நீக்கப்பட்டுள்ளன. மேலும், ரெயில்கள் குறித்த நேரத்திற்கு இயக்கப்படவும், அவற்றின் வேகத்தை அதிகரிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள மற்ற லெவல் கிராசிங் கேட்டுகளையும் படிப்படியாக அகற்ற திட்டமிடப்பட்டு உள்ளது.

## கோடை விடுமுறையையொட்டி ஏற்காட்டில் குவிந்த சுற்றுலா பயணிகள்

**ஏற்காடு, மே 4:**



ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏற்காட்டில் கோடைவிடுமுறையையொட்டி தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து சென்ற வண்ணம் உள்ளனர். மே தினம், சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை என 3 நாட்கள் தொடர் விடுமுறை என்பதால் சுற்றுலா பயணிகள் வருகை வழக்கத்தை விட நேற்று அதிகரித்து காணப்பட்டது. ஏராளமானவர்கள் தங்களது குடும்பத்தினருடன் ஏற்காடு வந்தனர். அத்துடன் படகு இல்லத்தில் நீண்ட வரிசையில் நின்று படகு சவாரி செய்து உற்சாகமாக பொழுதை கழித்தனர். அண்ணா பூங்காவில் மலர் செடிகள், பசுமை புல்வெளிகளில் குடும்பத்துடன் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர். லேடீஸ் சீட், ஜென்ஸ் சீட், பக்கோடா பாயிண்ட் உள்ளிட்ட காட்சி முனைகளில் இருந்து மலைகளின் அழகையும், சேலம் மாநகரின் காட்சியையும் கண்டு ரசித்தனர். கோடை வெயிலின் தாக்கம் அதிகம் இருந்த போதிலும் ஏற்காட்டில் இதமான சூழல் நிலவியது.

சுற்றுலா பயணிகளின் வாகன வருகை அதிகமாக இருந்ததால் ஏற்காடு மலைப்பாதையின் 20 கொண்டை ஊசி வளைவுகளிலும், சேலம் முதல் ஏற்காடு மலை வரை போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்து ஊர்ந்து சென்றன. இதன் காரணமாக சுற்றுலா பயணிகள் அவதி அடைந்தனர். முக்கிய சந்திப்புகளில் போலீசார் வாகனங்களை ஒழுங்குபடுத்தினர்.

சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால் ஏற்காட்டில் உள்ள தங்கும் விடுதிகள் அனைத்தும் நிரம்பி வழிந்தன. உணவகங்கள், சாலையோர கடைகள், பழ வியாபாரிகள் நல்ல வருமானம் கிடைப்பதாக மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். அதேபோல சுற்றுலா பயணிகள் பிரபலமான காபி, மிளகு, ஏலக்காய், கைவினைப்பொருட்கள் போன்றவற்றை ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். நாளை (திங்கட்கிழமை) நடைபெறும் வாக்கு எண்ணிக்கைக்கு பிறகு ஏற் காட்டுக்கு வரும் சுற்றுலா பயணிகள் கூட்டம் வழக்கத்தை விட அதிகரிக் கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மெட்ரோ ரயிலில் ஏப்ரலில் 90.18 லட்சம் பேர் பயணம்

**சென்னை, மே 4:**

மெட்ரோ ரயிலில் ஏப்ரல் மாதத்தில் 90.18 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். சென்னையில் 2 வழித்தடங்களில் 54 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினசரி 3 லட்சம் பேர் பயணம் செய்கின்றனர்.

இந்நிலையில், மெட்ரோ ரயில்களில் நடப்பாண்டில் ஏப்ரல் மாதத்தில் 90,18,069 பேர் பயணம் செய்துள்ளனர். இம்மாதத்தில் அதிகபட்சமாக. ஏப்.2ம் தேதி 3,65,807 பேர் பயணம் செய்துள்ளனர். சிங்கார சென்னை அட்டையை பயன்படுத்தி 45.18,247 பேரும், பயண அட்டைகளை பயன்படுத்தி 25,659 பேரும், க்யூஆர் குறியீடு பயணச்சீட்டைப் பயன்படுத்தி 44,74,163 பேரும் பயணம் செய்துள்ளனர்.


டிஜிட்டல் எஸ்விபி, க்யூஆர் குறியீடு பயணச்சீட்டு, வாட்ஸ்-அப் மற்றும் சிங்கார சென்னை அட்டை பயணச் சீட்டுகளை பயன்படுத்தி மெட்ரோ ரயில்களில் பயணிப்பவர்களுக்கு 20 சதவீதம் கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மெட்ரோ ரயில் நிலைய கவுன்ட்டர்களில் வாங்கப்படும் காகித க்யூஆர் பயணச்சீட்டுகளுக்கு இந்த தள்ளுபடி கிடையாது என மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திருவொற்றியூரில் மூதாட்டியிடம் ரூ.500 ‘டம்மி’ நோட்டை கொடுத்து ஏமாற்றிய பெண் கைது

**சென்னை, மே 4:**

திருவொற்றியூர் மார்க்கெட்டில் பழ வியாபாரம் செய்யும் மூதாட்டியிடம், சிறுவர்கள் விளையாடும் ரூ.500 டம்மி நோட்டைக் கொடுத்து ஏமாற்றி, பழம் வாங்கிச் சென்ற பெண்ணை போலீஸார் கைது செய்தனர்.



ஆந்திர மாநிலம், திருப்பதியைச் சேர்ந்த ஜெயலட்சுமி (66) என்ற மூதாட்டி, சென்னை, திருவொற்றியூர் மார்க்கெட் பகுதியில் பழம் வியாபாரம் செய்து வருகிறார். கடந்த 29ம் தேதி, அவரிடம் ஒரு பெண் ரூ.200க்கு மாம்பழம் வாங்கிக் கொண்டு ரூ.500 நோட்டை கொடுத்தார்.

அதனை உண்மை என நம்பிய மூதாட்டி, மீதம் ரூ.300-ஐ திருப்பிக் கொடுத்துள்ளார். பெண் சென்ற பிறகு நோட்டைச் சோதிந்த போது, அது சிறுவர்கள் விளையாடும் டம்மி ரூபாய் நோட்டு என்பது தெரிய வந்தது.

தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து மூதாட்டி கண்ணீர் விட்டு அழுத வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி, பொதுமக்களிடையே பெரும் அனுதாபத்தை ஏற்படுத்தியது.

இதுகுறித்து, திருவொற்றியூர் போலீஸார் தீவிர விசாரணை நடத்தி, மூதாட்டியை ஏமாற்றிய எரணாவூரைச் சேர்ந்த பாக்கிய லட்சுமி (35) என்பவரை நேற்று கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பாக்கியலட்சுமி போலீஸாரிடம் அளித்த வாக்கு மூலத்தில், ‘தனது மகன் விளையாடிக் கொண்டிருந்த டம்மி நோட்டை எடுத்து தனது மணிபரஸில் வைத்து விட்டதாகவும், பர்ஸில் இருந்த ஒரிஜினல் ரூ.500 நோட்டுடன் இந்த டம்மி நோட்டும் கலந்திருந்ததை கவனிக்காமல், தெரியாமல் கொடுத்துவிட்டதாகவும்’ அவர் கூறியுள்ளார்.

பாக்கியலட்சுமியின் விளக்கத்தைத் தொடர்ந்து, போலீஸார் சட்டப்படியான நடைமுறைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருச்செந்தூரில் 2-வது நாளாக உள்வாங்கிய கடல்



**திருச்செந்தூர், மே 4:** அறுபடை வீடுகளில் 2ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர்.

இங்குள்ள கடலில் புனித நீராடிவிட்டு சாமி தரிசனம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். இதனிடையே, ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை, பவுர்ணமி நாட்கள் மற்றும் அதற்கு முன்தினம், மறுதினங்களில் காலையில் கடல் உள்வாங்குவதும், மாலையில் இயல்பு நிலைக்கு திரும்புவதும் வழக்கமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், திருச்செந்தூரில் இன்று 2-வது நாளாக கடல் உள்வாங்கியது. சுமார் 50 அடி தூரத்திற்கு கடல் உள்வாங்கியதால் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிந்தன. எனினும், பக்தர்கள் எவ்வித அச்சமுமின்றி கடலில் புனித நீராடியும், செல்பி எடுத்தும் மகிழ்ந்தனர். கடல் உள்வாங்கியுள்ள நிலையில் பக்தர்கள் பாதுகாப்பாக கடலில் குளிக்கும்படி கோவில் நிர்வாகம், காவல்துறை சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து பங்க் உரிமையாளர்கள் கூறுகையில், 'அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகையால் வழக்கத்தைவிட கூடுதலாக பெட்ரோல், டீசல் விற்பனையானது. மேலும், போக்குவரத்து நெரிசல் காரணமாக குறிப்பிட்ட நேரத்தில் பெட்ரோல், டீசல் வந்து சேர முடியாத நிலை உள்ளது. எரிபொருள் வந்ததும் நிலைமை சரியாகி விடும்' என்றனர்.

## க்ரைம் கார்னர்

### ஆன்லைன் விளையாட்டு: தாய் கண்டித்ததால் 8-ஆம் வகுப்பு மாணவர் தூக்கிட்டுத் தற்கொலை

**சேலம், மே 4:** சேலம் அன்னதானப்பட்டி, நெத்திமேடு பகுதியைச் சேர்ந்தவர் சண்முகவேல். இவர் வழிப்பறி வழக்கில் கைது செய்யப்பட்டு சேலம் மத்திய சிறையில் உள்ளார். இவரது மனைவி கொசல்யா. இவர்களுக்கு 2 மகன்கள். மூத்த மகன் வைத்தீஸ்வரன் 8 ஆம் வகுப்பு படித்து வந்தார். கொசல்யா வீட்டு வேலைக்கு சென்று குழந்தைகளை பராமரித்து வந்தார். இந்நிலையில், வைத்தீஸ்வரன் வெள்ளிக்கிழமை மாலை கைப்பேசியில் ஆன்லைன் கேம் விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்ட அவரது தாய், அவரை கண்டித்துள்ளார். பின்னர் வீட்டு வேலைக்கு சென்றுவிட்டு இரவு வீடுதிரும்பியபோது, வைத்தீஸ்வரன் தூக்கில் சடலமாக தொங்கியதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

தகவலறிந்து வந்த அன்னதானப்பட்டி போலீஸார், உடலை மீட்டு உடல்கூறு ஆய்வுக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### திருச்சி விமான நிலையத்தில் 3 கிலோ தங்கம் பறிமுதல்: 20 பயணிகளிடம் விசாரணை

**திருச்சி, மே 4:** திருச்சி விமான நிலையத்துக்கு சிங்கப்பூர் விமானத்தில் சனிக்கிழமை காலை வந்த பயணிகளின் உடமைகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனையிட்டனர். அப்போது, ஒரு பயணி தங்கத்தை பசை வடிவில் மறைத்து வைத்து எடுத்து வந்தது தெரியவந்தது. இதையடுத்து சுங்கத்துறை அதிகாரிகள், அந்தப் பயணியிடம் விசாரித்ததில், பல பயணிகள் இதுபோல தங்கத்தை பசை வடிவில் கடத்தி வந்தது தெரிந்தது. இதையடுத்து அந்த விமானத்தில் வந்த 20 பயணிகளிடம் 3 கிலோ வரை தங்கத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள், அவர்களிடம் விசாரிக்கின்றனர்.

### 5 மாநிலங்களில் ஆயிரம் கார்கள் திருட்டு - 10 பேர் கைது; 31 வாகனங்கள் பறிமுதல்

**புதுடெல்லி, மே 4:** டெல்லி, உத்தர பிரதேசம் உள்ளிட்ட 5 மாநிலங்களில் ஒரு கும்பல் சுமார் 1,000-க்கும் மேற்பட்ட கார்களை திருடி விற்பனை செய்துள்ளது. இதுதொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். அவர்களிடம் இருந்து 31 கார்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன.

இதுகுறித்து டெல்லி போலீஸார் நேற்று கூறியதாவது: டெல்லி மற்றும் தேசிய தலைநகர் பிராந்தியம் (என்சிஆர்) பகுதிகளில் கார்கள் அதிகளவில் திருடு போயின. குறிப்பாக டெல்லி ரோகிணி, உத்தம் நகர் பகுதிகளில் கார் திருட்டு அதிகரித்தது. சிசிடிவி கேமராக்களை தீவிரமாக ஆய்வு செய்து, நீண்ட தேடலுக்குப் பிறகு கார் திருட்டில் ஈடுபட்டு வந்த 10 பேர் கும்பலை பிடித்து உள்ளோம்.

இந்த கும்பலின் தலைவனாக தாமன் தீப் சிங் என்பவர் செயல்பட்டு உள்ளார். இவர் பஞ்சாபில் பழைய கார்களை விற்கும் நிறுவனத்தை நடத்தி வருகிறார். சாப்ட்வேர் இன்ஜினீயர், இமாச்சல பிரதேசத்தை சேர்ந்த அரசு ஊழியர் ஆகியோரும் கும்பலில் உள்ளனர். டெல்லி, ஹரியாணா, பஞ்சாப், உத்தர பிரதேசம், இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சுமார் 1,000-க்கும் மேற்பட்ட கார்களை இந்த கும்பல் திருடி விற்பனை செய்திருப்பது முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. தற்போது அவர்களிடம் இருந்து 31 விலை உயர்ந்த கார்களை பறிமுதல் செய்திருக்கிறோம். இதில் 11 பார்சூனர், 6 செல்டோஸ், 6 கிரெட்டா, 3 இன்னோவா, 2 ஸ்கார்பியோ, தலா ஒரு வென்யூ, தார், ஸ்விப்ட் கார்கள் அடங்கும்.

திருடப்படும் கார்களின் சேசிஸ், இன்ஜின் எண்களை இந்த கும்பல் மாற்றியிருக்கிறது. போலி ஆவணங்கள் மூலம் கார்களுக்கு புதிய பதிவு எண்களை பெற்றுள்ளனர். பழைய கார்கள் விற்பனையகங்கள் மூலம் திருட்டு கார்களை நல்ல விலைக்கு விற்பனை செய்து பெரும் தொகையை திரட்டி உள்ளனர். அவரவர் பங்களிப்புக்கு ஏற்ப பணம் பகிர்ந்து அளிக்கப்பட்டு உள்ளது. இந்த கும்பலால் விற்பனை செய்யப்பட்ட 1,000 கார்களின் விவரங்களை சேகரித்து வருகிறோம். திருட்டு கும்பலோடு தொடர்புடையவர்கள் குறித்தும் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## விளையாட்டு செய்திகள்

### முன்னணி செஸ் வீரர் வின்சென்ட் கெய்மரை வீழ்த்திய 8 வயது தமிழ் அமுதன்


**புதுடெல்லி, மே 4:** சிவகாசி:செஸ் வீரர்களுக்கான ஃபிடே உலக தரவரிசையில் 7-ம் இடத்தில் உள்ள ஜெர்மனியின் வின்சென்ட் கெய்மரை வீழ்த்தி உள்ள தமிழகத்தை சேர்ந்த எட்டு வயதான தமிழ் அமுதன்.

வெள்ளிக்கிழமை அன்று ஆன்லைனில் நடைபெற்ற 'ஃப்ரீஸ்டைல் FRIDAY' வாராந்திர செஸ் ஆட்டத்தில் தமிழ் அமுதன் பங்கேற்றார். கடந்த பிப்ரவரியில் கேண்டிடேட் மாஸ்டர் பட்டம் பெற்றார். அதன் பின்னர்தான் ஃபிடே தரவரிசையில் முன்னணியில் உள்ள வீரர்களுடன் விளையாடும் வாய்ப்பு கிடைத்துள்ளது. 2,000 ELO புள்ளிகளை கடந்த இளம் வயது வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

அவர் ஆன்லைனில் செஸ் போட்டிகளில் விளையாடுவது வழக்கமான ஒன்று. அதுபோலவே சென்ற வெள்ளிக்கிழமை (மே 1) அன்றும் 'ஃப்ரீஸ்டைல் FRIDAY'-வில் பங்கேற்றுள்ளார். அப்போது சிவகாசியில் மழை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் லேப்டாப் உடன் அவர் போட்டியில் பங்கேற்றார். அவர்தான் விளையாடுகிறார் என்பதை உறுதி செய்ய மெழுகுவர்த்தி ஒன்று ஏற்றப்பட்டது. அந்த ஒளியை கொண்டு விளையாடுவது தமிழ் அமுதன் என்பதை நடுவர்கள் உறுதி செய்தனர்.

அதில் கருப்பு நிற காய்களுடன் தமிழ் அமுதன் விளையாடினர். இதில் தான் ஜெர்மனியின் வின்சென்ட் கெய்மரை ஒரு சுற்றில் எதிர்கொண்டு வீழ்த்தினார். இந்த போட்டி மொத்தம் 11 சுற்றுகள் கொண்டதாக இருந்தது. இருப்பினும் லேப்டாப்பில் சார்ஜ் இல்லாத காரணத்தால் 4 சுற்றுகளில் விளையாடி இரண்டில் வெற்றி பெற்றார். இந்த வெற்றி அவருக்கு கிளாசிக்கல் செஸ் தொடர்களில் விளையாட நம்பிக்கை கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.


### மாட்ரிட் ஓபன் டென்னிஸ்: உக்ரைன் வீராங்கனை சாம்பியன்



**மாட்ரிட், மே 4:** மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயின் நாட்டில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப் போட்டியில் உக்ரைன் வீராங்கனை மார்த்தா கோஸ்ட்யுக், மிரா ஆன்ட்ரீவாவுடன் (ரஷியா) மோதினார். 1 மணி 21 நிமிடம் நடந்த ஆட்டத்தில் கோஸ்ட்யுக் 6-3, 7-5 என்ற நேர்செட்டில் மிரா ஆன்ட்ரீவாவுக்கு அதிர்ச்சி அளித்து சாம்பியன் பட்டத்தை தனதாக்கினார்.

1,000 தரவரிசை புள்ளிகள் கொண்ட போட்டியில் கோஸ்ட்யுக் சாம்பியன் பட்டம் வெல்வது இதுவே முதல்முறை யாகும். கோஸ்ட்யுக்குக்கு ரூ.11 கோடி பரிசாக வழங்கப்பட்டது.

# பாபநாசம் அகஸ்தியர் அருவியில் ஆர்ப்பரித்துக் கொட்டும் தண்ணீர் - சுற்றுலா பயணிகள் உற்சாக குளியல்



**நெல்லை, மே 4:** நெல்லை மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்களில் பாபநாசம் மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள அகஸ்தியர் அருவியும் ஒன்றாகும். இங்கு ஆண்டு முழுவதும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதால் மிகவும் பிரசித்தி பெற்றது ஆகும். தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் உற்சாகமாக குளித்து மகிழ்கின்றனர்.

தற்போது கோடையில் கடும் வெயில் சுட்டெரிக்கும் நிலையிலும், அகஸ்தியர் அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

இதனால் கடந்த சில நாட்களாக அகஸ்தியர் அருவிக்கு செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மே தினம், சனி, ஞாயிறு என தொடர் விடுமுறையையொட்டி அகஸ்தியர் அருவியில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.

அவர்கள் கார், வேன்களில் குடும்பத்தினர், உறவினர்களுடன் வந்தனர்.

அவர்கள் ஆர்ப்பரித்துக் கொட்டும் அருவியில் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர்.

# வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்: தேர்தல் ஆணையத்திற்கு திமுக கடிதம்

**சென்னை, மே 4:** தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நாளை (திங்கட்கிழமை) நடைபெற உள்ள நிலையில், தமிழகம் முழுவதும் முன்னெச்சரிக்கையாக ஒரு லட்சம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். முக்கிய இடங்களில் துணை ராணுவப்படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

வாக்கு எண்ணும் மையங்கள் மட்டுமில்லாமல் தமிழகம் முழுவதும் நாளை காலை முதல் பரபரப்பாக இருக்கும். இதையொட்டி தமிழக காவல்துறையின் சார்பில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் மையங்களில் மட்டும் 18 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர். மேலும் 40-க்கும் மேற்பட்ட துணை ராணுவ படையினர் துப்பாக்கி ஏந்தியபடி பணியில் உள்ளனர்.



அனைத்து ஐ.ஜி.க்கள், டி.ஐ.ஜி.க்கள், போலீஸ் கமிஷனர்கள், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகள் தங்கள் பகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டு உள்ளது. தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிவு வெளியாகும்போது வாக்கு எண்ணும் மையத்தின் வெளிப்பகுதி மட்டுமல்லாமல் தமிழகத்தின் பிற இடங்களிலும், பிரச்சினைக்குரிய பகுதிகளிலும் அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாமல் தடுக்க தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போலீசார் மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், வாக்கு எண்ணிக்கையின் போது பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என்று தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், தமிழக டிஜிபிக்கு திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி கடிதம் எழுதியுள்ளார்.

அதில், தமிழ்நாட்டில் நாளை வாக்கு எண்ணிக்கையை சீர்குலைத்து, சட்டம் ஒழுங்கிற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்பட பாஜகவும், சில கட்சிகளும் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் கிடைத்துள்ளன.

இதனை முறியடிக்க தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். வாக்கு எண்ணும் மையங்கள் மற்றும் அரசியல் கட்சி அலுவலகங்களில் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்.

தேர்தல் ஆணையம் பாஜகவின் பி-டீமாக செயல்படுகிறது என்ற குற்றச்சாட்டுகள் உள்ளதால், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## வணிகச் செய்திகள்

### 2025-26ல் வெளிநாட்டு இருப்பில் இருந்து இந்தியாவுக்கு வந்த 168 டன் தங்கம்

**மும்பை, மே 4:** இந்திய ரிசர்வ் வங்கி கடந்த 2025-26 நிதியாண்டில் 168 டன் தங்கத்தை வெளிநாட்டில் இருந்து இந்தியாவுக்கு கொண்டு வந்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையே போர் மூண்ட பிறகு, ரஷ்யாவின் டாலர் கையிருப்பை அமெரிக்கா முடக்கியது. இதையடுத்து, வெளிநாடுகளில் டெபாசிட் செய்து வைத்துள்ள தங்கத்தை இந்திய ரிசர்வ் வங்கி, தாயகம் கொண்டு வரும் நடவடிக்கையில் கடந்த 3 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது.

இதன்படி, கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட தரவுகளின்படி, 2025-26-ன் 2-ம் பாதியில், பேங்க் ஆஃப் இங்கிலாந்து மற்றும் பேங்க் ஃபார் இன்டர்நேஷனல் செட்டில்மென்ட்ஸ் ஆகியவற்றில் வைக்கப்பட்டிருந்த 104.23 டன் தங்கத்தை ரிசர்வ் வங்கி இந்தியாவுக்கு கொண்டு வந்துள்ளது. முன்னதாக ஆண்டின் முதல் பாதியில் 63.83 டன் தங்கம் கொண்டு வரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்தமாக, 2025-26 நிதியாண்டில் ரிசர்வ் வங்கி 168.06 டன் தங்கத்தை இந்தியாவுக்கு கொண்டு வந்துள்ளது. 2023-24-ல் 107.21 டன், 2024-25-ல் 103.68 டன் தங்கம் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டது.

ரிசர்வ் வங்கியின் மொத்த தங்க கையிருப்பு 880.52 டன். இதன் மதிப்பு ஏப்ரல் 17 நிலவரப்படி 122 பில்லியன் டாலர் ஆகும். இதில் இப்போதைய நிலவரப்படி 77 சதவீத தங்கம் இந்தியாவில் வைக்கப்பட்டுள்ளது.

# 3 பெண்களை திருமணம் செய்த வாலிபர் தூக்குப்போட்டு தற்கொலை

**தூத்துக்குடி, மே 4:** தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு தாலுகாவிற்கு உட்பட்ட சன்னதுபுதூர் கீழூர் காலனி தெருவை சேர்ந்தவர் முருகன். இவருடைய மகன் சுரேஷ்குமார் (வயது 32). இவர் எந்த வேலைக்கும் செல்லாமல் எப்போதும் மது போதையில் சுற்றித் திரிந்ததாக கூறப்படுகிறது. மேலும், இவருக்கு சற்று மனநலம் பாதித்தது போன்ற பாதிப்புகளும் இருந்து வந்துள்ளன.

சுரேஷ்குமார் இதுவரை 3 பெண்களை திருமணம் செய்துள்ளார். இதில் முதல் 2 மனைவிகள் 5 ஆண்டுகளுக்கு முன்பே இவரைப் பிரிந்து சென்றுவிட்டனர். தற்போது 3-வது மனைவியுடன் வசித்து வந்த சுரேஷ்குமாருக்கு, பிரிந்து சென்ற முதல் மனைவி மூலம் 11 வயதில் ஒரு ஆண் குழந்தை உள்ளது. மற்ற 2 மனைவிகளுக்கும் குழந்தைகள் இல்லை.

இந்த நிலையில் நேற்று இரவு வழக்கம்போல் வீட்டிற்கு வந்த சுரேஷ்குமார், இரவு தூங்கச் சென்றார். அவர், தனது அறையை உள்புறமாக பூட்டிக்கொண்டு சீலிங் ஃபேனில் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார். இன்று காலையில் வீட்டார் பார்த்தபோதுதான் அவர் தற்கொலை செய்துகொண்ட விபரம் தெரியவந்தது.

இதுகுறித்துத் தகவல் அறிந்த கயத்தாறு போலீசார், உடலை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேபோல் தூத்துக்குடி மாவட்டம் கடம்பூர் கொள்ளஆசாரி தெருவை சேர்ந்த தர்மர் மகன் பாரதி(42), என்பவருக்கு தேவி என்ற மனைவியும், 2 குழந்தைகளும் உள்ளனர். பாரதி கடந்த 3 ஆண்டுகளாக தனது மனைவியை பிரிந்து வாழ்ந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று பாரதி அதிக குடிபோதையில் இருந்துள்ளார்.

அப்போது அவர் தனது தந்தையிடம்தான் சாகப்போவதாக கூறியுள்ளார்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த குடும்பத்தினர் அவரை சத்தம் போட்டு கண்டித்துள்ளனர். பின்னர் அவர் தனது அறைக்குள் தூங்கச் சென்றுள்ளார்.

இன்று காலை பாரதியின் தந்தை அறைக்கு சென்று பார்த்தபோது, பாரதி மின்விசிறியில் சேலையால் தூக்குப்போட்டு தற்கொலை செய்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இதுகுறித்து கடம்பூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார், உடலை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உலகளாவிய சலால்களை வாய்ப்புகளாக மாற்ற வேண்டும்: ஜெ.பி.நட்டா

**புதுடெல்லி, மே 4:**

உலகளாவிய பதற்றமான சூழலால் ஏற்பட்டுள்ள சவால்களை தங்களுக்குச் சாதகமான வாய்ப்புகளாக மாற்றி 2047-ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைய தீவிரமாகப் பணியாற்ற வேண்டும் என மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா சனிக்கிழமை தெரிவித்தார்.





தெற்கு குஜராத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கான இரு நாள் முதலீட்டாளர்கள் மாநாட்டின் நிறைவு விழாவில் பங்கேற்று ஜெ.பி.நட்டா மேலும் பேசியதாவது: பொருளாதார வலிமை என்பது வளர்ச்சியை சார்ந்தது மட்டுமல்ல; அது தற்சாபு மற்றும் மீள்திறனையும் உள்ளடக்கியது.

21-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் இடையே பெரும் இடைவெளி இருந்தது. அப்போது வணிகத்துக்கு இடையூறுகள் ஏற்படுத்துவது குறித்தே அரசியல்வாதிகளும் அரசு அதிகாரிகளும் எண்ணி வந்தனர். இந்தச் சூழலில் 2003-ஆம் ஆண்டில் குஜராத் முதலீட்டாளர்கள் மாநாட்டை அப்போதைய முதல்வா நரேந்திர மோடி நடத்தினார். அதன் பிறகு வணிகத்துக்கான தடைகள் அகற்றப்பட்டன. வணிகம் மாநிலத்தின் வளர்ச்சிக்குப் பங்காற்றும் வகையில் மறுகட்டமைப்பு செய்யப்பட்டது. இதை முன்மாதிரியாகக் கொண்டு உத்தர பிரதேசம், பிகார் மற்றும் கா்நாடகம் ஆகிய மாநிலங்களும் பின்பற்றின.

தற்போது சா்வதேச புவி அரசியலில் ஏற்பட்டுள்ள சிக்கல்களால் உலக அளவில் பதற்றமான சூழல் நிலவுகிறது. இதை நமக்கு சாதகமான வாய்ப்பாக மாற்ற வேண்டும். 2047-ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த பாரதம் இலக்கை அடைய நாம் தீவிரமாகப் பணியாற்ற வேண்டும் என்றார்.

## 98.47 சதவீத ரூ.2,000 நோட்டுகள் திரும்பிவிட்டன: ரிசர்வ் வங்கி




**புதுடெல்லி, மே 4:**

புழக்கத்தில் இருந்த ரூ.2,000 நோட்டுகளில் 98.47 சதவீதம் திரும்பப் பெறப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி வெள்ளிக்கிழமை தெரிவிதுள்ளது.

2,000 ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெறுவதாக கடந்த 2023, மே 19-ஆம் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டது. அப்போது ரூ.3.56 லட்சம் கோடி மதிப்பிலான ரூ.2,000 நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன. அவை திரும்பப்பெறுவதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2026, ஏப்.30-ஆம் தேதி நிலவரப்படி ரூ.5,451 கோடி மதிப்பிலான ரூ.2,000 நோட்டுகள் மட்டுமே புழக்கத்தில் உள்ளன.

இதன்மூலம் 98.47 சதவீத ரூ.2,000 நோட்டுகள் பெறப்பட்டுள்ளது. இதுதொடா்பாக ரிசா்வ் வங்கி வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: 2023, மே 19-ஆம் தேதி புழக்கத்தில் இருந்த ரூ. 2000 நோட்டுகளில் 98.47 சதவீதம் தற்போது திரும்பப் பெறப்பட்டுவிட்டன என்று தெரிவித்துள்ளது.

ரிசா்வ் வங்கியின் 19 கிளை அலுவலகங்களிலும் 2,000 ரூபாய் நோட்டுகளை மாற்றிக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த அலுவலகங்கள் மூலம் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் அவர்களது வங்கிக்கணக்கில் 2,000 ரூபாய் நோட்டுகளை சேமிப்புக் கணக்கில் செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர இந்தியாவில் எந்தவொரு தபால் நிலையத்தில் இருந்து இந்தியா போஸ்ட் மூலம் 2,000 ரூபாய் நோட்டுகளை அனுப்பி தங்கள் சேமிப்புக் கணிக்கில் செலுத்திக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசின் முன் அனுமதியில்லாமல் காப்பீட்டுத் துறையில் 100% எஃப்டிஐ

**புதுடெல்லி, மே 4:**


மத்திய அரசு அல்லது ரிசா்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல் காப்பீட்டுத் துறையில் 100 சதவீதம் அந்நிய நேரடி முதலீட்டை (எஃப்டிஐ) முதலீட்டாளர்கள் மேற்கொள்வதற்கான அதிகாரபூா்வ அறிவிப்பை மத்திய நிதியமைச்சகம் சனிக்கிழமை வெளியிட்டது.

அதேவேளையில் அந்நிய செலாவணி மேலாண்மை (இரண்டாவது திருத்தம்) விதிமுறைகள் 2026-இன்படி, மத்திய அரசு அல்லது ரிசா்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல் காப்பீட்டு நிறுவனங்களில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதிக்கப்பட்டாலும், ஆயுள் காப்பீட்டு கழகத்தில் (எல்ஐசி) அந்நிய நேரடி முதலீட்டை 20 சதவீதம் வரை மட்டுமே மேற்கொள்ள முடியும்.

முன்பு மத்திய அரசு அல்லது ரிசா்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல், காப்பீட்டுத் துறையில் 74 சதவீதம் வரை அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த ஆண்டு டிசம்பரில் சப்கா பீமா சப்கி ரக்ஷா (காப்பீட்டு சட்டங்கள் திருத்தம்) மசோதாவை நாடாளுமன்றம் நிறைவேற்றியது. இதையடுத்து அந்த முதலீட்டு வரம்பு 100 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. இந்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, மசோதா சட்டமானது.

# கர்நாடகத்தில் பறவைக் காய்ச்சல்: 44 மயில்கள் உயிரிழப்பு

**பெங்களூரு, மே 4:**



கர்நாடக மாநிலம், தும்கூரு மாவட்டத்தில் 44 மயில்கள் திடீரென இறந்தன. இதற்கான காரணம் தெரியாத நிலையில், இறந்த மயில்களின் உடல்கள் போபாலில் உள்ள தேசிய உயர்பாதுகாப்பு விலங்கு நோய்கள் மையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அது தொடர்பான ஆய்வறிக்கையில், 44 மயில்களும் எச்5என்1 எனப்படும் பறவைக் காய்ச்சலால் இறந்துவிட்டதாக வனத் துறை அமைச்சர் ஈஸ்வர் கண்ட்ரே தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூரில் செய்தியாளர்களிடம் அவர் சனிக்கிழமை மேலும் கூறியது:

தும்கூரு மாவட்டத்தின் குலுர் ஒன்றியத்தைச் சேர்ந்த ஹுல்லேனஹள்ளி, பைரசந்திரா கிராமங்கள், உர்டிகெரே ஒன்றியத்தைச் சேர்ந்த பொம்மனஹள்ளி மற்றும் ஹோலிஹள்ளி கிராமங்களில் ஏப். 16 முதல் 21ஆம் தேதிவரையிலான காலகட்டத்தில் 44 மயில்கள் இறந்தன. இவற்றின் உடல்களை சோதனை செய்தபோது, பறவைக் காய்ச்சலுக்கு இறந்தது உறுதியாகியுள்ளது. இதை தொடர்ந்து, உயிரியல் பூங்காக்கள், சாலைகள், சரணாலயங்கள், மாகடி ஏரி, கொக்கரே பெல்லூர் சமுதாய பறவைகள் சரணாலயம் உள்ளிட்ட வனப் பகுதிகளில் பறவைக் காய்ச்சல் பரவாமல் தடுக்க மத்திய அரசு வழிகாட்டுதலின்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

உள்ளூர் அல்லது வெளியூர் பறவைகள் இறந்தால், அவற்றின் உடல்களைச் சேகரித்து, உடனடியாக சோதனைக்கு அனுப்ப வேண்டும் என்று வனத்துறை உயரதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றார்.

# மாநிலங்களவைக்கு கூடுதல் அதிகாரம் தேவை: டிஆர்எஸ் தலைவர் கவிதா வலியுறுத்தல்

**புதுடெல்லி, மே 4:**

டிஆர்எஸ் கட்சி சார்பில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது தொகுதி மறுசீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்து அவர் பேசியதாவது: ஒரு குறிப்பிட்ட மக்கள்தொகை எண்ணிக்கையை நிர்ணயித்து அதன் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். இதனால் சில மாநிலங்களின் மக்களவைத் தொகுதிகள் எண்ணிக்கை குறைந்தாலும் அதுகுறித்து கவலை கொள்ளத் தேவையில்லை. மாறாக அதை ஈடுகட்டும் வகையில் அமெரிக்காவின் செனட் சபையைப்போல் அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே அளவிலான எண்ணிக்கையில் மாநிலங்களவை இடங்களை ஒதுக்க வேண்டும்.

நிதி மசோதா உள்ளிட்ட பல்வேறு மசோதாக்களை அங்கீகரிப்பதில் மாநிலங்களவைக்கு செனட் சபையைப் போலவே கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். மாநிலங்கள் மசோதாக்களை ஏற்காவிட்டால் அவை உடனடியாக நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.

இதன்மூலம் மாநிலங்களின் அரசியல் மற்றும் நிதிப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும். இந்த நடைமுறை அமல்படுத்தப்பட்டால் நமது அரசமைப்புச் சட்டத்தின் ஒன்றிய மற்றும் கூட்டாட்சி தத்துவம் நிலைநிறுத்தப்படும். இதுதொடா்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு விரிவான அறிக்கையை விரைவில் அனுப்பவுள்ளேன் என்றார்.

# கடும் வெயிலால் 12 மாநிலங்களில் பரவும் காட்டுத் தீ

**புதுடெல்லி, மே 4:**

கோடைக் காலம் என்பதால், நாட்டின் பல பகுதிகளில் கடும் வெயில் காரணமாக வெப்ப அலை வீசுகிறது. இதன் காரணமாக 12 மாநிலங்களில் 10 வனப் பகுதிகளில் காட்டுத் தீ கடந்த 3 நாட்களுக்கு மேலாக பற்றி எரிவது செயற்கைக்கோள் படங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. மத்திய பிரதேச வனப் பகுதியில் 634 இடங்களில் காட்டு தீ பற்றியுள்ளன.

வடக்கில் உத்தராகண்ட், மேற்கில் குஜராத் முதல் தெற்கே ஆந்திரா வரை 12-க்கும் மேற்பட்ட மாநிலங்களில் பெரிய அளவிலான காட்டுத் தீ பரவியுள்ளது. இதன் காரணமாக பல உயிரினங்கள் இறந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

மகாராஷ்டிரா மற்றும் சத்தீஸ்கர் மாநிலத்தில் தலா 465 இடங்களிலும், ஆந்திராவில் 400-க்கும் மேற்பட்ட இடங்களிலும், அசாம் மாநிலத்தில் 190 இடங்களிலும், மணிப்பூரில் 128 இடங்களிலும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது.

உத்தராகண்ட்டில் மட்டும் 130 ஹெக்டேர் வனப் பகுதி காட்டுத் தீயால் பாதிக்கப்பட்டுள்ளது.

சார்தாம் யாத்திரை நடைபெறும் பகுதிகளிலும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. தீயை அணைக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# இந்தியாவில் ‘ஒயிட் காலர்’ வேலைவாய்ப்புகள் 6% அதிகரிப்பு!

**புதுடெல்லி, மே 4:**

இந்தியாவில் அலுவலகப் பணி சார்ந்த ‘ஒயிட் காலர்’ வேலைவாய்ப்பு, கடந்த ஏப்ரல் மாதத்தில் 6 சதவீத வருடாந்திர வளர்ச்சியை எட்டியுள்ளது.



காப்பீடு, தகவல் தொழில்நுட்பம் (ஐ.டி.) சார்ந்த ‘பிபிஓ’ துறைகளில் அதிகப்படியான பணியமா்த்தல் நடைபெற்றுள்ளதாக ‘நாக்குரி ஜாப்ஸ்பீக்’ வெளியிட்டுள்ள மாதாந்திர ஆய்வறிக்கையில் தெரிவிக்க ப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு வளர்ச்சியில் காப்பீட்டுத் துறை 21 சதவீத வளர்ச்சியுடன் முதலிடத்தில் உள்ளது. இதையடுத்து, பிபிஓ மற்றும் ஐடி சார் சேவைகள் துறையில் 15 சதவீத வளர்ச்சியும், ரியல் எஸ்டேட் துறையில் 12 சதவீத வளர்ச்சியும், சுகாதாரத் துறையில் 11 சதவீத வளர்ச்சியும், கல்வித் துறையில் 9 சதவீத வளர்ச்சியும் பதிவாகியுள்ளது.

அதேநேரம், கடந்த 4 மாதங்களாக சரிவைச் சந்தித்து வரும் தொலைத்தொடர்புத் துறை (11 சதவீதம்), வங்கித் துறை (10 சதவீதம்) ஆகியவை ஏப்ரல் மாதத்திலும் பின்னடைவைச் சந்தித்துள்ளன. ஐடி, பார்மா, ஆட்டோமொபைல் துறைகளில் பெரிய மாற்றமின்றி நிலைத்தன்மை காணப்படுகிறது.

தென் மாநிலங்களின் ஆதிக்கம்: வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் தென்னிந்திய நகரங்கள் தொடா்ந்து முன்னிலை வகிக்கின்றன. ஹைதராபாத் 12 சதவீதம், பெங்களூரு 7 சதவீதம், சென்னை 6 சதவீதம் வளர்ச்சியைப் பதிவு செய்தன.

தலைநகர் தில்லி (3 சதவீதம்) மற்றும் கொல்கத்தாவில் (1 சதவீதம்) குறைந்த வளர்ச்சியே பதிவான நிலையில், நாட்டின் நிதித்தலைநகரான மும்பையில் வேலைவாய்ப்பு 3 சதவீதம் சரிவைச் சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கது. 2-ஆம் நிலை நகரங்களில் முன்னேற்றம்: பெருநகரங்களைத் தாண்டி, 2-ஆம் நிலை நகரங்களிலும் வேலைவாய்ப்புச் சந்தை விரிவடைந்து வருகிறது. ராஜஸ்தானின் ஜெய்பூர் (12 சதவீதம்), கோவை (11 சதவீதம்), குஜராத்தின் அகமதாபாத் (7 சதவீதம்) ஆகிய நகரங்களில் பணியமா்த்தல் நடவடிக்கைகள் உற்சாகமாக உள்ளன.

## ராகுலுக்கு எதிரான அவதூறு வழக்கு: மே 13-க்கு உ.பி. நீதிமன்றம் ஒத்திவைப்பு

**பாட்னா, மே 4:**

உத்தர பிரதேசத்தில் புல் கரி வழக்கு தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்த கருத்துகளுக்கு எதிரான அவதூறு வழக்கு விசாரணையை மே 13-க்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

உத்தர பிரதேசத்தின் ஹாத்ரஸ் மாவட்டத்தில் உள்ள புல் கரி கிராமத்துக்கு கடந்த 2024-ஆம் ஆண்டு சென்ற ராகுல் காந்தி, அங்கு பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ரவி, ராம்குமார், லவகுஷ் ஆகிய மூவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டு சுதந்திரமாக நடமாடி வருவதாகவும், பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினர் வீட்டில் அடைந்து கிடைப்பதாகவும் பேசியதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் நிரபராதி என்று அறிவித்து வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட தங்களை அவதூறாகப் பேசியதாக, ஹாத்ரஸில் எம்.பி., எம்எல்ஏக்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றத்தில், ராகுலுக்கு எதிராக ரவி உள்ளிட்ட மூவர் புகார் மனு அளித்தனர். இந்த மனு மீதான விசாரணையின்போது ராகுலுக்கு சம்மன் அளிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து வாதங்கள் நடைபெற்ற நிலையில், அடுத்த விசாரணையை மே 13-க்கு நீதிமன்றம் ஒத்திவைத்ததாக புகார்தாரர்களின் வழக்குரைஞர் முன்னா சிங் புண்டிர் சனிக்கிழமை தெரிவித்தார்.

## ஏழு வயதில் இரட்டை உலக சாதனை!




**புதுடெல்லி, மே 4:**

இந்தியா-இலங்கை இடையிலான பாக் நீரிணையை நீந்திக் கடந்து உலக சாதனை படைத்த ஏழு வயதுச் சிறுவன் இஷாங்க் சிங். ஜார்க்கண்டைச் சேர்ந்த இஷாங்க், அண்மையில் இலங்கையின் தலைமன்னாரில் நீந்தத் தொடங்கி தமிழகத்தின் தனுஷ்கோடியை வந்தடைந்தார். சுமார் 29 கி.மீ. தொலைவுள்ள இந்த பாக் நீரிணைப் பகுதியை 9 மணி நேரம் 50 நிமிஷங்களில் இஷாங்க் நீந்திக் கடந்தார். பாக் நீரிணையை மிகக் குறைவான வயதில் மிக வேகமாக கடந்து இரட்டை உலக சாதனையைப் படைத்துள்ளார் இச்சிறுவன்.

## ஜபல்பூர் படகு விபத்து வீடியோவில் அதிர்ச்சி தகவல்: லைப் ஜாக்கெட் அணியாததே உயிரிழப்புக்கு காரணம்

**போபால், மே 4:**

மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூர் மாவட்டத்திலுள்ள பார்கி அணையில் 3 நாட்களுக்கு முன்பு படகில் சுற்றுலா சென்றபோது பலத்த காற்று வீசியதில் படகு கவிழ்ந்தது. இதில், தமிழகத்தைச் சேர்ந்த 5 பேர் உட்பட சுற்றுலாப் பயணிகள் 9 பேர் உயிரிழந்தனர். 28 பேர் மீட்கப்பட்டனர்.

இது தொடர்பாக புதிய வீடியோ ஒன்று வெளியாகியுள்ளது. இதன் மூலம், படகுப் பயணங்களின்போது செய்ய வேண்டிய அடிப்படை விதிகளைக் கூட அந்தப் படகை இயக்கிய ஊழியர்கள் பின்பற்றவில்லை என்று தெரிய வந்துள்ளது. இந்த விபத்தில் தனது குழந்தையை மார்போடு இறுக அணைத்தபடி தாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். இந்தக் காட்சி கல்நெஞ்சங்களையும் உருக்குவதாக அமைந்துள்ளது.

மேலும், அந்த வீடியோவில் சீல் கூட பிரிக்கப்படாத உயிர் காக்கும் லைப் ஜாக்கெட்டுகள் இருப்பது தெரிய வந்துள்ளது. உயிரைக் காக்க உதவும் லைப்-ஜாக்கெட்டுகளைப் பயணிகளுக்கு படகு ஊழியர்கள் வழங்கவில்லை.

வீடியோவில் சுற்றுலாப் பயணிகள் உயிர் பயத்தில் கூச்சலிடுவதும், தப்பிக்க முயல்வதும் தெரிகிறது. படகில் தண்ணீர் புகுந்த பிறகு அவசர அவசரமாக கட்டி வைத்திருந்த லைப் ஜாக்கெட்டுகளை அவிழ்த்து பயணிகளுக்கு வழங்குவது பதிவாகி உள்ளது. பயணிகள் பலர் லைப் ஜாக்கெட்டுகள் அணியாமல் அலறுவதும் தெரிகிறது.

## பல நூறு கோடி மதிப்பில் வங்கி மோசடியில் ஈடுபட்ட நபரை இந்தியா அழைத்து வந்தது சிபிஐ

**புதுடெல்லி, மே 4:**

ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) உட்பட பல நாடுகளில் ஏற்றுமதி தொழில் செய்து வந்தவர் கமலேஷ் பரேக். இவர் எஸ்பிஐ தலைமையிலான பல வங்கிகளில் பல நூறு கோடி கடன் பெற்று, அதை முறைகேடான வழியில் வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் மாற்றியுள்ளார். அதன்பின் அவர் யுஏஇ தப்பிச் சென்றார்.

இவர் மீது நிதி மோசடி வழக்குப் பதிவு செய்த சிபிஐ, இவரை கைது செய்ய இன்டர்போலுக்கு ரெட் நோட்டீஸ் அனுப்பியது. இதையடுத்து பரேக்கை அமீரக அதிகாரிகள் கைது செய்தனர்.

யுஏஇ உடனான குற்றவாளிகளைப் பரிமாறிக் கொள்ளும் ஒப்பந்தப்படி அவர் சிபிஐ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். நேற்று முன்தினம் டெல்லி அழைத்து வரப்பட்ட பரேக்கை, சிபிஐ அதிகாரிகள் காவலில் எடுத்து விசாரித்து வருகின்றனர்.

## படகு கவிழ்ந்து விபத்து - 2 பேர் உயிரிழப்பு

**பாரிஸ், மே 4:**

பிரான்ஸ் நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள ஹார்டிலாட் கடற்கரையில் இருந்து நேற்று இரவு படகு ஒன்று 82 அகதிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. அவர்கள் ஆங்கில கால்வாய் வழியாக இங்கிலாந்து செல்ல திட்டமிட்டிருந்தனர்.

இந்நிலையில், அந்த கடலில் சில கிலோ மீட்டர்கள் தூரம் சென்ற பிறகு, திடீரென ராட்சத அலைகளில் சிக்கி படகு கவிழ்ந்தது. இதனிடையே, பிரான்ஸ் கடற்படை காவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த அகதிகளை காப்பாற்றினர்.

இந்த சம்பவத்தில் 2 பேர் உயிரிழந்த நிலையில், 16 பேர் படுகாயம் அடைந்தனர். மீட்கப்பட்ட அனைவரையும் பிரான்ஸ் கடற்படையினர் பத்திரமாக அழைத்து வந்தனர். கடந்த ஒரு மாதத்தில் ஆங்கில கால்வாய் வழியாக இங்கிலாந்து செல்ல முயன்ற அகதிகள் படகு விபத்தில் சிக்கியிருப்பது இத்துடன் மூன்றாவது சம்பவம் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரேசிலில் கனமழை, வெள்ளம் - 6 பேர் பலி

**பிரேசிலா, மே 4:**

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு பிரேசில். இந்நாட்டின் பெர்னம்புகோ, பரைபா ஆகிய மாகாணங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில், கனமழை காரணமாக ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், கனமழையால் பல நகரங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

கனமழையால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 6 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், பலர் காயமடைந்தனர். வெள்ளப்பெருக்கு காரணமாக ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். கனமழை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## சூடான்: துணை ராணுவம் நடத்திய டிரோன் தாக்குதலில் பொதுமக்கள் 5 பேர் பலி



**கார்டூமின், மே 4:**

வடக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு சூடான். அந்நாட்டில் கடந்த 2021-ம் ஆண்டு ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. இந்த ஆட்சியின் தலைவராக ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் செயல்பட்டு வருகிறார்.

அவருக்கு அடுத்த நிலையில் ஆட்சியின் துணைத்தலைவராக துணை ராணுவப்படையின் தளபதியான ஜெனரல் முகமது ஹம்டன் டகலோ செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, துணை ராணுவத்தின் படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை ராணுவத்துடன் இணைக்க ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் முயற்சி மேற்கொண்டார். இதற்கு துணை ராணுவப்படையின் அதிவிரைவு ஆதரவு படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது.

இதனால், ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே கடந்த 2023ம் ஆண்டு ஏப்ரல் 15ம் தேதி முதல் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. துணை ராணுவம் கட்டுப்பாட்டில் இருந்த தலைநகர் கார்டூமினை கடந்த மார்ச் மாதம் ராணுவம் கைப்பற்றியது. அதேவேளை, ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே தொடர்ந்து மோதல் நீடித்து வருகிறது. இந்த மோதலில் அப்பாவி பொதுமக்களும் உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில், தலைநகர் கார்டூமின் அருகே உள்ள ஜிபல் அவ்லியா பகுதியில் பொதுமக்களை குறிவைத்து நேற்று துணை ராணுவப்படையினர் டிரோன் தாக்குதல் நடத்தினர். இந்த டிரோன் தாக்குதலில் பொதுமக்கள் 5 பேர் உயிரிழந்தனர்.

# நாங்கள் இந்தியாவைப் போல் இல்லை; எரிபொருள் வளத்தில் நிலைமை மோசம் - பாகிஸ்தான் அமைச்சர் ஒப்புதல்

**இஸ்லாமாபாத், மே 4:**

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் போர் பதற்றம் காரணமாகப் பாகிஸ்தானில் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்நிலையில் பாகிஸ்தானின் சமா டிவிக்கு அளித்த பேட்டி பாகிஸ்தான் அமைச்சர் அலி பெர்வேஸ் மாலிக் கூறியதாவது:

எரிபொருள் வளத்தில் பாகிஸ்தான் நிலைமை மோசமாகவே இருக்கிறது. பாகிஸ்தானிடம் தற்போது அவசர கால (போர்) தேவைக்கான எரிபொருள் இருப்பு ஒரு நாள் கூட கிடையாது என்பதே உண்மை. எங்களிடம் இருப்பது வணிக ரீதியான இருப்பு மட்டுமே.

கச்சா எண்ணெய் 5 முதல் 7 நாட்களுக்கு மட்டுமே வரும். எண்ணெய் நிறுவனங்களிடம் உள்ள சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் அதிகபட்சம் 20 முதல் 21 நாட்களுக்கு மட்டுமே



இருக்கும்.

நாங்கள் இந்தியாவைப் போன்றவர்கள் அல்ல. இந்தியாவோ 70 நாட்களுக்குத் தேவையான எரிபொருளைச் சேமித்து வைத்துள்ளது.

அங்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டால், ஒரு கையெழுத்தில் அந்த இருப்பை வெளியிட்டு அவர்களால் நிலைமையைச் சீர் செய்ய முடியும். நீண்ட காலத்துக்கு எரிபொருள் தேவையைச் சமாளிக்க இயலும். ஆனால், பாகிஸ்தான் எளிதில் நிலைகுலையும் நிலையில் உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.


மேலும் ஈரான் புரட்சிகர காவல்படையின் கடற்படை தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில், ஈரானின் உச்சதலைவர் மொஜ்தபா காமேனியின் வரலாற்று சிறப்புமிக்க வழிகாட்டுதலின் அடிப்படையில் பாரசீக வளைகுடாவின் புதிய நிர்வாகத்தை நிர்வகிக்கும் சமன்பாடுகளும் விதிகளும் வகுக்கப்பட்டுள்ளன. அவை விரைவில் அமல்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளது.

## மியான்மரில் மீண்டும் நிலநடுக்கம்; ரிக்டர் அளவில் 3.5 ஆக பதிவு

**நேபிடா, மே 4:**

மியான்மர் நாட்டில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 28-ந்தேதி ரிக்டர் 7.7 மற்றும் ரிக்டர் 6.4 அளவில் அடுத்தடுத்து பயங்கர நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இதனால் அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் பலத்த சேதம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தில் சுமார் 3,700 பேர் உயிரிழந்ததாகவும், 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் படுகாயமடைந்ததாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்தது.

இதனை தொடர்ந்து மியான்மரில் அவ்வப்போது சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த வகையில், மியான்மரில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 11.51 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட




இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.5 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

க்ஷ70 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 22.064 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 94.565 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

முன்னதாக, மியான்மரில் நேற்று காலை 1.42 மணியளவில் ரிக்டர் 3.8 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## போரை முடிவுக்கு கொண்டு வர 14 அம்ச கோரிக்கை வைத்த ஈரான்...பரிசீலனை செய்வதாக டிரம்ப் தகவல்

**வாஷிங்டன், மே 4:**

அணுசக்தி விவகாரத்தில் ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து தொடங்கிய போரில் தற்போது தற்காலிக சண்டை நிறுத்தம் அமலில் உள்ளது.

அணுசக்தி தொடர்பாக அமெரிக்கா-ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடப்பதில் இழுபறி நீடிப்பதால் போரை முடிவுக்கு கொண்டு வருவதில் சிக்கல் நிலவுகிறது.

இதற்கிடையே நிரந்தர போர் நிறுத்தத்துக்கு ஈரான் புதிய சமரச திட்டத்தை பாகிஸ்தான் மூலம் அமெரிக்காவிடம் வழங்கியது. ஆனால் இந்த சமரச திட்டத்தில் தனக்கு திருப்தி இல்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஈரான் அளித்த சமரச திட்டம் தொடர்பாக புதிய தகவல் வெளியாகி உள்ளது. அதில் ஈரான் 14 முன்மொழிவுகளை தெரிவித்து இருக்கிறது.

அதில், முக்கியமானவை

* லெபனான் உள்பட அனைத்து முனைகளிலும் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

*கடற்படை முற்றுகையை நீக்க வேண்டும்.

* அமெரிக்க படைகளை உடனடியாக திரும்ப பெற



வேண்டும்.

* ஹார்முஸ் ஜலசந்திக்கு ஒரு புதிய நிர்வாக அமைப்பை நிறுவ வேண்டும்.

*ஈரான் மீதான தடைகளை நீக்க வேண்டும்.

*முடக்கப்பட்ட ஈரானிய சொத்துக்களை விடுவிக்க வேண்டும்.

* ஈரானுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட அம்சங்கள் இடம் பெற்று உள்ளன. மேலும் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க 30 நாள் காலக்கெடுவை ஈரான் வலியுறுத்தி உள்ளது.

ஈரான் அளித்த சமரச திட்டத்தில் திருப்தி இல்லை என்று டிரம்ப் தெரிவித்திருந்த நிலையில் தற்போது அதை பரிசீலனை செய்ய உள்ளதாக அறிவித்து உள்ளார்.

இதுதொடர்பாக டிரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

ஈரான் தற்போது எங்களுக்கு அனுப்பியுள்ள சமரசதிட்டத்தை நான் விரைவில் ஆய்வு செய்ய உள்ளேன். ஆனால், கடந்த 47 ஆண்டுகளில் மனிதகுலத்திற்கும் உலகிற்கும் எதிராக அவர்கள் செய்த செயல்களுக்கு இன்னும் போதுமான அளவு பெரிய விலையை அவர்கள் செலுத்தாத நிலையில், அத்திட்டம் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்கும் என்று என்னால் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை என அதில் கூறியுள்ளார்.

## ஈரானிலிருந்து திரும்பும் வழியிலேயே கியூபாவைக் கைப்பற்றலாம்: டிரம்ப் பேச்சு!

**வாஷிங்டன், மே 4:**

கியூபாவுடனான பதற்றத்துக்கு மத்தியில் டிரம்ப்பின் நகைச்சுவையான பேச்சுகள் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றன.



வாஷிங்டனில் உள்ள பாம் கடற்கரை ஃபோரம் கிளப் நடத்திய ஒரு நிகழ்வில் டிரம்ப் பேசுகையில், “கியூபாவுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன.

யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன் விமானம் தாங்கி போர்க்கப்பல் கியூபாவில் இருந்து சுமார் 100 யார்டுகள் தொலைவில்தான் நின்றுவிடும். அவர்கள் நன்றி, தோல்வியை ஒப்புக்கொள்கிறோம் என்று கூறிவிடுவார்கள்” என்றார்.

கியூபா அரசாங்கத்தில் தலைமையை மாற்றுவதற்காக அழுத்தம் கொடுக்கும் வகையில் டிரம்ப் நிர்வாகம் ஈடுபட்டு வருகிறது.

தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், கியூபாவுக்கு எதிராக அமெரிக்கா ராணுவ நடவடிக்கை எடுக்கும் என்று டிரம்ப் மீண்டும் மீண்டும் எச்சரித்துள்ளார்.

கியூபாவின் பாதுகாப்பு எந்திரத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், எரிசக்தி, சுரங்கம், நிதிச் சேவை மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளை குறிவைத்து தடைகளை விரிவுப்படுத்தும் நிர்வாக உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்டதாக கூறப்படுகிறது. மேலும், விரைவில் கியூபா மீது அமெரிக்க தாக்குதல் நடத்த டிரம்ப் சூசகமாகத் தெரிவித்திருப்பது உலகளவில் பதற்றத்தை அதிகரித்திருக்கிறது.

## அரசின் முன் அனுமதி இல்லாமல் முதலீடு: 10% சீனப் பங்குள்ள வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி



சீனா மற்றும் ஹாங்காங்கை சேர்ந்த பங்குதாரர்களின் பங்குகளில் 10 சதவீதம் வரை வைத்திருக்கும் வெளிநாட்டு நிறுவனங்கள், மத்திய அரசு அல்லது ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல் நேரடியாக இந்தியாவில் முதலீடு செய்ய அனுமதிக்கும் நடைமுறை மே 1 முதல் அமலுக்கு வந்துள்ளது.

அந்நிய செலாவணி மேலாண்மை சட்ட விதிகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை மத்திய நிதியமைச்சகம் சனிக்கிழமை அதிகாரபூர்வமாக அறிவித்ததன் மூலம், இந்த நடைமுறை அமலுக்கு வந்துள்ளது.

முன்பு இந்தியாவுடன் நில எல்லைகளைப் பகிர்ந்துகொள்ளும் நாடுகளைச் சேர்ந்த பங்குதாரர்கள் வெளிநாட்டு நிறுவனங்களில் ஒரே ஒரு பங்கை வைத்திருந்தாலும், அந்த நிறுவனங்கள் இந்தியாவின் எந்தவொரு துறையிலும் முதலீடு செய்ய மத்திய அரசு அல்லது ரிசர்வ் வங்கியிடம் கட்டாயம் முன் அனுமதி பெற வேண்டும். இந்நிலையில், தற்போது சீனா மற்றும் ஹாங்காங்கை சேர்ந்த பங்குதாரர்களின் பங்குகளில் 10 சதவீதம் வரை வைத்திருக்கும் வெளிநாட்டு நிறுவனங்கள், மத்திய அரசு அல்லது ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல் நேரடியாக இந்தியாவில் முதலீடு செய்யலாம்.

அந்நிய நேரடி முதலீட்டில் தளர்த்தப்பட்டுள்ள இந்த விதிகள் சீனா, ஹாங்காங் அல்லது இந்தியாவுடன் நில எல்லைகளை பகிர்ந்துகொள்ளும் பிற நாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்தாது. அங்கு பதிவு செய்யப்படாத வெளிநாட்டு நிறுவனங்கள்தான் முன் அனுமதி இல்லாமல் நேரடியாக இந்தியாவில் முதலீடு செய்யலாம்.

சீனா, பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம், பூடான், மியான்மர், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் இந்தியாவுடன் நில எல்லையைப் பகிர்ந்துள்ளன.

# லாஸ் ஏஞ்சல்ஸ் மேயர் தேர்தலில் போட்டியிடும் நித்யா ராமன்

**லாஸ் ஏஞ்சல்ஸ், மே 4:**

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மேயர் தேர்தல் ஜூன் 2-ம் தேதி நடைபெறுகிறது. இதில் போட்டியிடும் நித்யா ராமன், தற்போதைய மேயர் கரேன் பாஸுக்கு கடும் சவாலாக உருவெடுத்துள்ளார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நித்யா ராமன். வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு 60 சதவீதம் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது.



கேரளாவைச் சேர்ந்த தமிழ் குடும்பத்தில் 1981-ல் பிறந்தவர்தான் நித்யா ராமன். இவருக்கு 6 வயது இருக்கும்போது, பெற்றோர் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தனர். ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் அரசியல் கோட்பாடும், மசாசூசட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் நகரத் திட்டமிடலும் பயின்றார். இவர் ஒரு காலத்தில் சென்னைக்குத் திரும்பி, துப்புரவு மற்றும் சுகாதார மேம்பாட்டுக்காக ஒரு ஆராய்ச்சி நிறுவனத்தைத் தொடங்கினார்.

கடந்த 2013-ல் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் குடியேறிய இவர், வீடு இல்லாதவர்களுக்காக செலா (SELAH) என்ற அமைப்பைத் தொடங்கினார். மேலும், ‘மீ டூ’ இயக்கத்துடன் தொடர்புடைய ‘டைம்ஸ் அப் என்டர்டெய்ன்மென்ட்’ அமைப்பிலும் பணியாற்றினார்.

கடந்த 2020-ல் ஹிலாரி கிளிண்டன் போன்ற ஜாம்பவான்களின் ஆதரவு பெற்ற ஒருவரைத் தோற்கடித்து, லாஸ் ஏஞ்சல்ஸ் நகர சபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தெற்காசியப் பெண் என்ற சாதனையைப் படைத்தார் நித்யா ராமன். இந்நிலையில், அடுத்த மாதம் நடைபெற உள்ள தேர்தலில் மேயர் பதவிக்கு போட்டியிடுவதற்காக கடைசி நேரத்தில் (பிப்.7-ம் தேதி) மனுத்தாக்கல் செய்தார்.

அடுத்த ‘மம்தானி’: இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஜோரான் மம்தானி கடந்த ஆண்டு நடந்த நியூயார்க் மேயர் தேர்தலில் வெற்றி பெற்று வரலாற்று சாதனை படைத்தார். இந்நிலையில், மம்தானியைப் போல நித்யா ராமனும் லாஸ் ஏஞ்சல்ஸ் அரசியலில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகர மேயர் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் மேயர் பாஸை ஆதரிப்பதாக முதலில் கூறிய நித்யா ராமன், இப்போது அவருக்கு எதிராகப் போட்டியிடுவதால், ‘அரசியல் துரோகி’ என்று சில அமைப்புகள் இவரை விமர்சிக்கின்றன.

ஆனால், ‘இது நட்பு சார்ந்தது அல்ல, நகரின் எதிர்காலம் மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பது சார்ந்தது’ என்று நித்யா பதிலடி கொடுத்துள்ளார்.

# 5 மாநிலங்களில் இன்று வாக்கு எண்ணிக்கை



## ‘27 திட்டங்களை நடப்பாண்டு செயல்படுத்த இஸ்ரோ திட்டம்’

## 2025-26ல் வெளிநாட்டு இருப்பில் இருந்து இந்தியாவுக்கு வந்த 168 டன் தங்கம்

## அக்னி நட்சத்திரம் இன்று தொடக்கம்: பொதுமக்களுக்கு எச்சரிக்கை

## போரை முடிவுக்கு கொண்டு வர 14 அம்ச கோரிக்கை வைத்த ஈரான்


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

04.05.2026திங்கட்கிழமை

இலவச இ–பேப்பர்